விலை 30/-
Muhavary.com


ISSN: 2478-0766



# புதிய முகவரி

## PUTHIYA MUHAVARY

மாதாந்த சஞ்சிகை | எண் 18 | பாதை 1 வைகாசி 2016




நன்றி: தினக்குரல் - 05.07.2016

# மாங்குளம், ஓமந்தை, தாண்டிக்குளம், வவுனியா, மதவாச்சி... மதவாச்சி... மதவாச்சி...


0777549803
இலங்கை வேந்தன்
கலைக் கல்லூரி
அரங்கேற்றம், கூட்டம்,
ஒன்றுகூடல், திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா,
பிறந்தநாள் கொண்டாட்டம்,
மற்றும் பொது வைபவங்களுக்கும்
உங்கள் வசதிக்கேற்ப
மண்டப ஒழுங்கு செய்து தரப்படும்.
63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


ANDRA
PRINTERS
Hoarding
Digital Name Boards
Light Boards
Digital Banners
Tel: 021 221 7279 | 077 6622981
Address: 356, Kasthooriyar Road, Jaffna.


ERIC GANESH
OPTICALS
Head office:
566, Hospital Road, Jaffna.
021 222 2486
Branches:
107, K.K.S Road, Chunnakam.
021 224 0255
K.K.S. Road, Kokkuvil.
021 222 5233

புதிய
முகவரி
PUTHIYA MUHAVARY

**Editor in Chief**
A.Vijayakrishnan

**Editor**
V.Jeyaratnam

**Advisory Board**
Dr.V.Ameerdeen
Mr.A.Panchalingam
Mr.A.Sathyamoorthy
Dr.(Mrs)S.Thirumagal
Dr.S.Nanthakumar
Prof.V.P.Sivanathan

**Bureau Chief**
S.P.Bala

**Advertisements**
R.Achuthapakan

**Layout & Design**
Mrs. S.Mariyaseeli

**Contact**
Canadian Academy of Professional Studies (CAPS)
52, Palaly Road,
Thirunelvely,
Jaffna.
Sri Lanka.
E Mail: spbmukunthan@gmail.com
Tel : 021 205 2240
Fax : 021 205 2240
Web:

The **Puthiya Muhavary** an Entertainment Magazine is being published by us as Fortnight Magazine. Actually the Object of the magazine is to uplift knowledge of the Tamil People. (Students, Youth, Women and Elders) The Contents of the Magazine are Culture, Fine arts, History, Political, Agriculture, Fisheries, New Technologies and uplifting the relations between Tamil and Sinhala people, Based on Languages, Culture, Religion and other mutual understandings.

The Opinions and views Expressed in this Magazine is those of the author and not of the Publisher. Advertisers are completely responsible for the contents of the advertisement and **Puthiya Muhavary** Reserves the right to refuse to publish any article or advertisement considered unsuitable for publication. All rights reserved and the contents may be reproduced with written permission from the publisher, In Spite of the author's Professional capacity no contents of **Puthiya Muhavary** Should be considered as Professional advice. Neither the Publisher nor **Puthiya Muhavary** is responsible for any claims or action damage that the reader may have through reliance on the contents of the magazine including advertisement.

# இன்னலை அகற்றி இன்புறுவோம் !

இலங்கைத்தமிழர்பிரச்சினை ஒருதீராதபிரச்சினை என்றநிலைக்குவந்து இதனைஓர் உதாரணமாக உலகநாடுகள் பின்பற்றிவிடுமோ என்ற உணர்வு எல்லோரிடமும் காணப்படுகின்றது. பிரச்சினை எங்குள்ளதோ அதனை இனம் கண்டு, பகுத்தாராய்ந்து, இருபக்கம் சாரா்மல் எது சரியாக இருக்கும் என முடிவெடுப்பதே நீண்ட ஆயுளைக் கொண்ட தீர்வாக அமையும். மாறாக ஒரு தரப்பை திருப்திப்படுத்த எடுக்கும் தீர்வு அற்ப ஆயுசுடன் முடிவடையவே வழிவகுக்கும் . கடந்த காலங்களில் 30 வருட அஹிம்சைப் போராட்டமாக இருந்தாலென்ன, அதன் பின் ஆயுதப்போராட்டமாக இருந்தாலென்ன இதுதான் எமது இலக்கு, உங்கள் தீர்வு என்ன? எனக் கோரியே தமிழர் போராட்டம் நடத்தினார்கள்.


இரு நாடுகளுக்கிடையே இடம்பெறும் யுத்தம் போல் வான், கடல், தரை என இரு கட்டுப்பாட்டு பிரதேசங்களிடையே போர் நடைபெற்றது. இறுதியில் 2009 இல் ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற **"பிரபாகரன் கேட்டதை நீங்கள் கேட்கமுடியாது"** என மகிந்த கூறினார். இதிலிருந்து வலிமையான நிலையில் இருந்த பேரம்பேசுதலின் ஆற்றல் தற்போது வலிமையில்லாமல் **"நீங்கள் கேட்க முடியாது"** என்றாகி விட்டது.

1985களில் இருந்து ஆயுதப் போராளிகள் பேச்சுவார்த்தை மேடைகளில் அலங்கரிக்கப்பட்டார்கள். 1987 இல் தனியே புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்கு அழைத்து இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்கும்படி கூறி ஆயுதங்களை கையளிக்க வைத்தார்கள்.

இந்தியா – புலிகளுக்கிடையிலான போர் ஆரம்பமாகி பின் 1990 களிலிருந்து புலியும் இலங்கை அரசும் மோதல்கள் ஆரம்பித்தபோது அது பிராந்திய யுத்தமாக மாறியது. அவ்வப்போது புலிகளுடனான பேச்சு வார்த்தையின்பின் **யுத்தம்** என்ற நிலையில் இருந்து வந்தது. 2002 இல் ரணில் – பிரபா ஒப்பந்தம் என நோர்வேயை உள்நுழைத்து பேச்சுவார்த்தையை மேற்கொண்டனர். பேசித்தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை தீர்க்காமல் மீண்டும் மீண்டும் யுத்தம் திணிக்கப்பட்டது. மக்கள் அவலம் தாங்கிக் கொள்ள முடியாதவாறு 2009 இறுதி வரை இந்நிலை நீடித்தது.


இலங்கைதனக்கென ஒரு நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கு, சிங்கள பௌத்த மேலாதிக்கமும், சர்வதேசமும் தடைபோட்டன. அமெரிக்கா ரணில் அரசை காப்பற்றவும், ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்தவும், படாதபாடுபடுகின்றது. இந்தியாவோ தமிழர் நலனில் அக்கறை காட்டாது தமது **பிராந்திய பாதுகாப்பை** மேலாகப் பார்க்கின்றது.

இங்கே பாதிக்கப்படுவது தமிழ் பொது மக்கள் என்பதை அனைவரும் மறந்து விடுகின்றார்கள். இலங்கை அரசை காப்பாற்றி தமிழ் மக்களுக்கு ஏதாவது கொடுத்து சமாளிக்கும் யுக்திதான் இப்போது இடம் பெறுகின்றது. **பிரபாகரன் இருக்கும்போது தீர்வு இருக்காது அவர் ஒன்றுக்கும் இணங்கமாட்டார்** என்று கூறியவர்கள் இன்று அவர் இல்லாத சூழலில் கொடுப்பதை கொடுத்து ஆசியாவின் ஆச்சரியமான நாடாக இலங்கையை கொண்டுவர நல்லாட்சி அரசு ஏற்பாடுகளைச் செய்யுமாக இருந்தால் இச்சிங்களத் தலைவர்கள் வரலாற்றின் நாயகர்களாகக் கணிக்கப்படுவார்கள்.




நன்றி: அமித ஆட்டிக்கல

# வியட்நாம் மீண்டும் ஒரு ஏப்ரல் 29 - 1975 ஐச் சந்திக்குமா....?


பராக் ஒபாமா


கிளின்ரன்

மூலதனத் திரட்சியை குறிப்பிட்ட சிலரிடம் மட்டும் அனுமதிக்காத சோசலிசக் கொள்கை சோசலிச நாடுகளை வளம் மிக்க முதல்தர நாடுபோல் வெகு சீக்கிரத்தில் உருவாக்கிவிட அனுமதிக்காது. கூடவே தேசத்தின் வளங்கள் எல்லா மக்களுக்கும் சமமாக பகிரும் போக்கும் வசதியான வாழ்வை மினுமினுப்பாக - பகட்டாகாட்டாமல் நிறைவான வாழ்வைச் சகலருக்கும் என்பதை நிறுவி நிற்கமுயலும்.

சோசலிசநாட்டின் இயல்பான வளர்ச்சியைத் 'தடா' போட்டு தடைசெய்யும் முதலாளித்துவ அமெரிக்க ஏகாதிபத்தியத்தினமும், அதற்குச் "செம்புதூக்கும்" நாடுகளின் நடவடிக்கைகளை எதிர்கொண்டு நீச்சல் போடுவது என்பது இலகுவான பயணமும் அல்ல.

ஆளானப்பட்ட சோவியத் ஒன்றியத்திற்கே இதற்கு எதிராகத் தாக்குப் பிடிப்பது என்பது கடினமாக இருந்த போது கிட்டத்தட்ட சோவியத்தின் உருவாகத்திற்கு 58 வருடங்களின் பின்பு உருவான வியட்நாம் தன்னை நிலை நிறுத்தி எழுந்து நிற்பதற்கு இன்னும் எவ்வளவோ காலங்கள் தேவை. உலகில் முதலாளித்துவம் - கம்யூனிசம் என்று இரு தத்துவங்களே மனிதகுல வரலாற்றை உருவாக்க தமக்குள் பங்கு போட சண்டையிடுகின்றன. முதலாளித்துவதிலிருந்து கம்யூனிசத்தை நோக்கிய நகர்வில் இடையிட்ட காலம் சோசலிசக் காலகட்டம் ஆகும்.

இந்தச் சமுதாய மாற்றத்திற்கான காலகட்டம் என்னவோ ஓரிரு வருடங்கள் அல்ல. இது ஒரு படிநிலை மாற்றங்களினூடு தசாப்தங்களாக பயணித்தே முழுமை பெற்றிடும் செயற்பாடு ஆகும். ஒரு சிலரின் கைகளில் மட்டும் தேங்கியிருக்கும் மூலதனத்தை தேசத்தின் வளங்களை தேசத்தின் உடமையாக்கிச் சகலருக்கும் ஒரே மாதிரியாக கிடைக்க வகை செய்யும் போக்கு என்பது வெறும் பேப்பரில் எழுதுதல் - **சட்டம் இயற்றுதல் என்பனவற்றிற்கு அப்பால் ஒரு மனித உணர்வு மாற்றத்தினூடாகவே சமூகமாற்றமாக உருவெடுத்து தன்னிறைவை அடையும்.**

**ஒரு சிலரிடம் திரண்டிருக்கும் மூலதனத்தை எல்லாமக்களுக்கும் பகிருதல் என்பதற்கு எதிராக இந்த முதலாளிகள் இறுதி வரை தம்மால் முடிந்தளவிற்கு இந்த மனித குலத்தை அழிக்கவும் தயங்காதயுத்தங்களைச்செய்வர். செய்தார்கள்என்பதே வரலாறு இந்த வரலாற்றை நாம் வியட்நாமிலும் கண்டோம்.**

1975 ஏப்பரல் மாதம் 29 வியட்நாம் கம்யூனிஸ்ட் போராளிகளிடம் அமெரிக்க படைகள் சரணடைந்து இறுதியாக அமெரிக்க ராஜதந்திரிகள் தங்கியிருந்த கூரையில் உலங்குவானூர்தி தாளப்பறந்து அமெரிக்கர்கள் தப்பிச்செல்லும் வரை வியட்நாம் மக்களுக்கு அமெரிக்க அரசு அழிவை ஏற்படுத்திக் கொண்டது என்றால் பாருங்களேன்.

இதே மாதிரியான வரலாறு முலாளித்துவத்திற்கு எதிராக போராடி வெற்றியடைந்த பல நாடுகளுக்கும் பொருந்தும். வட வியட்நாமின் வெற்றியை அடுத்து 1976 ஆம் ஆண்டு தென்வியட்நாமுடன் இணைந்து உருவாக்கப் பட்டதே வியட்நாம் என்ற சோசலிஸ நாடு.

உலகின் முதலாவது சோசலிச நாடாக சோவி யத் யூனியன் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து உலகில் பல்வேறு சோசலிச நாடுகள் உருவாகி அடையாளப்படுத்தப்பட்டன. இவற்றில் சீனாவைத் தொடர்ந்து வியட்நாம் - கியூபா என்ற இரு நாடுகளுமே அதிகம் உலக மக்களால் அறியப்பட்டநாடுகளாக இருந்தன.



சோவியத்யூனியனில் ஏற்பட்ட சோசலிச முன்னெடுப்பு இரண்டாம் உலகப்போரின் முடிவில் பல சோசலிசநாடுகளை உருவாக்கியிருந்தது. இதேபோல் சீனாவில் **மாவோ சேதுங்** இனால் ஏற்படுத்தப்பட்ட மக்கட் புரட்சி ஆசியப் பிராந்தியத்தில் ஏற்படுத்திய சிந்தனை அலை ஆசியப் பிராந்தியத்தில் பல நாடுளில் சோசலிச புரட்சி முன்னெடுப்புக்களை ஊக்கிவித்தது. சோவியத் யூனியன் - சீனா என்ற இரு நாடுகளிலும் எற்பட்டசோசலிச புரட்சி வியட்நாம் என்ற நாட்டின் புரட்சிக்கு பெரும் தூண்டுதலாக அமைந்தது.


1945 களில் நாஜி ஜேர்மனிக்கு எதிரான போருக்கு முன்னரான சோவியத் யூனியன் பிரித்தானியா-அமெரிக்கக்கூட்டமைப்புபேச்சுவார்த்தையில் வியட்நாமும் ஒரு விடயமாக கருதப்பட்டது இங்கு கவனத்தில் எடுக்கவேண்டிய ஒன்றாகும். இது வியட்நாமின் பூகோள இருப்பிடம் பற்றிய முக்கியத்துவத்தினால் ஏற்பட்டது எனலாம். வியட்நாம் புரட்சியைத் தலைமைதாங்கி **கோ சீ மின்** நடாத்தினார். இவர் தனது போராட்ட காலத்தில் காலத்திற்கு காலம் வியட்நாமிலிருந்து பாதுகாப்பு காரணமாக புலம் பெயர வேண்டியிருந்தது.

## சிவா-ஈஸ்வரமூர்த்தி

இந்த புலம் பெயர்காலத்தில் அவர் சோவியத் யூனியனுக்கும் சென்றிருந்தார். கோசிமினின் தலைமைத்துவத்துடனும், வியட்நாம் மக்களின் வளம் குறைந்த நிலையிலும் வீரம் மிக்க புத்தி சாலித்தனமான போராட்டமும் சர்வதேசங்களிடம் தனது போராட்டத்திற்கான நியாயாதிக்கத்தை பிரச்சாரப்படுத்தியதும்... இவைகளின் கூட்டுப் போராட்டப் பொறி முறையே வியட்நாம் மக்களின் போராட்டம் வெற்றியடைந்ததற்கான காரணிகள் ஆகும். அமெரிக்க மக்களே வியட்நாமில் தமது நாட்டுப் படைகள் வீசிய எரிகுண்டைக் கண்டித்து வீதிகளில் இறங்கி அமெரிக்க அரசுக்கும் படைகளுக்கும் தெரிவித்த எதிர்ப்பும் இதற்கு சமூகப் பிரஞ்ஞை உள்ளபத்திரிகைகள் தகுந்த பிரச்சாரங்களைச் செய்ததும் வியட்நாம் மக்களின் வெற்றிகளுக்கு அடிகோலின.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது படையை "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்று


மாவோ சேதுங்


கோ சி மின்

கொண்டோடி தப்பிக் கொண்டாலும் வியட்நாமின் இருப்பை கேள்விக் குறியாக்கும் பொருளாதாரத்தடைகள் மனித உரிமை மீறல்கள் என்றுகூறிக் கொண்டு தொடர்ந்தும் தமது நேசநாடுகளுடன் இணைந்து செய்துகொண்டே வந்தனர்.

மேலும் வியட்நாமுடன் இராஜதந்திர உறவுகளைத் தடுத்தல் - கடும் பொருளாதாரத் தடைகளை விதித்தல் போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் பெற்ற தோல்விக்குக் கிட்டத்தட்ட 20 வருடங்களின் பின்பு ஜூலை 11 - 1995 இல் அமெரிக்காவின் அன்றைய ஜனாதிபதி பில் கிளிங்ரன் வியட்நாமுடன் இராஜதந்திர உறவை உருவாக்கினார்.

ஆனாலும் தொடர்ந்தும் பொருளாதாரத் தடை தொடர்ந்த வண்ணமே இருந்தது.

தற்போது கிட்டத்தட்ட அடுத்த 20 வருடங்களின் பின்பு மே 24 - 2016 இல் அமெரிக்க மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்கி நேசக்கரம் நீட்டி அமெரிக்க ஜனாதிபதி

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்)

# இரு பெரும் தமிழ் நீதிபதிகள்

ஆசிரியர்
முகவரி,

2013 ஆம் ஆண்டு வடமாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று மாகாண சபையை அமைத்தபோது பத்திரிகைகளில் போடப்பட்ட செய்தி இது. இதனாற்கூட எமது பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படவில்லை.

நான் இங்கு குறிப்பிடுவது நாட்டுப் பிரச்சினையை அல்ல. 1980 களில் யாழ்ப்பாணத்தில் இருந்த ... என்ற தனியார் நிதிக்கம்பனியில் நானும் இன்னும் பலரும் கட்டிய பணம் திரும்பப்பெற முடியாது போனமை பற்றியதே.

இன்று பல நிதிக் கம்பனிகள் யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளன. யார் யார் வருகிறார்கள், போகிறார்கள் என்று எதுவும் தெரிவதில்லை. ஏன் காசு கொடுக்கிறார்கள் எவ்வளவு காசை திரும்ப வாங்குகிறார்கள் என்று எதுவும் மக்களுக்குத் தெளிவாயில்லை.

ஆனால், அரச ஊழியரான நானும் பணத்தை "யாழ்ப்பாணத்தில் வைத்திருந்தால் சிங்கள அரசு எங்கள் பணத்தைச் சுருட்ட வாய்ப்பிருக்காது என நம்பியே .... என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தேன்.

இது விடயத்தில் வடமாகாண சபை வந்ததும் நல்ல முடிவேதும் கிடைக்கும் என நானும் வேறு சிலரும் நம்பினோம். இது பற்றிக் கடிதம் எழுதினால் கூட எந்த ஊடகமும் அதைப் பிரசுரிக்காது இருட்டடிப்புச் செய்து வருகிறது.

தங்களால் வெளியிடப்படும் **புதிய முகவரி** சஞ்சிகை படித்தேன். அதில் மக்களின் பிரச்சினைகள் உரியவாறு அணுகப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கையில் தான் இக்கடிதத்தை உங்கள் சஞ்சிகையில் பிரசுரிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் எழுதுகிறேன். பிரசுரிக்காவிட்டால் நீங்களும் ஊடக தர்மம் இல்லாத ஒரு வர்க்கம் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கும்.

இது விடயத்தில் ஆவணங்கள் எம்மிடம் உள்ளன. வடமாகாண முதல்வர் ஓர் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் மேல்நீதிமன்ற நீதிபதி யாழ். மா.இளஞ்செழியன் அவர்கள் சமூக சீர்திருத்த விடயங்களில் அதிகம் அக்கறை செலுத்தி வருகிறார்.

இவ்விரு நீதிபதிகளும் எமது விடயத்தில் தீர்வு பெற்றுத் தருவார்களா? என்பதே எனதும் என் போன்றவர்களினதும் எதிர்பார்ப்பு. எமது உழைப்பை பகற்கொள்ளைக்காரருக்கு கொடுத்துவிட்டு எங்கள் பிள்ளைகளின் திருமணம், படிப்பு, நல்ல நிம்மதியான வாழ்க்கை என எல்லாவற்றையும் இழந்து நிற்கிறோம். எமது பணத்திற்கான வட்டி கற்பனை பண்ணமுடியாது.

பலர் இவற்றை யோசித்து மன நோயாளிகளாகவும், இறந்தும் விட்டனர். அவர்களின் பிள்ளைகளிடம் நிதி செலுத்தியதற்கான ஆவணங்கள் உள்ளன. எழுத்துமூல ஆவணம் என்பதை விட வேறு என்ன வேண்டும்.

தற்போது நடைபெறும் குற்றச்செயல்களின் போது "புலிகள் இருந்தால் இப்படி நடக்காது" என்று பரவலாக பேசுகிறார்கள். ஆனால் புலிகள் கூட எமது விடயத்தில் நிதி நிறுவனத்தின் பக்கமே சார்ந்திருந்தார்கள் என்பதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்த விடயத்தை வெளியில் கொண்டுவந்து எமக்கு உதவ முன்வருவீர்கள் என்று நம்புகிறேன்.

பணம் கொடுத்து ஏமாற்றப்பட்டவன்

**குறிப்பு:** மேற்படி கடிதத்தில் குறிப்பிட்ட நிதிநிறுவனத்தின் பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது.

# ஏவாக்குண்டுகள்



கொஸ்கம - சாலாவ இராணுவ முகாம்


கொஸ்கம - சாலாவ பகுதியில் எங்கோ வெடிப்பதற்காக வருடக்கணக்கில் காத்திருந்த குண்டுகள் பொறுமையிழந்து தமக்குள் தாமே வெடித்தன. முகாமின் நாலாபுறமும் ஒரு கிலோ மீற்றர் பகுதியை நீறாக்கின. இக்குண்டுகள் துப்பாக்கி அல்லது எறிகணையில் பொருத்தி, அதன் அழிவு எல்லையையும், கொலை வளையத்தையும் பெருப்பிக்கக்கூடியவை.

ஆனால், ஏவப்படாமல் தீப்பற்றி இவ்வளவு சேதம் ஏற்பட்டதாக சிங்கள மக்கள் நேரடியாக உணரமுடிந்தது. இவ்வாறான ஓர் அனுபவம் வடகிழக்கில் வாழ்பவர்களுக்கும் அதன் எல்லைப்புற மக்களுக்குமே ஏற்கனவே தெரிந்திருந்தது.

மே 2009 ஆம் ஆண்டின் பின் இலங்கையில் கேட்ட பாரிய வெடிச் சத்தம் இதுவாகும். 10 கிராமங்கள் எரிந்தும், குடிபெயர்ந்தும், களவு கொடுத்தும் ஒரு நொடியில் அழிந்துபோயிற்று.

05.06.2016 மாலையில் தொடங்கி மறுநாள் மாலை வரை இவ்வெடிப்புக்கள் இடம்பெற்றன. கொழும்பு அவிசாவளை வீதி, முழுமையாக மூடப்பட்டது. நிர்க்கதியான மக்கள் பாடசாலைகளிலும், பன்சாலைகளிலும் தற்காலிகமாக தங்கினர்.

சாலாவ முகாமில் நீர்த்தாங்கி மட்டும் உயரத்தில் இருந்ததால் தப்பியது. மற்றைய எல்லாமே பஸ்பமாகி விட்டது. இது எப்படி நடந்தது என விசாரிப்பதில் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை. இயற்கைக்கும், சொத்துக்களுக்கும் ஏற்பட்ட தீக்காயமே அது. இக் குண்டுகள் தமக்குள் தாமே எரிந்ததே இப்படியென்றால்...



# இராசஜவரோதயம் சம்பந்தன்

**இலங்கையில் ஆட்சி அமைத்த சகல அரசாங்கங்களினதும் தேவைகளுக்காக அரசியல் நடத்தியவர், நடத்துபவர்**

ஒரு நீதிமன்றில் கணவன் மனைவி இருவருக்கிடையிலான மணமுறிவு வழக் கொன்றில்தீர்ப்பு வழங்கும்போது அவர்களுக்கு இருந்த ஒரேயொரு பிள்ளையிடம் நீதிபதி இவ்வாறு கேட்டார்.

**நீதிபதி :** நீ அம்மாவோட போகிறாயா?
**பிள்ளை:** ஆம்
**நீதிபதி :** நீ அப்பாவோட போகிறாயா?
**பிள்ளை:** ஆம்
**நீதிபதி :** நீ அம்மாவுடனும், அப்பாவுடனும் போகி றாயா?
**பிள்ளை::** ஆம்

இந்த நிலையில்தான் இரா. சம்கந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி உள்ளது. எதையும் எதிர்க்காத, அவ்வாறு எதிர்த்தாலும் ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்திவிடாத "அச்சாப் பிள்ளை" பதவி அது. இப் பதவிமூலம் தமிழ ருக்கு என்ன லாபம் என்று பார்த்தால் எதுவுமே இல்லை என்ற முடிவுக்கு வரலாம்.

2015 இல் மைத்திரி - ரணில் அரசு பதவிக்கு வந்தபின் கூட்டமைப்பின்

## அ.விஜயகிருஸ்ணன்

நடவடிக்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டது. அவர்களது ஆதரவாளர்கள் மத்தியில் கடும் விச னத்தை தோற்றுவித்துள்ளது. மகிந்த அரசும், குடாநாட்டில் ஈபிடிபியின் அரசியலும் தினமுரசு பத்திரிகையின் எழுத்துக்களும் கூட்டமைப்பிற்கு ஓர் உந்து சக்தியாக இருந்தது என்பதற்கு அப் பால் தம்மை நியாயப்படுத்தும் ஒரு தளத் தையும் வைத்திருந்தார்கள்.

புதிய அரசு தமிழ்மக்களின் பிரச்சினை களை தாமே நேரடியாக கையாள முற்பட் டது. திரு.சுவாமிநாதன் போன்ற தமிழ் அமைச் சர்கள் தமிழ் மக்களின் மத்தியில் இறங்கி நிற்பது மிகப்பெரிய திண்டாட்டத்தை சம்பந்தன் போன்றோருக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதே விடயத்தை திரு.டக்ளஸ் தேவா னந்தாவும் மேற்கொண்டிருந்தார். ஆனால், அவரது அரசியலுக்கு எதிராக பேசும் தளம் ஒன்றை கூட்டமைப்பினர் கொண்டிருந்தார்கள்.

ஆனால், சுவாமிநாதன் யாழ்ப்பாண உயர் குழாத்தைச் சேர்ந்த, இந்து மத, கல்வி கற்ற, பொருளாதார அரசியல் பலம் மிக்க மனி தராக இருப்பதும், சேர் பொன் இராமநாதனின் பேரனாக இருப்பதும் அவருக்கு எதிராக கூட்ட அமைப்பு எதையும் செய்து வெல்ல முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது.

❊ சம்பூர் அனல்மின்நிலையப் பிரச் சினை
❊ சம்பூர் மீள் குடியேற்றம்
❊ வலிவடக்கு மீள் குடியேற்றம்
❊ 65000 பொருத்து வீடுகள்
❊ சிறைக்கைதிகளின் விடுதலை

போன்ற எதிலுமே கூட்டமைப் பின் கை ஓங்குவதற்கு மைத்திரி - ரணில் அரசு கூட்டமைப்பிற்கு சந்தர்ப் பத்தை வழங்கவில்லை.

குறிப்பாக ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் எப்போது யாழ்ப் பாணம் வருகிறார்கள், போகிறார்கள் என்று தெரியாத அளவிற்கு நிலைமை மாறிவிட்டது. இதுகூட்டமைப்புஅரசியலுக்கு100வீதம்பாதகமான நிகழ்தகவுகளையே கொடுத்திருக்கிறது.

மகிந்த அரசை வீழ்த்துவதற்கு சம்பந்தரின் உதவி பெறப்பட்டது அதற்குப் பின்னர் என்ன என்பதில் சம்பந்தரிடம் பதில் இல்லை.

வெறும் தமிழீழம் என்று வெருட்டும் நிலை முற்றுமுழுதாக மாறிவிட்டது அல்லது சிங்கள ஆட்சியாளர்களால் கண்டுகொள்ளப்படாது அணைந்துவிட்டது. புலிகளின் விடயத்தில் கூட்டமைப்பு

◆ உண்மையான புலிகள் முள்ளிவாய்க்காலில் சயனைட் அடித்துச் செத்துவிட்டார்கள்.
◆ கைதிகள் விடயத்தில் கதைக்கப் போகிறவர்களை ஏன் என்று கூட சம்பந்தனோ ஏனையவர்களோ கண்டுகொள்வதில்லை.
◆ மீண்டும் பலர் கைது செய்யப்படுகின்றர்.
◆ புலிகளின் தலைவர் கூட்டமைப்பை உருவாக்கவில்லை என சம்பந்தர் அடித்துக் கூறு வது

இவை எல்லாமே புலிகள் என்ற நாமம் எங்கு காணப்படுகிறதோ அல்லது அந்தச் சாயல் தெரிகிறதோ அவற்றை இல்லாது செய்வதி லேயே சம்பந்தர் அணி கவனம் செலுத்தி வருகி றது. இதில் மக்களது எதிர்பார்ப்பு பெருமள வில் சரிந்துள்ளது.

இவ்வாறான அணுகுமுறையால் **சம்பந்தன் அரசுடன் ஒத்து ஊதுகிறார்** என்ற நிலையில் எஞ்சியுள்ள புலிகள் கூட்ட மைப்புத் தலைவர்களை கொன்றுவிட வாய்ப்பு இருக்கக்கூடும் என்ற நிலை சமபந்தருக்கும் வேறு சிலருக்கும் ஏற்பட்டுள்ளது.

**சிறையில் உள்ள கைதிகள் விடயத்தில் சந்திக்கப்போனவர்களுடன் முகம்கொடுத்துக் கதைக்காது பத்திரிகை பார்த்த சம்பந்தன் கிளிநொச்சிப் பரவிப்பாஞ்சான் இராணுவ முகா மிற்குள் புகுந்து ரகளை பண்ணியதாக பெரிதுபடுத்தி எங்கோ ஒரு மூலையில் சிங் களவர் பேசியதை ஊதிப் பெருக்க வைத்து மக்கள் மத்தியில் உள்ள தமது சரிவை நிமிர்த்தப்பார்க்கிறார் சம்பந்தன்.**

சம்மந்தன் பரவிப்பாஞ்சானுக்குள் பாய்ந் தது ஒன்றும் அரசுக்கு அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை. வேட்டியுடன் சென்று முகாமை "நிர்மூலமாக்கமாட்டார் என்பது தெளி வான உண்மை. அமிர்தலிங்கம் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது சிறில் மத்தியூ என்பவர் அமிர்தலிங்கத்தை காலி முகத்திடலில் இரண்டாகக் கிழித்தெறியவேண் டும் என்று கூறியதற்கு ஒப்பானதே இது.


**ஒரு விவசாயி போகத்திற்குப் போகம் பயிர்களை மாற்றிச் செய்வதுபோல மே 19 இல் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், நவம்பர் 27 இல் மாவீரர் தினம் என்று குரல் கொடுத்து எங்கோ ஒழித்துநின்று விளக்கேற்றிவிட்டு ஓடி விடும் அரசியல் தொடர்ந்தும் சாத்திய மாகாது.**

மாவீரர் நிகழ்விற்கு விளக்கேற்ற துயிலும் இல்லங்களுக்குள் புகுந்த பாராளுமன்ற உறுப் பினர்கள் சிறிதரன், சிவாஜிலிங்கம் போன்ற தீவிரப் போக்கைக் காட்டிய தலைவர்கள் இரா' ணுவம் துயிலும் இல்லத்தைச் சுற்றி வேலி போட்டபோது அதைத் தடுத்து இராணுவத்தால் சுடப்பட்டிருந்தால் அவர்க ளுக்கு மாவீரர் அந்தஸ்து கிடைத்திருக்கும்.


தாங்கத்துரை – பா.உ

பரவிப்பாஞ்சான் விடயத்திலும் ஒரு சம்பந் தர் இறப்பதன் மூலம் அந்த மக்களுக்கு காணி கிடைக் கும் என்றால் சந்தோஷம் தான். ஆனால், சம்பந்தன் அங்கு செல்வதற்கு முன் இராணுவ உயரதிகா- ரிகளுடன் கலந்து பேசியிருக்கிறார் என்பது பிந்திய செய்திகளாக உள்ளது.

(தொடர்ச்சி 05 ஆம் பக்கம்)



## இராஜவரோதயம்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி....)

மகிந்தவால் விடுவிக்கப்பட்ட புலிகள் மீண்டும் கைது செய்யப்படுவதற்கு தமிழ்த் தலைவர்களின் "தமிழீழம் மட்டும்தான் தீர்வு" என்று முழங்குவதும் தமிழ்நாட்டில் சீமானையும் விஞ்சியதாக ஜெயலலிதாஅம்மையார்தமிழீழத்தை அமைத்துத் தருவேன் என்று தேர்தல் பிரச்சாரத்திற்காக கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். 2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது திருகோணமலை மாவட்டத்தில் சம்பந்தன் தோல்வியுற்றார். **2000 ஆம் ஆண்டில் திருகோணமலை மக்கள் நல்ல தீர்மானம் ஒன்றை எடுத்ததால், சம்பந்தரை ஓரங்கட்டிவிட்டு கிளிவெட்டியைச் சேர்ந்த பாடசாலை அதிபரான தங்கத்துரையை பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தனர்.** அதன் பின் தமிழரசுக் கட்சியின் முக்கிய தூண்களில் ஒருவரான ஈழத்துநாதன் என்பவர் ஊடாக அவரது மைத்துனரான புலிகளின் தளபதி சொர்ணத்திற்கு வழங்கப்பட்ட பிழையான தகவல்கள் மூலம் தங்கத்துரை கொல்லப்பட்டது என்பது திருகோணமலை மக்களுக்கு தெரிந்த இரகசியமாகும்.

**திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு.இராஜவரோதயம். இவர் திருகோணமலை மக்களால் நன்கு மதிக்கப்பட்டவர். ஆனால் சம்பந்தனின் தந்தையார் அவரல்ல என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சம்பந்தனின் தந்தையார் வில்லூண்டி இராசவரோதயம் என அழைக்கப்படுபவர்.**

1995 இல் சந்திரிகா ஜனாதியான பின்னர் குண்டுதுளைக்காத காரொன்றை சம்பந்தருக்குப் பரிசாக வழங்கும் அளவிற்கு அவர் சந்திரிக்காவிற்கு தேவையானவராக அல்லது முக்கியமானவராக இருந்தார். சந்திரிகா, மகிந்த, மைத்திரி, ரணில் என எல்லாக் காலங்களிலும் சம்பந்தர் தமிழ்மக்களுக்காக அல்லாமல் தனக்காக எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொண்டார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் அழைத்த போதும் 'வந்தேன்" என்று ஓடிப்போய் நின்று தனது உயிர்ப்பினை தக்கவைத்துக்கொண்டார்.

தமிழ்க்கட்சிகளின் தலைமைத்துவம் தந்தை செல்வா, அமிர்தலிங்கம் என யாழ்ப்பாணத்துத் தலைமைத்துவத்திலேயே தொடர்ந்து இருந்த போதும் அதனை முதற்தடவையாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியில் எடுத்த பெருமையும் சம்பந்தருக்கு உண்டு.

எல்லாப் பாதகங்களுக்கும் அப்பாற் சென்று "தமிழர் விடுதலைப் போராட்டம் மிக விரைவில் கௌரவமான நிலையை எட்டும்" என இந்தப் போகத்திற்கு முளைக்கப் போட்ட புதிய ஹைபிறிற் விதையை அறிமுகப்படுத்தியிருக்கிறார் சம்பந்தன். 08.06.2016 இல் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றம் செல்லவேயில்லை. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தாம் நினைத்தபடி முடிவுகளை எடுக்கும்போது அது தனிப்பட்ட தீர்மானங்களாகவே இருக்கமுடியும்.

இந்தப் பின்னணியில் உருவான சம்பந்தரின் அரசியற் பிரவேசம் என்பது தமிழ்மக்களின் உரிமைகள் என்ற விடயங்களுக்கு அப்பால் சம்பந்தன் என்ற தனிமனிதனின் முன்னேற்றத்திற்கே வழி வகுத்தது. அந்த வாய்ப்பை தமிழ் மக்கள் தமது வலிமை பொருந்திய வாக்குகளாலேயே உருவாக்கிக் கொடுத்தார்கள் என்பதை மறுக்கமுடியாது.

# தமிழ் மக்கள் சொல்வதை தமிழ்த் தலைவர்கள் செவிமடுப்பதில்லை

தமிழ்க் கைதிகள் யாருக்காக சிறையில் இருக்கவேண்டும், அவர்களை விடுவிப்பதற்கு யார் பேச வேண்டும்? இந்நிலையில் 17.04.2016 அன்று கைதிகளாக இருந்து



விடுதலை செய்யப்பட்ட இருவர் தற்போது சிறையில் வாடுகின்ற தமது சகபாடிகளின் விடுதலை விடயத்தில் பேசுவதற்காக யாழ்ப்பாணத்தில் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அவர்களை சந்தித்தபோது....

அவர் பத்திரிகை படிப்பதிலேயே அக்கறையாக இருந்தார். கதைத்தவர்களின் கோரிக்கைகளை செவிமடுக்கவே இல்லை. ஒரு கட்சித்தலைவர் இவ்வாறு நடந்து கொண்டால் ஏனையவர்கள் எப்படி நடப்பார்கள்? அண்மைக்காலமாக மக்கள் பல இடங்களில் இவ்வாறு அவமானப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். இந்தப் பதில்களை மக்கள் மிகச் சாதாரணமாக கேட்கமுடிகிறது. ஆனால் அப்பதில்களைச் சொல்பவர்களை அந்தப் பதவிக்கு உயர்த்தியவர்கள் மக்களே. தமது வாக்குகளால் அவர்களை வளமாக வைத்தவர்கள்.

"சம்மந்தருக்கு இப்ப இருப்பதுதான் உச்சமான அரசியல் இனி சனமும் தேடாது, அவரும் சனத்தைத்தேட மாட்டார்"என்றார்ஒரு முன்னைநாள் சம்பந்தர் விசுவாசி.

ஒரு தடவை ரஷ்யப் புரட்சியின் நாயகனான லெனின் ஒரு சிறிய கிராமத்திற்குச் சென்று அங்கு தங்கியிருக்கிறார். லெனின் அங்கு நிற்பதை அறிந்த மக்கள் அவர் இருந்ததாக கூறப்பட்ட இடத்திற்கு சென்றிருக்கிறார்கள். அங்கு சென்ற போது முற்றத்தில் ஒருவர் உலாவிக் கொண்டிருந்திருக்கிறார் அவர் அந்த மக்களைக் கண்டதும் இன்முகத்துடன் "வாருங்கள், யாரைப் பார்க்க வேண்டும்?" என்றார்.



மக்கள் : நாம் "தலைவர் லெனினைப் பார்க்கவேண்டும்" முற்றத்தில் நின்றவர் : அவர் வீட்டிற்குள் இருக்கிறார். அங்குபோய்ப்பாருங்கள்"

வீட்டிற்குள் போய் மக்கள் தமது விடயங்களைக் கூற உள்ளே இருந்தவர் இவ்வாறு கூறினாராம் " அதோ வெளியில் உலாவிக் கொண்டிருக்கிறாரே அவர் தான் லெனின்' என்று, மக்கள் திரும்பி முற்றத்திற்கு ஓடி வந்து அவரைக் கட்டித்தழுவி மகிழ்ந்தார்கள். லெனினும் அவர்களது வேண்டுகோளை அன்பாகசெவிமடுத்தாராம். அதனால் தான் லெனின் இன்றுவரை உலகம் போற்றும் தலைவராக உள்ளார்.

–"அமைச்சர் வாறார் உதில நிக்காதையுங்கோ"
–"இப்ப எனக்கு நேரமில்லை கடிதத்த அங்க குடுங்கோ"
–" நாங்கள் பிறகு அறிவிப்பம் தானே"
–"எல்லாம் அங்க பேசிக்கொண்டிருக்கிறம் இப்ப குழப்பாதையுங்க"
– " உங்கட விசயமாத்தான் இப்பவும் கதைச்சனான்"

# ஆலய வருமானத்தின் 10 வீதம் அறப்பணிக்கு


இது ஒரு மிக முக்கியமான தொடக்கமாகும். **இந்து மதத்தின் பிரதான குறைபாடு நிறுவனமயப்படுத்தப்படாமையும் துறவிகள் இல்லாமையுமே.** ஏனைய மதங்களில் உள்ள மதத் துறவிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இந்து மதத்தில் அது 0 %. துறவிகள் முழு நேரமாக ஈடுபடாததன் காரணமாக சமூகத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

இது இவ்வாறிருக்ககாரைநகர்சைவமகாசபைபுதியவிடயமொன்றை ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்கது. பல கோயில்களில் வருமானங்கள் உரியவாறு பதியப்பட்டு, அவற்றுக்கான கணக்குகள் பரிசீலிக்கப்படுவதில்லை.

வருமானத்தில் 10% அறப்பணிக்குச் செலவிடவேண்டும் என்ற நிபந்தனை சமூக மேம்பாட்டிற்கு உதவக்கூடியது, இவ்வாறான தொரு தீர்மானத்தை காரைநகர் சைவ மகா சபை பொதுக்கூட்டத்தில் தீர்மானமாக எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

காரைநகர்சைவமகாசபையின்புதியதலைவராகவைத்தியகலாநிதி ப.நந்தகுமார், செயலாளராக ஆ.பரஞ்சோதி, பொருளாளராக ந.பரஞ்சோதி ஆகியோரும் காரைநகரில் உள்ள 19 கிராமசேவகர் பிரிவிலிருந்தும் ஒவ்வோர் நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள் தோறும் சிவதொண்டர் அணிகளை உருவாக்குவது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.




**"வசந்தம் தொலைக்காட்சியில் 27.03.2016 இல் ஒளிபரப்பப்பட்ட "அதிர்வு" அரசியற் கள நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் கலந்து சிறப்பித்திருந்தார். அக்கலந்துரையாடலின் முக்கிய பகுதிகள் சிலவற்றை முகவரி பகிர்ந்து கொள்கிறது. — ஆசிரியர் (நன்றி : வசந்தம் தொலைக்காட்சி அதிர்வு நிகழ்ச்சி 17.03.2016 You - Tube இல் இந்நிகழ்ச்சியைப் பார்வையிட முடியும்)"**

மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களைக் கொலை செய்தவர். இறுதி யுத்தத்தின்போது கடுமையாக நடந்துகொண்டவர் என்பதால் அவரை மாற்ற விரும்பினோம். மைத்திரி, மகிந்த இருவரும் தமிழ் மக்களின் எதிரிகள் என்பதால் ஆட்சிமாற்றம் என்பதைவிட ஓர் "எதிரி மாற்றத் தையே" செய்தோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலதையும் செய்து தருவதாக உறுதியளித்திருக்கிறாரே தவிர அவர் எதையும் தமிழ் மக்களுக்குச் செய்யவில்லை. ஜே.ஆர் -"போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்றார். பிறேமதாஸ - "சமாதானம் பேசுவதுபோல் பேசி மக்களை அழிப்பதில் ஈடுபட்டார்" டி.பி.விஜேதுங்க - "சிங்களவர் ஒரு மரம். ஏனையவர்கள் ஒரு கொடியாக படரமுடியும்" சந்திரிகா - "சமாதானம் பற்றிக் கூறியபோதிலும் யுத்தத்திற்கே முன்னுரிமை அளித்திருந்தார்" மகிந்த - "100 வீதம் எதிராகவே செயற்பட்டார்"

1926 இல் பண்டாரநாயக்க சமஷ்டி பற்றிக் கூறியிருந்தபோதிலும் அவரால்அதை நிறைவேற்ற முடியாத சூழல் காணப்பட்டது. ஆனால் மைத்திரியை பண்டாரநாயக்கவை விடவும் கொஞ்சம் வித்தியாசமானவராகப் பார்க்கிறோம்.

மைத்திரி ஒரு இடதுசாரிக் கொள்கை உடையவர் அவரை ஒரு மகாத்மா காந்தியாகவோ, மண்டேலாவாகவோ பார்ப்பது வேறு. அவர் ஒரு விவசாயக் குடும்பத்தில் பொலநறுவையில் பிறந்தவர் என்பதே இங்கு கவனிக்கவேண்டியது. இவ்வாறான ஒரு மனிதரிடமிருந்துதான். சமுதாய மற்றும் இன ஒற்றுமைச் சிந்தனை உருவாக வாய்ப்புண்டு. ஆனால், அவரைப் பௌத்த பேரினவாதிகள் அனுமதிப்பார்களா என்ற சந்தேகம் எமக்குண்டு. மைத்திரி காலத்தில் ஏதாவது நடைபெறவேண்டும். இல்லாவிட்டால் சமாதானம் ஏற்பட்டுவிட வாய்ப்பில்லை.

புதிய அரசியல் யாப்பு பின்னர் அது புதியதல்ல திருத்தம் மட்டுமே எனப்படுகிறது. அதில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் நீக்கப்பட்டுள்ளது. முதலில் நாட்டில் இயல்பு நிலை திரும்பவேண்டும். மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக் குடியேற வேண்டும், சம்பூரில் 15 குடும்பங்கள் மட்டுமே இதுவரை குடியேறி உள்ளன.

இலங்கை இராணுவத்தின் மொத்தத் தொகையில் 80 வீதம் வடகிழக்கிலேயே நிலைகொண்டுள்ளது. அதேவேளை புதிய இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டு வருகிறது. கிளிநொச்சி நகரில் 40 வீதமான பகுதி இராணுவத்திடமே உள்ளது.

80,000 ஆயிரம் இராணுவமாவது தமிழ் மக்கள் மீது பாரிய குற்றச்செயல்கள் புரிந்துள்ளனர். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது யார்? மகிந்த, கோத்தா போன்றவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்படல் வேண்டும். கொலை வெறியும் ஓர் இரத்தத்தின் இரத்தத்தைப் பார்ப்பதிலும் அவர்களுக்குச் சந்தோசம் இருந்தது.

நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே கிளிநொச்சியில்தான் நான் அரசியலுக்கு வரும்வரை எனக்குத் தெரிந்த தலைவர் பிரபாகரன் தான். எனக்குத் தெரிந்த கட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் தான்.

நான் இறுதி யுத்தத்தை நேரடியாகக் கண்டவன். பிரபாகரனைத் தலைவராக ஏற்றுக்கொண்டதற்காக எனக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் எனக்கூறினால் அதையும் ஏற்கத் தயாராகவே உள்ளேன்.

2009 வரை தமிழருக்கான தீர்வு தமிழீழம் தான் என்பதில் உறுதியாக இருந்தோம். ஆனால் தற்போது சம்பந்தன் கூறுகிறார் "தமிழீழத்தைக் கேட்கும் உரித்து எமக்கிருக்கிறது. ஆனால் நாங்கள் இப்போது அதைச்சொல்லவில்லை" என்று .

நாங்கள் வடகிழக்கு இணைந்த வகையில் ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே கேட்கின்றோம். மொழி அடிப்படையிலான ஒரு சுயாட்சியையே கேட்கிறோம்.

புலிகள் ஆயுதத்துடன் இருந்த போது தமிழீழத்தை நம்பினோம்.

(தொடர்ச்சி 29 ம் பக்கம்)

**இறுதி யுத்தத்தின்போது மக்களுடன் இருந்த சிறிதரன் எவ்வாறு இராணுவத்திடம் சரணடைந்தார்.**

**1. எத்தனையாம் திகதி குடும்பத்துடன் சரணடைந்தார்?**

**2. எங்கிருந்து சரணடைந்தார்?**


**3. எந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்?**

**4. முகாமில் இருந்தபோது வழங்கப்பட்ட அடையாள அட்டையின் இலக்கம் என்ன?**

**5. மீள்குடியேற்றப்பட்ட திகதி**

**மேற்படி விடயங்கள் மர்மமாகவே உள்ளன.**






# சட்டம் நம்மை ஆளட்டும்

**த**னிப்பட்ட ஒவ்வொரு பிரசையினுடைய உரிமைகளை காப்பவனாகவும் அப்பிரசை வாழ்கின்ற ஒட்டு மொத்த சமூகத்தின் பாதுகாவலனாகவும் அரசு செயற்படுகின்றது. இச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக அரசு பல நிறுவனங்களைப் பயன்படுத்துகின்றது. அந்த வகையிலே நீதித்துறையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. நீதித்துறையின் ஆளுகைக்கு கீழ் நீதின்றங்கள் இடம் பெறுகின்றன.

காலத்துக்குக் காலம் நீதித்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் நீதிமன்றங்களின் கட்டுக்கோப்பான ஒரு தோற்றத்துக்கு வழி சமைத்தன எனக் கூறலாம். **தற்போதுள்ள நீதிமன்ற அமைப்பு முறையானது 1973 ஆம் ஆண்டின் 44 இலக்க நீதி நிர்வாக சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.** இதன் மூலம் முழுமையான புதிய நீதிமன்ற முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதன்படி

1. உயர் நீதிமன்றம் / உச்ச நீதிமன்றம் / மீயுயர் நீதிமன்றம் (Supreme Court)
2. மேன்முறையீட்டு நீதிமன்றம் - (Court of Appeal)
3. மேல் நீதிமன்றம் - (High Court)
4. மாவட்ட நீதிமன்றம் - (District Court)
5. நீதிவான் நீதிமன்றம் - (Magistrate's Court)

ஆகியவை நீதி பரிபாலனத்துக்காக தாபிக்கப்பட்டன. இதன் பிரகாரம் உயர் நீதிமன்றமானது ஒரு தலைமை நீதியரசரையும் (Chief Justice) பத்துக்குக் குறையாத இருபதுக்கு மேற்படாத நீதியரசர்களையும் கொண்ட இலங்கைக் குடியரசின் உயர் நீதிமன்றம் இக்கட்டமைப்பின் சிகரமாக விளங்குகின்றது.

**உயர் நீதிமன்றமும், மேன் முறையீட்டு நீதிமன்றமும் இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பில் மேனிலை நீதிமன்றங்களாக கருதப்படுகின்றன.** இங்கு கடமையாற்றும் நீதிபதிகள் "நீதியரசர்கள்" என அழைக்கப்படுகின்றனர்.

அதற்கு அடுத்த படியில் மேல்நீதிமன்றம் காணப்படுகின்றது. மேல் நீதிமன்றின் (High Court) நீதிபதி மேல்நீதிமன்ற நீதிபதி என அழைக்கப்படுவார். **குற்றவியல் சட்டக் கோவையின் கீழ் சகல குற்றங்களுக்குமான நியாயாதிக்கத்தை மேல் நீதிமன்றங்கள் கொண்டிருக்கும். அந்நிய நீர் நிலைகளில், கடலில் ஆகாயத்தில் மற்றும் இலங்கை குடிமக்களால் இலங்கைக்கு வெளியே புரியப்படும் குற்றங்களை விசாரிக்கின்ற அதிகாரத்தையும் இவை கொண்டுள்ளன.**

அத்துடன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் (PTA) கீழ் கைது செய்யப்படுபவர்களின் விசாரணை நடவடிக்கைகளும் இங்கே நடைபெறும். நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் தண்டனைத் தீர்ப்பு வழங்க முடியாத கொலை, கொலை முயற்சி, கற்பழிப்பு போன்ற கடுங்குற்றங்கள் நீதிவான் நீதிமன்றில் சுருக்க முறையற்ற விசாரணையின் (Non Sukmmary Inguiry) பின்னர் மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்படும். மேல் நீதிமன்றுக்கு முன்னர் கொண்டு வரப்படும் வழக்குகள் பின்வரும் முறையில் விளக்கத்துக்கு எடுக்கப்படலாம்.

1. ஜுரர் (Juror) இல்லாமல் நீதிபதியினால் நடத்தப்படும் விசாரணை- Trial by Judge with out Jury.
2. ஜுரிகள் முன்னிலையில் நீதிபதியினால் நடத்தப்படும் விளக்கம் - "Trial by Jury.
3. பல நீதிபதிகளைக் கொண்டு நடத்தப்படும்விளக்கம்-TrialatBar.

மாவட்ட நீதிமன்றமானது குடியியல் பிணக்குகளை விசாரிக்கின்ற நீதிமன்றமாக விளங்குகின்றது. காணி தொடர்பான விடயங்கள், மணநீக்கம், வாடகை, வெளியேற்றம், பிரிவிடுதல், மரணச்சொத்து, காசு, இழப்பீடு, அவதூறு போன்ற குற்றவியல் தன்மையற்ற குடியியல் (Civil) வழக்குகள் இங்கு விசாரணைக்கு எடுக்கப்படும்.

மாவட்ட நீதிமன்றின் நீதிபதி "மாவட்ட நீதிபதி" என அழைக்கப்படுவார். இங்கு மாவட்டம் எனக் கருதப்படுவது நிர்வாக **மாவட்டமாக அமையாமல் நீதி வலயங்களின்** (Judicial zone) **மாவட்டமாக கருதப்படும். உதாரணமாக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டம் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்றுறை ஆகிய 05 நீதிமாவட்டங்கள் உள்ளன.** இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நீதிவான் நீதிமன்றமும் மாவட்ட நீதிமன்றமும் காணப்படும்



நீதி மன்ற படிமுறையில் இறுதியாக அமைந்துள்ளது. நீதிவான் நீதி மன்றம் ஆகும்.

நீதிவான் நீதிமன்றம் ஒன்றின் நீதிபதி "நீதிவான்" (Magistrate) என அழைக்கப்படுவார். குற்றவியல் தன்மை கொண்ட சகல வழக்குகளும் முதலில் நீதிவான் நீதிமன்றுக்கே முற்படுத்தப்படும். அதன்படி பொலிசார் மதுவரித் திணைக்களம், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், பிரதேச சபைகள், நுகர்வோர் விவகார அதிகார சபை, உணவு மருந்து பரிசோதகர்கள், இறைவரித் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் போன்றவர்களினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் நீதிவான் நீதிமன்றிலேயே விசாரணைக்கு எடுக்கப்படும்.

அது தவிர கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் பராமரிப்பு தொடர்பான "தாபரிப்பு வழக்குகள்" (Maintenance Case) குடும்ப வன்முறை தொடர்பான வழக்குகள் என்பவையும் இங்கு கையாளப்படும். நீதி பரிபாலனத்தில் முக்கிய பங்கினைக் கொண்டவராக நீதிவான் கருதப்படுவார். அதாவது அனைத்து குற்றவியல் நீதி பரிபாலன நடவடிக்கைகளிலும் முதலில் சம்பந்தப்படுபவராக அல்லது கட்டளைகளைப் பிறப்பிப்பவராக நீதிவான் கருதப்படுவார்.

அதாவது அனைத்து குற்றவியல் நீதிபரிபாலன நடவடிக்கைகளிலும் முதலில் சம்பந்தப்படபவராக அல்லது கட்டளைகளைப் பிறப்பிப்பவராக நீதிவான் கருதப்படுவார். நீதிவானின் பங்கு இரு பகுதிகளைக் கொண்டதாக காணப்படும். அது தனியாக

மதுமிதன்

செயற்படுவது மற்றும் பொலிசாருடன் இணைந்து செயற்படுவது ஆகியவற்றைக் குறிக்கும்.

நீதிபரிபாலனம் தொடர்பாக செயற்படுகின்ற பல துணை அமைப்புக்களும் காணப்படுகின்றன. அந்த வகையில் நீதிவான் நீதிமன்றங்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்காக மத்தியஸ்த்த சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. சாதாரணமான இணக்கப்படுத்தி வைக்கக் கூடிய பிணக்குகளை நீதிவான் நீதிமன்றங்கள் மத்தியஸ்த சபைகளுக்கு ஆற்றுப்படுத்துகின்றன.

அந்த வகையில் இலங்கையின் நீதி பரிபாலனமானது சிறப்பாக செயற்படுவதற்கு மேற்சொன்ன அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## உயர் வகுப்பினருக்கு மட்டும் தான் கார்

### அமைச்சர் ஜோன் அமரதுங்க

அண்மையில் சொகுசு வாகனங்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது பற்றி அமைச்சர் ஜோன் அமரதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். சாதாரண மக்களுக்கு கார் தேவையில்லை. வாகனங்களின் தொகை ஏற்கனவே அதிகரித்து விட்டதால் அதனைக் கட்டுப்படுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார்.

சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், சொகுசு வாகனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புண்டு. அதேவேளை, ஓர் அமைச்சராகிவிட்டால் 04 சொகுசு வாகனங்கள் அரசசார்பில் வழங்கப்படும். ஆனால், சாதாரண மக்கள் தமது உழைப்பில் முன்னேறுவது மிகவும் சிரமமானது. உயர் அதிகாரிகளுக்கு மட்டும்தான் கார் பாவிக்க முடியும் என நினைப்பதே அடிப்படையில் தவறானது.

# ஏழு வருடங்களின் பின்

2009 மே 19 இல் விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியில் ஒடுக்கப்பட்டதன் பின் புலிகளால் ஒரு குண்டைக்கூட வெடிக்கவைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறானசூழல்கடந்த7வருடங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. சூழல் இவ்வாறு இருக்கும்போது ஏன் மீண்டும் புலிகள் எழுவார்கள் என்ற பயம் அரசுக்கு வரவேண்டும்?

'மீண்டும் புலிகள்" என்ற கோஷம் யாருக்குத் தேவைப்படுகிறது?

1. மகிந்த ராஜபக்ஷவுக்கும் அவர் சார்ந்த அரசியல் தலைவர்களுக்கும்
2. மைத்திரி-ரணில் அரசுக்கு
3. தமிழ்நாட்டில் ஜெயலலிதா, கருணாநிதி, சீமான் போன்ற தலைவர்களுக்கு
4. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு



# புலி வேட்டை

## தர்மா

5. புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு

இவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட அணுகுமுறையில் புலிகள் அமைப்பை பயன்படுத்த முனைகின்றனர். இதனால் பாதிக்கப்படப்போவது இலங்கையில் உள்ள புலி சார்ந்த நபர்களே.

இந்தப்புலிவேட்டை இருவேறுபட்டபரிணாமங்களை உள்ளடக்கியுள்ளது.

1. உள்நாட்டில் மீண்டும் உருவாக்கக்கூடியவர்களை முடக்குவது.
2. சர்வதேச பொலிஸாரான "இன்ரபோலின்" உதவியுடன் அவர்களது நடமாட்டத்தை சர்வ தேசத்தில் கட்டுப்படுத்துவது

**இறுதி யுத்தப் படுகொலைகள் அதற்கான விசாரணைகள் என்பன புதிய அரசின் சீன சார்புக்கொள்கையின் பின் சற்று இறுக்கமடைந்து வருகிறது. இந்நிலையில் விடுதலைப் புலிகள் ஒரு கொடூரமான இயக்கம் என்பதை நிரூபிக்க தாக்குதல்களைச் செய்த தளபதிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பதிவது, அதற்கான தடயப்பொருட்களை தேடிக்கண்டுபிடிப்பதன் மூலம் புலிகள் தொடர்பான சட்டரீதியான ஆவணம் ஒன்றினைத் தயாரிக்கமுடியும்.**

அதேவேளை வெளிநாடுகளில் இருக்கும் புலிகள் மற்றும் மேற்குலக நாடுகள், இந்தியா என்பன புலிகளை மீண்டும் உருவாக்குவதற்கு எஞ்சியுள்ள சிறந்த தளபதிகளை பயன்படுத்த முயலக்கூடும் என்ற அச்சம்.

ராம் போன்ற தளபதிகளுக்கு வன்னியிலிருந்து கதிர்காமத்து காடுகள் வரை எல்லாம் அத்துப்படி. எனவே இவ்வாறான அனுபவம் மிக்கவர்கள் எப்பவும் ஆபத்தாக வரக்கூடும் என்று நினைத்தமை.

மகிந்த அரசாங்கம் இருக்கும்போது புலிகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களைக் கலைத்துப் பிடிக்கவேண்டிய அவசியமோ, அவர்களை வேறு சக்திகள் பயன்படுத்திவிடக்கூடிய சூழலோ இருக்கவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரையிலும் மாவீரர் தினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என எழுச்சி விடயங்களைச் செய்வதில் பிரச்சினை இல்லை. ஆனால், புலிகள் மீண்டும் தலைதூக்குவதால் 2009 மே தொடக்கம் இன்று வரையான விடயங்கள் தொடர்பில் பஞ்சாயத்து வைத்தால் பலரது தலைகள் அவர்களுடன் இருக்கப்போவதில்லை என்று நன்கு தெரியும்.

**அண்மையில் பாராளுமன்ற உரை ஒன்றின்போது மகிந்த புலிகள் இன்னும் இருக்கிறார்கள் என்று கூறினால் மகிந்த சரியான முறையில் யுத்தத்தை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டை முன் வைத்து அவருக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கவேண்டி வரும் என்றார் பிரதமர்.**

புலிகள் தொடர்பில் வெளிநாடுகளில்கூட புலிகளின் கொடி, பிரபாகரனின் படங்களை யாரும் தூக்கக்கூடாது என்பதே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு.

இறுதி யுத்தத்தின்போது, புலம்பெயர் தமிழர்கள் யுத்தத்தை நிறுத்து எனக் கூறிக் கொண்டு புலிக்கொடியுடன், பிரபாகரனின் படத்தையும் கொண்டு போனதால் ஐரோப்பிய நாடுகளில் தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்துக்கு யாரும் ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை. இந்தக்கொடிகளும், படங்களும் இல்லாமல் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை காட்டியிருந்தால் யுத்தம் நிறுத்தப்படும்போது மக்களும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள், அதற்குள் அடங்கிய புலிகளும் தப்பியிருப்பார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஜெயலலிதாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஈழத்தமிழருக்கு தனிநாடு ஒன்றை அமைத்துக்கொடுக்க வேண்டியது தனது கடமை என்கிறார்.

இவை எல்லாம் சேர்ந்து இறுதி யுத்தத்தில் விடுவிக்கப்பட்ட பலருக்கு உலை வைக்கப் போகிறது. இரண்டு யானைகள் மோதிக்கொள்ளும்போது அவற்றின் கால்களுக்குள் அகப்படும் கோரைப்புற்கள் போல வாழும் தமிழ் மக்கள் நசியுண்டு சாகப்போகிறார்கள்.

அதேவேளை, இலங்கையின் புலனாய்வுத்துறை ரி.ஐ.டி. பிரிவினரை வெளிநாடுகள் பலவற்றுக்கு அனுப்பி அங்கு புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், வெளிநாட்டில்இருப்போருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்கப்படும் என பிரதமர் ரணில் அறைகூவல் விடுத்துள்ளார்.

அதேவேளை, அண்மையில் பூநகரி விக்னேஸ்வராக் கல்லூரியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை திறந்து வைத்த வைபவத்தில் "வடக்கிற்கு தமிழ் தெரிந்த ஒருவர் ஆளுநராக வந்திருப்பது மகிழ்வைத் தருகிறது" என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் புகழாரம் சூட்டப்பட்ட ரெஜினோல்கூரே அவர்கள் இராணுவம் உங்களுக்கு உதவி செய்யவே இங்கு இருக்கிறார்கள். அவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார்.

எனவே **மீண்டும் ஒரு தடவை இயக்கப் பெடியள் அல்லது எங்கடபெடியள் பலரது தேவைகளுக்கு கழிப்புக் கழிக்கும் நீற்றுப்பூசணிக்காய் போல மாறவிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.**

## பொலநறுவையில் சீனா

சீன அரசாங்கம் பொலநறுவை மாவட்டத்தில் பாரிய பல வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க உள்ளது.

- குழநீர் வழங்கல் திட்டம்
- வீதி புனரமைப்பு மற்றும் வியாபித்தல்
- புகையிரதப் பாதை வியாவிப்புத் திட்டம். (குருநாகலிலிருந்து ஹபரணை ஊடாக தம்புள்ளை வரை).
-விவசாயம் சார் கைத்தொழில் மற்றும் விவசாய பொருளாதார மையம்.
- மாதுறுஓயா வலதுகரை அபிவிருத்தித் திட்டம்.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இலங்கை- சீன அரசுகள் சித்திரை 2016 இல் கைச்சாத்திட்டுள்ளன.

## அனுபவப் பகிர்வு

சிறைக்குள் என்ற இந்நூல் 2002 ஆம் ஆண்டு மாஸ்ரர் என்பவரால் எழுதப்பட்டதாகும். இவர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 2 வருடங்கள் சிறைத்துன்பத்தை அனுபவித்தவர். போகம்பற, களுத்துறை, பூசா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அனுராதபுர சிறைகளில் தனது சிறை வாழ்க்கையை அனுபவித்தவர். இக்கொடிய நாட்களின் தனது சிறை அனுபவங்களை குறிப்புக்களாக எழுதி, இன்னும் பல கைதிகளின் அனுபவங்களையும் தொகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 2002 இல் எழுதப்பட்ட இந்நூல் எந்தவித மாற்றங்களும் செய்யாது அவ்வாறே வெளியிடப்படுகின்றது. – ஆசிரியர்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)


இதனால் திறந்து விடப்படுகின்ற சந்தர்ப்பங்களில் சிறைச்சாலை ஊழியர்கள் இங்குமங்குமாக உலாவியவாறு கண்காணித்துக் கொண்டிருப்பர்.

காலை 8.45 மணியளவில் புதிதாகவந்த புலி உறுப்பினர் எங்கே? என்று ஒரு சிறை அலுவலர் வந்தார். எல்லாரும் என்னைக் கூப்பிட்டார்கள். “அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக என்னை வெளியில் வருமாறு கூறினார்”. அங்கு கடமையில் இருந்த ஜெயிலரிடம் சொல்லிவிட்டு என்னை அருகிலுள்ள அலுவலகத்திற்கு கூட்டிச் சென்றார்.

அங்குமுதல்நாள்என்னுடன் சங்கிலியில் பூட்டப்பட்ட எல்லா கைதிகளும் சேட்டை கழற்றி கையில் ஏந்தியபடி வரிசையாக நின்றார்கள். எனதுசேட்டையும்கழற்றுமாறுசொன்னார்கள். கழற்றினேன். அங்கு அடிப்பார்களோ என்று கூட யோசித்தேன்.

ஒவ்வொருவராக உள்ளே கூப்பிடப்பட்டனர். நான்கு அல்லது ஐந்தாவது நபராக உள்ளே சென்றேன். எனது பெயர், வயது, விலாசம், திருமணமானவரா?, உடலிலுள்ள நிரந்தர அடையாளங்கள் எல்லாம் கேட்டு எழுதினார்கள். ஓர் அலுவலர் எழுத ஒரு பாட்டிக்காரன் (குற்றம் நிருபிக்கப்பட்டு தண்டனை வழாங்கப்பட்ட கைதி - Convicted Prisoner) எல்லாவற்றையும் கேட்டு சொல்லிக் கொண்டேயிருந்தான். **“பள்ளிக்கூடம் போயிருக்கிறாயா”? என்று ஒரு மட்டமாக சிங்கள மொழியில் கேட்டான். நான் ஒரு பட்டதாரி என்று சொன்ன போது எழுதிக் கொண்டிருந்த அலுவலர் உடனே நிறுத்திவிட்டு அந்த பாட்டிக்காரனிடம் சொன்னார் ஒரு ஸ்ருல் எடுத்து வரும்படி,**

ஸ்ரூல் கொண்டு வந்தபின் தனக்கு அருகில் என்னை இருத்தி எனது விடயங்களை அறிந்த பின் “குறையாக எடுத்துக்கொள்ள வேண்டாம், இங்கு வருபவர்களில் பலர் அடிக்கடி சிறைக்குள் வந்து எமக்கு தொல்லை கொடுப்பவர்கள், எமக்கு அலுத்தே விட்டது. இவர்களுடன் இந்த விதமாக கதைத்து நாங்களும் பழகி விட்டோம்” என்றார். எனக்கு என்ன தேவையென்றாலும் சொல்லச் சொன்னார். எனக்குச் சிறைச்சாலையில் பதிவு செய்யப்பட்ட இலக்கம் - 4608.




அந்த தருணத்தில் நான் நினைத்திருக்கவில்லை அந்த இலக்கத்துடன் இரண்டு வருடங்களை பல சிறைகளில் கழிக்க வேண்டி ஏற்படும் என்று.

பின்னர் சிறைச்சாலை ஆஸ்பத்திரிக்கு (Prison Hospital – PH) கூட்டிச் சென்று உடலில் உள்ள காயங்கள், வேறு வருத்தங்கள் இருக்கின்றதா என்று ஒரு பெண் வைத்தியர் பதிவு செய்தார். அதன் பின்னர் உதவி சிறைச்சாலை அத்தியட்சகரிடம் (Assittant Superintent of Prison – ASP) கூட்டிச் சென்றார்கள். அவர் “ஆங்கிலம் பேசுவாயா”? என்றார். “ஆம்” என்றேன். பின்னர் விபரம் கேட்டார். முழங்கைகள் இரண்டையும் காட்டுமாறு கேட்டார். காட்டினேன் போகச்சொன்னார். முழங்கையில் ஆயுதப் பயிற்சி எடுத்தவர்கள் கண்டல் காயங்கள் அல்லது அடையாளங்கள்இருக்கும் என்பதை பொலிசாரின் விசாரணையின் போது பார்ப்பார்கள். அதே விடயத்தை அவரும் கேட்டது ஆச்சரியமாக இருந்தது.

பின்னர் சிறைச்சாலை அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு (Superintent of Prison- SP) அழைத்துச் செல்லப்பட்டேன். அவரும் விபரம் கேட்டு “இப்போ அடைத்து வைத்திருக்கும் அறை பிரச்சினை இல்லையா? அங்கு ஏற்கனவே இருப்பவர்களால் தொல்லை எதுவும் வராதா?” என்று கேட்டார். “இல்லை” என்றேன். “ஏனெனில் உங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு” என்றார்.



மீண்டும் முதலில் பதிவு செய்த பகுதிக்கு கூட்டிவந்தார்கள். அங்கிருந்த ஜெயிலர் எனது கோவையைப் பார்த்துவிட்டு பிரிவு V (பயங்கரவாத தடைச்சட்டம்) என்பதால் “குறைந்தது ஒன்றரை வருடமாவது சிறைக்குள் இருக்க வேண்டிவரும்” என்றார். அவர் எந்த அடிப்படையில் சொல்கிறார் என்று யோசித்தேன். அவர் குறிப்பிட்ட காலப்பகுதியைத் தாண்டித்தான் நான் விடுதலை யானேன். ஆவர் பல தமிழ் அரசியல் கைதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துப் போவதால் நீண்ட தவணைகள் போடப்படுவதை அவதானித்திருக்க முடியும்.

எல்லோரிடமும் போய் விட்டு மீண்டும் D பிரத்தியேக பிரிவிற்கு திரும்பும் போது முற்பகல் 11.00 மணியளவில் ஆகி விட்டது. அதை எஸ்.பி.யின் அறையில் கதைத்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சுவர் மணிக்கூட்டில் காணப்பட்ட நேரத்தினை அவதானித்த அடிப்படையில் உணர்ந்தேன்.

**சிறைச்சாலைக்குள் மணிக்கூடு வைத்திருக்க அனுமதியில்லை. அதற்கு மூன்று காரணங்கள் இருக்கலாம் என எனது அனுபவத்தில் உணர்ந்தேன்.**

**1.கடிகாரம் உள்ளே இருந்தால் தப்பி யோடுவதற்கான திட்டம் ஒன்றை நுணுக்கமாக திட்டமிட உதவும்.**

**2. ஒரு கைதியின் மனநிலையில் மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் ஒரு நிமிடமும் கழிவது ஒரு யுகம் கழிவது போல் இருக்கும்.**

**3. ஏதாவது கள்ள வேலைகள் செய்யும் போது அதிகாரிகள் தமது வேலை மாறும் நேரத்தை அறிந்து அந்த நேரத்தில் தயாராக இருந்துவிட முடியும்.**

முற்பகல் 11.00 மணியளவில் உள்ளே வந்தபோது, எனது அறையில் இருந்த நண்பர்கள் கேட்டார்கள் “சிறைச்சாலை இலக்கம் என்ன?” என்று, நான் சொன்னேன் “இனி இதுதான் உங்களுக்கு சிறைச்சாலைக்கு மிகவும் அவசியமானது மறந்து விடக்கூடாது.” என்றார். இதில் மறப்பதற்கு என்ன இருக்கிறது? சிறைக்குள் எல்லாம் புதிதாக அச்சுறுத்துவதாகவும் தலையில் ஆணி அடிப்பது போல ஆழமாக ஞாபகம் இருக்கிறது.

(அடுத்த இதழில் தொடரும்...)




நன்றி

# மனித உடலே முதன்மை மருத்துவன்

நாம் வாழும் இவ்வுலகமானது பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் சூரியனில் ஏற்பட்ட சிறு மேற்கொள் வின் மூலமாக தோற்றம் பெற் றது. இதுவே உயிர்என்றகருப்பொருள் உதயமாகக்கூடிய இடமாகவும் இருந் தது. உயிர் என்ற எண்ணக்கருவை மையமாகக் கொண்டே உலகில் அங்கிகள் தோற்றம் பெற்றன.

உலகில் தோற்றம் பெற்ற அங்கிகள் அனைத்தும் கூர்ப்புவிதிக்கு அமைய நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்க ளின் சார்பாக ஓர் ஒழுங்கிலே படைக்கப்பட்டன.

அவ்வாறு படைக்கப்பட்ட பல உயிரினங்களிலே மனிதன் என்ப வன் முதன்மை உயிரினமாகவும் மற்றைய உயிரினங்களைப் போல ஐந்து அறிவுடனும் ஆறாவது அறி வான பகுத்தறிவுடனும் தோற்றம் பெற்றான்.

மனிதன் தான் தனக்கென்று ஒரு நிலையைப் பெறுவதற்கு



“உடல்” என்ற விடயத்தினை சுய-மாகக் கொண்டுள்ளான். இவ்வுட லானது கலங்கள், (cells), இழை யங்கள் (tissues) உடற் தொகுதிகள் (organ system) என்பன ஒன்றாக இணைந்து உயி ரியல் இரசாயன ரீதியாக செயற்படு கின்றது.

இவ்வுடலானது வெப்ப நிலை, ஓர்சீர்த்திடத்தூண்டல் அமுக் கம், சுவாசம், கழிவகற்றல், குருதி யோட்டம், உடலின் இரசாயனத்தாக் கம் என்பனவற்றை சீராகச் செயற் படுத்தி, மனித வர்க்கத்தை உலகில் நிலைபெற வைத்துள்ளது.

உலகம் தோற்றம் பெறும் போதே இயற்கைச் சமநிலை (Natural equilierium) எனப்படுகின்ற ஓர் உன்னதமான விடயம் தோற்றம் பெற்றது. அதுபோலவே ஒவ்வொரு தனிமனித உடலும் தமக்கென்று ஒரு சமநிலையைப் பேணி வருகிறது.

அவ்வாறு பேணப்பட்டுவரும் சமநிலையை மனிதனாலேயே குழப்பப்படும்போது நோய் என்ற விடயம் மனிதனை நெருங்குகின்றது.

“நோய்” என்பது என்னவென் றால் உடலில் ஏற்படுகின்ற ஒரு வகை யான சமநிலை அற்ற தன்மை எனலாம். (Unbalance Behavior) ஏனெனில், ஒரு நோய் நமது உடலில் ஆக்கிரமிக்கும்போது உடலிலே கலத்தொழிற்பாடு, நரம்புத் தொழிற் பாடு, குருதித்தொழிற்பாடு, நொதியத் தொழிற்பாடு என்பன மந்த நிலை-யை அடையும்.

இவ்வாறு ஏற்படும் மந்த நிலையை உடலானது ஓர் உன்னத மருத்துவரீதியாக இயல்பாகவேகட்டுப் படுத்துகிறது. அதுவே “நோய் எதிர்ப்பு” எனப்படுகிறது. உதார ணம்: தோலின்மேல் ஏற்படுகின்ற ஒரு சிராய்ப்புக் காயத்தை எடுத்துக் கொண்டால் உடற்தோலின் மேற்பரப் பில் ஒரு சிராய்ப்பு ஏற்படும்போது அதில் இருக்கும் கலங்கள் சிதைவடை-கிறது. எனவே கலங்களுக்குள் ஓடிக்கொண்டிருக்கும் குருதிக்கலங்கள் மற் றும் ஏனைய போச னைப்பொருட்கள் என் பன வெளியில் வரப் பார்க்கின்றன.


அச்சந்தர்ப்பத்தில் மனித உடலை மெல் லிய வலை போன்ற பொருள் உருவாக்கப் பட்டு மேற்பரப்பு பாது காக்கப்படுகின்றது. இதன் மூலம் அந்நிலை மையை கட்டுப்பாட்டில் கொண்டு வருகிறது.

உடற்சம நிலை என்ற விடயத்தை இன்றைய காலகட்டத் தில் மனிதன் கணிசமான அளவு குழப்புவதைக் காணலாம். உதாரண மாக:

- ☐ நேரம் தப்பிய உணவு
- ☐ உணவை விடுத்தல்
- ☐ நேரம் தப்பிய மலக்கழிப்பு
- ☐ சுகாதாரமற்ற பழக்கவழக்கங்கள்
- ☐ எண்ணெய், கொழும்பு, சீனி சேர்த்த உணவுகளை அதிகம் உட் கொள்ளல்
- ☐ அளவுக்கதிகமான இரசாயன, அழகு சாதனப் பொருட்களின் பாவன்னை
- ☐ அதிக உடற்பருமன்

போன்ற விடயங்களூடாக உடலின் சமநிலையை ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.


எனவே தான் புதிய வகையான நோய்கள் பல மனித உடலை ஆக்கிரமித்து வருகிறது. **எத்தகைய நோய்கள் உடலில் ஏற்பட்டாலும் உடலானது அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையே உடலின் முதலாவது மருத்துவசேவையாகும்.** உதாரண-மாக : ஒருவருக்கு காய்ச்சல் ஏற்படும் போது உடல் குருதியில் காணப் படும் நோய் எதிர்ப்புத் திரவங்கள், புரதங்கள், நொதியங்கள் என்பன சுரந்து அக்காய்ச்சலைக் கட்டுப்படுத்து வது என்பது உடல் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் சாதாரண நடவடிக்கையாகும்.




மனித உடலில் பேணப்படும் உடற்சமநிலை சீராக மேற்கொள் வதற்கு மனிதனால் மேற்கொள்ள வேண்டிய ஒத்தாசைகள் என்ற வகை யில் பார்க்கும்போது

- நேரம் தப்பாத உணவு
- சமநிலை உணவு - அதாவது ஒரு மதிய உணவில் கறிகளும், சோறும் ஏனைய சத்துக்களும் ஒரே விகிதத்தில் இருத்தல் வேண்டும்.
- பொருத்தமான சுகாதாரப் பழக்க வழக்கங்கள்
- மாப்பொருள் அதிகம் உள்ள உணவு களை பெருமளவு தவிர்த்தல்

போன்ற விடயங்களின் ஊடாக




உடற்சமநிலையைப் பேண மனி தன் ஒத்தாசை புரிய முடியும்.

**இன்றைய காலகட்டத்தில் காணப்படும் “மருத்துவ மோகம் காரணமாக மக்கள் மருத்துவத்தை உடனடியாக அணுகி இரசாயன செறிவு கூடிய மருந்துகளை** Anti Biotics, anti oxidents, B Com-plx **போன்றவற்றை அளவுக் கதி-கமாக உட்கொள்வதால் உடல் இயல் பாகவே செய்யக்கூடிய மருத்தவ சேவைக்கு பங்கம் ஏற்படுகிறது. இதனால் குறிப்பிட்ட காலத்தில் மாற வேண்டிய நோயானது நீண்டகால மாக மாறாதிருக்கிறது அல்லது நிரந்தரமாகவே உடலில் தங்கி விடுகிறது.**

இச்செயற்பாடானது நோயைக் குணப்படுத்துவதா? அல் லது நோய்க்குச் சேவை புரியும் செயற்பாடா? எனவே, நாம் எம்மால் முடிந்தளவுக்கு உடற்சமநிலைக்கும், உடல் என்னும் முதன்மை மருத்து வனுக்கு நம்மால் முடிந்த ஒத்து ழைப்பை வழங்குவதன் ஊடாக நோய் என்ற விடயத்தை உடலில் நெருங்காது பேணிக்கொள்ள முடியும்.

அருண்

# பக்கத்தில் பனம் பழங்கள் இருந்தும் பயன்படுத்த மறந்தோமே



பேராசிரியர்

பொன்.நவரட்ணம்

தலவிருட்சங்களில் உயர் பயன் தருவது பனை ஒன்றுதான். எனவே தான் கற்பக தரு எனறு பொருள்பட அழைக்கின்றனர். ஏனெனில், பல வருடங்களாகப் பல்வேறு பயன்களைத் தந்தபின் மடிந்தும் மலையாய பயனுடைத்து இருப்பதனால்தானோ என்னவோ அது யானையைப்போல் வாழ்ந்தாலும் மற்றும் இறந்தாலும்பயன் தருகின்றது.

வித்து முளைத்து வடலியாகி, பின் வளர்ந்து பருவமடைந்த ஆண்,பெண் பனைகள் ஈரில்லமாகி இவை பூக்கத் தொடங்குகின்றன. பெண்பனை காய்களைத் தருகின்றது. காய்கள் இளநிலையில் நுங்காகிப் பலரும் விரும்பியுண்ணும் சிற்றுணவாகி நிற்கின்றது. அதைக் கீழ்க்கொணர ஏற்படும் செலவு அதிகமாக இருப்பதுதான் இங்கு ஏற்றுக் கொள்ளமுடியாததொன்று. இருப்பினும் அதன் சுவை இங்கு முன்னிற்கிறது. **இதன் பழங்கள் கனிந்ததும் தானே கழன்று நிலத்தையடைகின்றன. அனேகம் முழுமையாக இருப்பது பழத்தினுள் நுண்ணங்கிகளின் வருகையைத் தாமதப்படுத்துகின்றது. எனவே பழங்களைச் சேர்த்துப் பயன்படுத்தப் போதிய நேரத்தை ஒதுக்கித் தருகின்றது.**



ஏனோ பழத்தின் இடைக்கனியம் ஒட்டுந்தன்மை (பனம் களி உள்ள பகுதி) உடையதாலும் அத்துடன் கசப்புச்சுவையைத் தருவதாலும் அப்பழத்தை மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஆனால், கட்டாக்காலிக் கால்நடைகள் விரைவில் முந்திக்கொள்கின்றதினால் விதைகளை மட்டும் விட்டுவிடு மளவிற்கு விரும்பி உண்கின்றன. நற்பயனடைகின்றன. இப்பயன்களை நாம் பயன்படுத்தப் பெரிதும் தவறுகின்றோம் என்பது பெரிதும் வருந்தவேண்டியதொன்று. இது வரவேற்கத்தக்கது அன்று.

பனம்பழம் பற்றிய (உள்ளடக்கம்) அறிவு பெற்றிருக்காமையே அதற்குக் காரணமாகும். வறுமையால் ஆட்கொள்ளப்பட்ட நம்மவர்களும், **வழி–வழியாகப் பாவித்துப் பயன்பெற்ற முன்னோர்களும் இதன்மேல் பெரும் பிரியம் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் தற்போதுள்ள நடுத்தர, மற்றும் முதிய வயதினரை துரத்தும் நோய்களான குருதியின் மிகை வெல்ல நிலை** (Hyperglycemia) **குருதியின் மிகைக்கொலஸ்திரோல் நிலை** (Hypercholesterolemia) **மற்றும் மலச்சிக்கல் நிலை** (Constipation) **என்பவற்றால் அவதிப்பட்டார்கள் என்ற கதை வந்ததாக இல்லை.** இந்நாளில் பனம்பழமும் சார் உணவுப் பொருட்களை நாடுவோர் மிகக்குறைவு. ஆனால் பலர் மேற் குறிப்பிட்ட அசாதாரண நிலைகைளுக்குட்பட்டவர்களாக வாழ்கின்றனர். இதற்குக் காரணம் பனம் பழம்சார் உணவுகளின் (உள்ளடக்கங்களின்) பண்புகளை அவர்கள் அறியாதிருப்பதேயாகும். பின்வரும் கருத்துக்கள் அக்குறையை நிவர்த்தி செய்யும் என நம்புகின்றேன்.

பனையின் உடற்கூறுகளும், பனைசார் உற்பத்திகளும் பல வழிகளில் எமக்குப் பயன் தருவனவாக இருப்பினும், நாம் அவற்றை உணர்ந்து கொள்வதில்லை. அதைச் சரியாக அறிந்திருந்தால் எமக்கு அருகில் விலை எதுவுமின்றி அல்லது மலிவாகக் கிடைக்கும் இயற்கைவளத்தைப் பயன்படுத்திப் பயனடையமுடியும். இந்த இயற்கை அளிக்கும் செல்வத்தை நாம் அதுபற்றி அறியாமையால் தவறவிடுகிறோம் என்ற உணர்வு விஞ்ஞானம் அறிந்த அனைவரையும் வாட்டி முடிப்பதற்குள் இதற்கு ஒரு வழி சமைக்கவேண்டுமென்ற எண்ணம் என்னை உறுத்தி வந்தது. இருப்பினும், பனங்களியினைப் பயனுறச்செய்யுமாறு "மில்க்வைற்" சோப் தொழிற்சாலை அதிபரான காலம்சென்ற கலாநிதி கனகராசா அவர்களின் பங்களிப்பும் பனங்களி உபயோகம் சம்பந்தமான ஆய்வுக்குள் (எனது கலாநிதிப் பட்டத்திற்கான கற்கை நெறிக்காலத்தில்) என்னை அமிழச் செய்தது. பனம்களியை தெளிவாக்கல் என்ற தலைப்பின் கீழ் ஆய்வை மேற்கொண்ட யான் அதில் வெற்றியும் அடைந்தேன். இதன் விளைவு இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் 2007ம் ஆண்டிற்கான சூழல் மாசடைதலைக் குறைத்தல் சம்பந்தமான போட்டியில் தேசிய விருதைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தது. இதனால் உந்தப்பட்ட மேற்குறிப்பிட்ட எனது உயிரிரசாயனத்துறைப் பேராசிரியர் அவர்களும் களனிப் பல்கலைக்கழக சிரேஷ்ட இரசாயனத்துறை விரிவுரையாளரும் தந்த ஊக்குவிப்பும் மக்கள் பயன்படுத்தும்படியான தொழிற்சாலை மட்டப் பிரயோகத்தைச் செய்யும்படி என்னைத் தூண்டியது.




இதன் விளைவுதான் பனங்களியைப் பகுதிபடப்பிரித்து அந்தக்களியின் வேண்டாத இயல்பைக் (ஒட்டுந்தன்மையை) குறைத்து அல்லது நீக்கி உணவுத் துறை மற்றும் உயிரிரசாயனத்துறை சம்பந்தமான (மருத்துவப் பயன்பாடுள்ள) பொருட்களாக மாற்ற வைத்தது. இது பனங்களியைப் பனாட்டாக மாத்திரம் அதிக நாட்கள் சேமித்துப் பயன்படுத்தும் பழைய நிலையைச் சற்று விரிவுபடுத்தியுள்ளது. இப்பொருட்கள் பனங்களியின் அதே பண்புகளைக் கொண்டிருப்பினும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் விருப்பத்தை ஏற்படுத்தி நிற்கிறது. அப்பொருட்கள் ஊர்ச்சந்தையில் விற்பனைக்கு வரும் வரை காத்திருப்போம்.

பேராசிரியர் ஜான்சின் (Professor Janz) **கூற்றுப்படி பனங்களியிலுள்ள கயற்புத்தன்மைக்குக் காரணமான பொருள் உடற்சுகத்திற்கு உகந்தது. முக்கியமாக இதய சுகத்தைமெருகூட்டுகின்றது. அத்துடன் உடற் பருமனைக் குறைப்பதற்கு ஏதுவாகின்றது. பனங்களியுடன் செய்யப்படும் பாணம் இவ்வியல்பைக் கொண்டிருக்கும் என்பது வெள்ளிடை மலையாகும்.**

பனங்களியிலுள்ள நார்கள் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பனங்களியை நேரடியாக உண்ணும்போதும், நார்களைப் பிரித்தெடுத்து உண்ணும்போதும் அவற்றின் முக்கியத்துவத்தை அனுபவிக்கின்றோம். **கரையும் நார்கள் குருதியின் வெல்லச்செறிவு உயர்வை மட்டுப்படுத்துவத்துடன் குருதிக் கொலஸ்திரோலின் செறிவு உயர்வை மட்டுப்படுத்தும் இயல்பு கொண்டன.**

(அடுத்த இதழில் தொடரும்..)








# இந்திய வம்சாவழித் தமிழரை இலங்கைத் தமிழர் என அழைப்பது

# சரியா? தப்பா?




**சரி:**

இந்த இந்திய வம்சாவளி மக்கள் யார்.?

எமது தொப்புள்கொடி உறவுகள். தமிழர் அனைவரும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்ததற்கான அடையாளங்களே உண்டு என்கிறார் பிரபல தொல்லியலாளர் **கலாநிதி பொ.ரகுபதி**. அவருக்கு பின்னர் ஆய்வில் ஈடுபட்டவர்களும் இதே கருத்தைக் கொண்டவர்களே.

அவ்வாறு பார்த்தால் தென்னிந்தியாவிலிருந்து வந்த கடைசித் தமிழர்கள் மன்னாரில் கப்பலில் இறக்கப்பட்டு இலங்கையின் மலைநாட்டுப் பகுதிவரை நடத்திச் செல்லப்பட்டனர்.

இலங்கையில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் அதாவது 19ஆம் 20 ஆம் நூற்றாண்டுகளில் கோப்பி, தேயிலை, இறப்பர் செய்கைக்காக கொண்டுவரப்பட்டவர்கள் அவர்கள்.

**1949 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்து ஓராண்டில் இந்த பிந்திவந்த இந்தியத் தமிழ்மக்களை நாடு கடத்தவேண்டும், அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கக்கூடாது என பாராளுமன்றில் சிங்களத் தலைவர்கள் எடுத்த முடிவிற்கு தமிழ் காங்கிரஸ் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலம் மட்டுமே ஆதரவாகச் பேச, தந்தை செல்வநாயகம், வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் போன்றவர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், இந்தக் கொள்கை முரண்பாட்டுடன் தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்து இலங்கை தமிழரசுக்கட்சியையும் உருவாக்கினார்கள்.**

தமிழரசுக் கட்சியின் முதலாவது கூட்டம் 1952 இல் திருகோணமலையில் நடைபெற்றபோது **"மலையகமக்களின் குடியுரிமையை இன்று பறிப்பவர்கள் நாளை ஏனைய மக்களின் குடியுரிமையையும் பறிப்பதற்கு பின்நிற்க மாட்டார்கள்"** என்ற கூறியதுடன், அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் **ஒன்று மலையக மக்களுக்கு குடியுரிமை வழங்கப்படல் வேண்டும்** என்பதாகும். அந்த அளவிற்கு மலையக மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்புகள் என்ற எண்ணம் இத்தமிழ்த் தலைவர்களிடம் இருந்தது.

அந்தவகையில் மலையக மக்களை அரவணைத்தது மட்டுமல்லாது அவர்களை வட -கிழக்கு மக்களுடன் இணைத்துப் பார்ப்பதன் மூலம் இலங்கையின் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தையும் தக்க வைத்துக்கொள்ள முடியும். இன்றுள்ள பல மலையக அறிஞர்கள் தமது மாணவப் பருவத்தில் யாழ்ப்பாணத்தில் வந்து கல்வி கற்றவர்களே. பிற்பட்ட நாட்களில் அத் தொடர்புகள் குறைந்து 2009 மே வரையான கலப்பகுதிவரை இத்தொடர்புகள் குறைவாக இருப்பினும் , பிரஜாவுரிமை, வாக்குரிமை பெற்று இலங்கையில் வாழ்ந்து வரும் மலையகத் தமிழரை இலங்கைத் தமிழர் என்று அழைப்பது சரியானது. தமிழர் என்ற அடிப்படையில் அணுவதே நியாயமானது.

**தப்பு:**

மலையக மக்கள் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கைக்குள் வந்து சேர்ந்த காலத்திலிருந்து அரசியல், பொருளாதார, சமூக மேம்பாட்டு விடயங்களில் பாதிப்பான ஒரு சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் வாழுகின்ற சூழல் சிங்களக் கிராமங்களால் சூழப்பட்டதாகும். இதனால் அவர்களுக்கும் வடகிழக்கில் உள்ள தமிழருக்குமான உறவுகள் இட அமைவின் அடிப்படையில் பார்த்தாற்கூட பொருத்தமற்றதாகும்.

வட-கிழக்கு தமிழ் அரசியற் தலைவர்கள் தமிழ்நாட்டு அரசியலை நம்பியபோதிலும், சௌமியமூர்த்தி தொண்டமான் ஓர் இந்தியனாக இருந்தபோதிலும், தமிழ்நாட்டு அரசியலுடன் மலையக மக்களை இணைத்துக்கொள்ளவில்லை.

மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை, வாக்குரிமை, மற்றும் வாழும் உரிமை போன்ற விடயங்களை ஜனநாயக மரபுகளுக்குள்ளும், இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்பவும் பெற்றுக்கொடுத்தவர் தொண்டமான்.

**சௌமியமூர்த்தி தொண்டமானைப் பொறுத்தவரை தனது தந்தையாரால் இலங்கைக்கு கூட்டிவரப்பட்ட மக்களுக்கான சகல உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதில் அக்கறை செலுத்தியவர்.**

1956, 1977, 1983, இனக்கலவரங்களின் போது மலை யப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் ஒரு புறம்போக்கான இடத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் குடியேற்றப்பட்டு அவர்களை தொடர்ந்தும் கூலித்தொழிலாளர்களாக வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது.

இம்மலையக மக்கள் குடியேறியதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட முத்துஜயன்கட்டு, விசுவமடு, திருவையாறு போன்ற ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களில் அவர்களுக்கு விவசாயக் காணிகள் வழங்கப்படவில்லை. மாறாக அந்த விவசாயத் திட்டங்களில் அவர்கள் கூலிகளாகவே உழைத்தனர்.

இன்று இலங்கையில் சிங்களவர், வட கிழக்குத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் என்ற நான்கு இனங்கள் வாழ்ந்து வருகின்றன. வடகிழக்கில் இருந்து பெருந்தொகையான மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டதால் தமிழரின் பெருக்கம் குறைந்து வருகின்றது. அந்த இடைவெளியை ஈடுகட்டுவதற்காக மலையக மக்களையும் இலங்கைத் தமிழர் என வடகிழக்குடன் இணைத்துப் பார்ப்பது தப்பு. **மலையகத் தமிழருக்கு என்று ஒரு நிலம் உண்டு. மொழி உண்டு. உழைப்பு உண்டு. கலாசாரம் உண்டு. அரசியல் அந்தஸ்து உண்டு. கலாசார விழுமியங்கள் உண்மைஅவர்களின் முதலீடுக்ள கொழும்புவரை வியாபித்துள்ள நிலையில் வடகிழக்குடன் இணைந்து செயற்படும் நிலையை "இலங்கைத் தமிழர்" என்பதன் மூலம் கரைத்துவிட வாய்ப்புண்டு.**

**வடகிழக்குடன் மலையக மக்கள் இணைத்துப் பார்க்கப்படும்போது வடகிழக்கில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்கள் மலையக மக்கள் மீது சிங்கள மக்களை கோபப்பட வைக்கும். நிலையே ஏற்படும். அது அவர்களின் தற்போதைய இருப்பைக் கேள்விக்குள்ளாக்கிவிடும்.**

**மலையகத் தமிழர் அல்லது இந்தியத் தமிழர் என்ற இனம் தமிழாக இருப்பினும் அது ஒரு தனியான இனம் என்பதை மறுக்கமுடியாது. இந்நிலையில் இந்திய வம்சாவளித் தமிழரை இலங்கைத் தமிழரென அழைப்பது தப்பு.**

இலங்கை அரசியலில் மலையகத் தமிழர்கள் ஒரு சக்திமிக்க மனிதர்களாக அல்லது வேண்டப்படும் மக்களாக ஆகிவிட்டனர் என்பதே உண்மை.



# ஓட்டிசம்



நேரடியாக கண்களைப் பார்ப்பதைத் தவிர்ப்பது, ஒரே மாதிரியான செயலை மீண்டும் மீண்டும் செய்வது, பிற குழந்தைகளுடன் கலந்து விளையாடாமல் இருப்பது, பேசாமல் இருப்பது என்று ஓட்டிசத்திற்கான சில அடையாளங்கள் என்று சொல்லப்படுகின்றன.


## செய்யவேண்டியதும் / செய்யக்கூடாததும்

**யெஸ் - பாலபாரதி**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

தெரபிஸ்டோடு நல்ல உறவு வந்த பின்னரே, குழந்தை அவர்கள் சொல்லுவதைச் செய்யத் தொடங்கும். இதனை அறியாத பல பெற்றோர் இடத்தை மாற்றிக்கொண்டிருக்கும் தவறை அடிக்கடி செய்கிறார்கள்.எது நல்ல தெரபி மையம்? இதுதான் ஓட்டிச நிலைக் குழந்தைகளின் பெற்றோருக்கு ஏற்படும் அடிப்படைச் சந்தேகம். எந்த தெரபிஸ்ட் உங்கள் குழந்தையின் நடவடிக்கை பற்றி மதிப்பிட்டுக் கொடுத்து, வீட்டிலும் இதை இதைச்செய்யுங்கள் என்று சில பயிற்சிகளை அறிவுறுத்துகிறாரோ, அவரே நல்ல தெரபிஸ்ட். ஏனெனில், ஒரு தெரபிமையத்தில் குழந்தை இருக்கும் நேரத்தைவிட, வீட்டில்தான் அதிக நேரம் இருக்கிறது. அப்போது குழந்தையை எப்படிக் கையாள்வது என்பதும், எந்த மாதிரி, குழந்தையை பயிற்சிகள் மூலம் பிஸியாக வைத்திருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் (தெரபிஸ்ட்) சொல்லிக் கொடுக்கவேண்டும். அப்போதுதான், குழந்தையிடம் விரைவாக முன்னேற்றத்தைக் காண்முடியும்.

அதுபோல, குறிப்பிட்ட தெரபி வகுப்புக்குச்செல்லும்போதோஅல்லது தெரபிவகுப்பின் வாசலிலோ குழந்தை உள்ளே போகமாட்டேன் என்று தொடர்ந்து அழுது அடம்பிடித்தால், அங்கே ஏதோவொரு விடயம் சரியில்லை என்று பொருள். இச்சமயத்தில், உடனடியாக இடத்தை மாற்றிவிட வேண்டும். ஓட்டிசத்தை இல்லாமல் செய்ய மருந்து இல்லை உலக அளவில் ஓட்டிசம் குறித்தான ஆய்வுகள் நடந்தவண்ணம் உள்ளன. இது ஏன் வருகிறது என்பதையே இன்னும் அறுதியிட்டு கண்டுபிடிக்க முடியவில்லை என்பதால், இதற்கான மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. அதேசமயம், இக்குழந்தைகளின் இதரபிரச்சினைகளுக்கு மருந்து கொடுக்கப்படுவதுண்டு. (உதாரணமாக வலிப்பு, ஹைப்பர் நடவடிக்கைகளின் தீவிரத்தைக் குறைக்க, குழந்தைகள் உறங்க இப்படி)பல மாற்றுமருத்துவர்கள், நாங்கள் ஓட்டிசத்தை முற்றிலும் குணமாக்குவோம் என்று விளம்பரம் செய்துவருவதை நீங்கள் காணமுடியும். அப்படி வரும் விளம்பரங்களை நம்ப வேண்டாம். ஓட்டிசம் ஏதோ இங்கே மட்டும் இருப்பதாக நினைக்கவேண்டாம். உண்மையிலேயே ஓட்டிசத்திற்கு மருந்து கண்டுபிடித்திருந்தால், உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவராகிவிடுவார் அம்மருத்துவர். மேலை நாடுகளில் எல்லாம் இவர் புகழ் பரவி, இங்கே படையெடுக்கத் தொடங்கிவிடுவார்கள். அதனால்தான் சொல்கிறேன். போலி விளம்பரங்களைக் கண்டு ஏமாறாதீர்கள். ஒருவேளை உண்மையிலேயே இதற்கு மருந்து கண்டுபிடிக்கப்பட்டால், செய்திகள் வழியாகவும் உங்கள் குடும்ப மருத்துவர் வழியாகவும் உங்களுக்குச் செய்தி எட்டிவிடும். அதற்காக, மாற்று மருத்துவமே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆங்கில மருத்துவத்துறை கொடுக்கும் மருந்துகள் போன்றே, வலிப்பு, உறக்கமின்மை, பசியின்மைபோன்றவற்றுக்கு மாற்று மருந்துகள் நல்ல பலனைக் கொடுப்பதாக பல பெற்றோர்சொல்லிஅறிகிறேன். வாழ்க்கை வாழ்வதற்கே! குழந்தைக்கு ஓட்டிசம் என்று தெரிய வரும்போது, பல பெற்றோர் முடங்கி விடுகின்றனர். எப்போதும், குழந்தையின் பின்னாலேயே ஓடிக்கொண்டிருக்கின்றனர். தங்களைக் கவனித்துக் கொள்ளத் தவறிவிடுகின்றனர். இதன் காரணமாக இரத்தக்கொதிப்பு, மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றன. சுவர் இருந்தால் மட்டும்தான் சித்திரம் வரைய முடியும். அதுபோல, பெற்றோரின் உடல், மனம் நன்றாக இருந்தால்தான் இப்படியான சிறப்புக் குழந்தைகளை நன்கு கவனித்துக்கொள்ள முடியும் என்பதை எப்போதும் நினைவில் நிறுத்துவது நல்லது.



அதுபோலவே பிற ஓட்டிச நிலைக் குழந்தைகளின் பெற்றோருடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அடுத்தவரின் அனுபவங்கள் என்பது குழந்தைக்கு மட்டுமல்ல, பெற்றோருக்கும் பெரும் உதவியாக இருக்கும்.குழந்தை பற்றிய கவலையிலேயே எப்போதும் மூழ்கி விடாமல், தங்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கு விஷயங்களுக்கும் நேரம் அறிந்து ஒதுக்கி, அதில் ஈடுபட வேண்டும் என்று மருத்துவர்கள் சொல்லி வருகின்றனர்.வாழ்க்கை என்பது வாழ்வதற்குத்தானே ஒழிய, கவலைப்பட்டு சோர்ந்து போய்விடுவதற்கல்ல! நம்பிக்கையோடுநடை பயில்வோம்!

(நன்றி:- செல்லமே மாத இதழ் - ஏப்ரல் 2016)

### இரு கைகளாலும் எழுதுவது நல்லது

சீனா, ஜப்பான் ஆகிய இருநாடுகளிலும்சிறுவயதிலிருந்தே இரு கைகளாலும் எழுதும் வழக்கத்தைப் பயிற்றுவிக்கின்றனர். வலது கையால் எழுதுபவர்களுக்கு இடதுபுற மூளையும், இடது கையால் எழுதுபவர்களுக்கு வலதுபுற மூளையும் செயற்பாட்டில் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இரு கைகளாலும் எழுதப்பழகுவதால் இருபக்க மூளையும் எந்நேரமும் செயற்பாட்டில் இருக்கும் இதுதான் தோப்புக்கரணம் செய்யும் போதும் மூளைக்கு நடைக்கிறது.



### பரண்

இவ்வாறுதான் பாத்திரங்களைக் கழுவி எமது முன்னோர்கள் சுத்தமாக அடுக்கி வைத்திருந்தார்கள். அதில் போதியளவு சூரிய வெளிச்சம் பிடிக்கும்.

தற்போது ஒரு சில கிராமங்களில் பரண் பாவனையில் உண்டு.


# ஐயோ! தமிழருக்கு இன்னுமொரு கட்சியா?



முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா, பிரபாகணேசன் ஆகியோர் இணைந்த ஜனநாயக தமிழத்தேசிய முன்னனி என்ற புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. இதில் 10 தமிழ் அரசியற் கட்சிகள் இணைந்துள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் ஏற்கனவே இருக்கும் கட்சிகள் சரியான முறையில் இயங்கவில்லை என்பதே இக்கட்சியின் குற்றச்சாட்டாகும்.

மேலும் மேலும் கட்சிகளையும் கொள்கைகளையும் விரிவுபடுத்துவதன் மூலமோ, விவாதிப்பதன் மூலமோ தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வு வந்துவிடப்போவதில்லை. பல முகாம் கள் உருவாகி தமிழர் தமக்குள் முரண் படவே இது வழிவகுக்கும்.



**மகன்:** அப்பா அவனுக்கு ஏன் மூக்கு நீளமாக இருக்கிறது.

**தகப்பன் :** அவன் எதையும் இலவசமாக பெறுகின்ற பெயர்வழி காற்று இலவசமாகக் கிடைக்கிறது என்பதால் கூடுதலாக காற்றை உள்ளே இழுத்ததால் மூக்குப் பெரிதாகி விட்டது.

## வியட்நாம் மீண்டும்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

வியட்நாமிற்கு விஜயம் செய்துள்ளார். தடைகளினால் வியட்நாமை பணிய வைக்க முடியாத அமெரிக்க அதி-கார வர்க்கம் நேசக்கரம் நீட்டி நாசம் பண்ணலாம் என்று புறப்பட்டு விட்டதோ என்று லிபியாவின் வர லாற்றனுபவங்களைக் கண்ட மனித உரிமை ஆர்வலர்கள் அச்சம் தெரி வித்துள்ளனர். இதே முறமையை கியூபாவில் நடைமுறைப்படுத்த முயன்று வரும் அமெரிக்கா தற் போது தனது காலை அகலப்பதிக்க முயல்கின்றது.

1979 களில் 50000 வியட்நாமியரை பலிகொண்ட சீன வியட்நாம் யுத்தம் மிக எளிதில் வியட்நாம் மக்களைச் சீனாவுடன் உறவு கொள்ள அனுமதிக்கவில்லை. கூடவே வியட் நாமின் விடுதலைக்கு சோவியத் யூனியனின் பங்களிப்பு என்பதுவும் அன்றைய சோவியத்யூனியின் சீனா உடனான முரண்பாடுகளும் வியட் நாமை இன்றைய ரஷ்யா பக்கம் சார்ந்திருப்பதற்கான காரணகாரி யங்கள் நிறையவே உண்டு.

அக்காலகட்டங்களில் சோவி யத்தை எதிர்கொள்வதற்காக என்று கூறிய வண்ணம் சீனா அமெரிக்கா வுடன் நல்ல உறவில் இருந்தது. வியட் நாமின் பகை முரண்பாட்டு உறவில் உள்ள அமெரிக்காவுடன் தனது நேச முரண்பாட்டிலிருந்த சீனாவின் உறவு வியட்நாமை சீனா பக்கம் நெருங்காமல் தள்ளி நிற்பதற்கான தேவைகளை ஏற்படுத்தியும் இருந்தது என்பதுவும் இங்கு கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயம். அமெரிக்க ஜனாதிபதி றொனால் றேகன் ரஷ்ய தலைவர் பொறிஸ் யெல்ஸ்ரனுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவுகளும் சோவியத் யூனியனில் வலிந்த உடைவை ஏற்படுத்தியது. இதற்கு பின்னர் ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கமும் போரைத் தவிர்த்து உற்பத்தியில் கவனம் மட்டும் செலுத்திய சீனாவை உலகப் பொருளாதார வல்லரசாக்கியுள்ளது. அமெரிக்காவின் உலகப்பொருளாதார வல்லரசுக்கான முதலிடத்தைஆட்டம் காணவைத்த சீனாவின் செயற் பாட்டை என்னவோஎல்லாம் செய்து ஏதும் செய்ய முடியாத நிலையில் சீனா வுடன் முரண்பாடு உள்ள நாடுகளை சீனாவிற்கு எதிராக சிண்டு முடிந்துவிடும் நோக்கங்கள் அமெரிக்காவிற்கு இருக்காது என்பது வாய்மை என்று கூறும் பொய்மை கள் ஆகும். தென் சீனக்கடலில் வியட்நாமின் உரிமத்தை மறுக்கும் சீனாவின் அண்மையச்செயற்பாடுகள் இருநாடுகளும் தமது கடற்படையை அப்பிரதேசத்தை நோக்கி நகர வைத்தது முறுகல் நிலையை உரு வாக்கியது. இந்த முறுகல் நில மையை அமெரிக்கா வியட்நாமுடன் நண்பன் என்று வேடம் போட்டு சீனாவிற்கு எதிராக பயன்படுத்தவே முயலும். மீண்டும் அண்மை காலங் களில் வியட்நாமின் ஆட்சேபனை களையும் உதாசீனம் செய்த வண் ணம் தென் சீனக் கடற் பிராந்தி யத்தில் எண்ணை ஆய்விற்கு தன்னைத் தயார்படுத்த முயலுகின் றது சீனா. சீனாவின் இச் செயற் பாடு வியட்நாம் மக்கள் தமது நாட் டில் சீனாவிற்கு எதிரான போராட் டங்களை மீண்டும் நடாத்தவே தூண்டும். இவை எல்லாவற்றை யும் 'பாலுக்கு பூனை காவல்' என்ற வகையில் அமெரிக்கா பயன் படுத்த முயலும் செயற்பாட்டுக்கன வுடனேயே வியட்நாமிற்கான பொரு ளாதாரத் தடைவிலகல் - ஒபமா வின் வியட்நாம் இற்கான விஜ யம் ஆகியவற்றைப் பார்க்க முடியும்.

இதில் தற்போது வளர்ந்து வரும் ரஷ்யா - சீன உறவை ரஷ்யா பயன்படுத்தி வியட்நாம், சீனாஆ-கிய இருநாடுகளுக்கும் இடை-யில் தென் சீனக் கடலில் உரி-மம் சம்மந்தமான விடயத்தில் ஒரு சுமூகநிலையை ஏற்படுத்த பயன்படுத்த வேண்டும் அமெரிக்கா என்ற 'பால்காவலன் பூனையைத் துரத்தவேண்டிய கடப்பாடு உண்டு. ரஷ்யாவிற்று நிறையவே உண்டு. சிரியாவில் ரஷ்யா தனது மௌனத்தைக் கலைத்து ஐ.எஸ் இற்கு எதிரான தாக்குதலைத் தொடங்கி சிரி யாவில் அமெரிக்காவால் உருவாக்க பட்டஅமெரிக்க ஆதரவுக்கலகப் படை-யை கையறு நிலைக்கு கொண்டு வந்தது மட்டும் அல்லாது சிரியா விற்கெதிரான அமெரிக்காவின் கபடத் தனமான செயற்பாடுகளை அம்பலப் படுத்தி இருக்கின்றது. இதன் மூலம் சிரியாவில் இடைவிடாத வலிந்த யுத்த அழிவுகளை ஒரளவிற்கேனும் கட்டுக்குள் கொண்டு வந்தது போன்ற செயற்பாட்டை வியட்நாம் - சீனா விடயத்தில் அமெரிக்காவை அப்புறப்படுத்தும் செயற்பாட்டை செயற் படுத்த வேண்டும். ரஸ்ஸியாவின் இச் செயற்பாடு வியட்நாமுக்கும் சீனாவிற்கும் ஏன் முழு உலக மக்களுக்கு நன்மை பயக்கும் விடயமாக அமையும்.

வியட்நாமின் வெறும் 40 வருடகால சோசலிச வழிப் பயணம் சோவியத் யூனியன் போன்றவர்களின் உதவி கள் பெறமுடியாத நிலையில் பயணத்தை மேற்கொண்டது என்பது பாராட்டப்பட வேண்டிய விடயம். அதேவேளை வெறும் 40 வரு டங்கள் சமூக மாற்றத்திற்கும் நாட் டைக் கட்டியெழுப்புவதற்கும் போது மானது அல்ல.

ஆனாலும் **விலைபோகாத வீரங்களையும் அர்பணிப்புக்களை யும் கொண்ட வியட்நாம் மக்கள் அமெ ரிக்காவின் கபடத்தனமான செயற்பாடு களுக்கு இடமளிக்க மாட்டார்கள் என் பதும் அவ்வாறு அமெரிக்கா நடக்க முற்பட்டால் மீண்டும் ஒரு உலங்கு வானூர்த்தி தரையில் இறங்காமல் அமெரிக்க நாட்டு உளவாளிகளை கட்டடத்தின் கூரையில் இறங்கிக் காவிக் கொண்டு ஓடும் பாடத்தை வியட் நாம் மக்களிடம் கற்றுக்கொள்ள வேண்டிவரும் என்பது எதிர்கால வரலாறாக அமைவதற்கு நிறை யவே சாத்தியங்கள்**

# முல்லையில் பாரம்பரிய உணவு

பாரம்பரிய உணவுகளை தயாரிப்பது மட்டுமல்ல அவற்றை உண்ணும் பழக்கமும் இளைய தலைமுறையின ரிடம் அருகிவிட்டது. சாதாரண கிரா மத்து சந்தைகள் மாறி சுப்ப மார்க் கட் கலாசாரத்திற்கு வந்ததன் விளைவே அது.

ஓர் இனத்திற்குரிய விழுமியங் களில் சுவையான பாரம்பரிய உணவு களைத் தயாரித்து உண்பதும் ஓர் அடையாளமாகும். பல சுவையான உணவு தயாரிப்பு முறைகூட இளைய சந்ததியினருக்கு தெரியாதுள்ளது.

இந்நிலையில் வடமா-காண விவசாய அமைச்சு 70 இலட்சம் ரூபா செலவில் பாரம்பரிய உணவு விற்பனைக்கான ஒரு மையத்தை ஆரம்பித்திருப்பது மிக வும் வரவேற்கத்தக்கது. வடமாகாண விவசாய அமைச்சர் பொஜஙகரநேச னின் சிறந்த ஒரு வேலைத்திட்டமாக இதைக் குறிப்பிடமுடியும். பலருக்கு வேலைவாய்ப்பு , உள்ளூர் உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்கும் வாய்ப்பு என்பனவும் இதன் மூலம் அடையப்படும். முல்லைப் பெண் கள் விவசாய விரிவாக்க அமைப்பு சிறந்த முறையில் செயற்படுவதன் மூலம் மட்டுமே இது போன்ற பல புதிய திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும்.

# MS EDSPRING ஆய்வு நூல் நிலையம்

"பேராசிரியர் மா.சின்னத்தம்பி. இந்தப்பெயர் பொருளாதாரம், கல்வி ஆகிய இரு துறைகளிலும் இலங்கையில் நன்கு அறியப்பட்ட பெயர். பொருளியல் ஆசிரியராகவும் கல்வித்துறைசார் பேராசிரியராகவும் தனது கல்விப்பணியைத் தொடர்ந்தவர். சுமார் 40000 மேற்பட்ட மாணவர்களுக்குகல்வி கற்பித்தவர். 1970 களிலிருந்து அவர் சேகரித்த நூல்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ள நூல் நிலையமே MS EDSPRING என்பதாகும். இது விடயமாக முகவரி சார்பாக நேர்காணல் ஒன்றை நடத்தியிருந்தோம்."




**கேள்வி:** தனிநபரான தாங்கள் நூல் நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என ஏன் சிந்தித்தீர்கள்?

**பதில்:** என்னிடம் 1970 ஆண்டு காலப்பகுதியிலிருந்து சேகரித்து வருகின்ற புத்தகங்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி அறிக்கைகள், பொருளியல் நோக்கு போன்ற மிகப் பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் உண்டு. அவை எதிர்காலத்தில் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் ஆரம்பித்தேன்.

**கேள்வி:** இதற்கு வேறு நோக்கங்கள் உண்டா?

**பதில்:** ஆம். அதில் பிரதானமாக நான்கு விடயங்களைக்குறிப்பிடலாம்.

1. பொருளாதாரம், கல்வி ஆகிய பாடவிதானங்களில் எனது தேடல்கள் வீணாகிவிடக்கூடாது என்பது.
2. நான் படித்து எனது துறைக்கு ஓர் அர்ப்பணிப்பான வேலையை செய்திருக்கிறேன் என்ற மகிழ்ச்சி. அதேவேளை, எனது கல்வித் துறைக்கு நன்றிக்கடனாக இதை உருவாக்கினேன்.
3. யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளும், ஆசிரியர்களும் பெரும் எண்ணிக்கையில் இருப்பதால் ஆசிரியர்களுக்கு பெரிதும் உதவும். அதேவேளை, ஆசிரியர் கல்லூரி, கல்வியியற்கல்லூரி ஆகியவற்றில் பயில்வோருக்கும் உதவும்.
4. அழகப்பா பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பை தொடருகின்ற மாணவர்களுக்கு பயனுள்ள பல ஆவணங்கள் இங்கு உண்டு.

**கேள்வி:** தங்களது நூல்நிலையம் திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் கட்டடத்தில் உள்ளது. அங்குஏன் இந்த நூல் நிலையத்தை ஆரம்பித்தீர்கள்.

**பதில்:** உண்மையில் இந்த விடயத்தில் முதலில் திரு.பாலமுகுந்தன் ஆசிரியர் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் திரு.பஞ்சலிங்கம் ஆகியோருக்கு நன்றி கூற வேண்டும். அவர்கள் இருவரும் தான் தற்போது இயங்கும் கட்டடத்தையும் தந்து இயக்குநர் சபையிலும் என்னுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

திருநெல்வேலியில் நான் பல்கலைக் கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, ஆசிரிய கலாசாலை, மற்றும் கல்வியியற் கல்லூரி என சகல கல்வித் துறைசார் மையங்களும் அமைந்துள்ளது. இதைவிட தென்னிந்தியாவில் அழகப்பா பல்கலைக்கழக இணைப்பு அலுவலகமும் நூல் நிலையம் அமைந்திருக்கும் இடத்திலேயே இயங்கி வருகிறது.


**கேள்வி:** பட்டமேற்படிப்பிற்கான நூலகமாக பேணும் அளவிற்கு பட்டப்படிப்பில் ஈடுபடுபவர்களின் தொகை அதிகமாக உள்ளதா?

**பதில்:** ஆம். 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின் 2010 ஆம் ஆண்டிலிருந்து உயர் கல்வியில் தமிழ் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதை அவதானிக்க முடிகிறது. யாழ். பல்கலைக்கழகத்தில் 100 பேர் கொண்ட 11 அணிகளும் வெளியேறியுள்ளனர். அதேவேளை, வவுனியா பல்கலைக்கழகத்தில் 100 பேர் கொண்ட 04 அணிகள் என 1500 ஆசிரியர்கள் கடந்த 06 வருட காலப்பகுதியில் தமது மேற்படிப்பை முடித்துள்ளனர்.

**கேள்வி:** இந்த நூல் நிலையத்தை எப்போது ஆரம்பித்தீர்கள்? உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா?

**பதில்:** நூல்நிலையம் தொடங்கி ஒரு வருடமாகிறது. முதலில் அவ்வளவாக பட்ட மேற்படிப்பைப் படிப்பவர்களைக் கவரவில்லை. ஆனால், பின் அரை ஆண்டில் அதிக மாணவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். மட்டக்களப்பு போன்ற தூர இடங்களிலிருந்து வருபவர்கள் கூட இந் நூல் நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**கேள்வி:** எவ்வாறான நூல்கள்




அதிகமாக உள்ளன?

**பதில்:** உண்மையில் நூல்களை விட சஞ்சிகைகள், அறிக்கைகள் போன்றனவே அதிகமாக உள்ளன. நூல்களை விட சஞ்சிகைகள் சமகாலத்தின் புதிய பல ஆய்வுகளை விரிவாக வெளியிடுகின்றன. ஒரு சஞ்சிகையில் பல்வேறு விதமான ஆய்வாளர்கள் எழுதுவதுண்டு. எனவே அவற்றினூடாக துறைசார்ந்த அறிவை அதிகம் பெற முடிவதுடன் மேலும் எவ்வாறான நூல்களைத் தேடிப் படிக்கவேண்டும் என்பதையும் இலகுவில் அறிந்துகொள்ள முடியும்.

**கேள்வி:** தங்களது நூல் நிலையம் நூலக வரன்முறைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதா?

**பதில்:** ஆம். யாழ்.பல்கலைக்கழக உதவி நூலகரான திருமதி சந்திரசேகரம் அவர்கள் இந்த விடயத்தில் அதிகம் உதவியிருக்கிறார். நூல்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு சிறப்பாக நூலக ஒழுங்கு பேணப்பட்டு வருகிறது.

**கேள்வி:** சஞ்சிகைகள் சிறந்தது என்பதை தாங்கள் எப்போது உணர்ந்துகொண்டீர்கள்?.

**பதில்:** எனது முதலாவது தொழிலாக யாழ்ப்பாணக் கல்லூரியில் பொருளியல் விரிவுரையாளராக பதவியேற்றேன். அக் காலகட்டத்தில் கலாநிதி தியாகராசா காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்தவர். அவர் பின்னர் அரசியலிலும் பிரபலயம் அடைந்தவர்.

அவர்தான் முதலில் உலக வங்கியின் பொருளாதார அறிக்கைகள் தொடர்பில் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் உனக்கு இலவசமாக அவற்றை அனுப்புவார்கள் என்று எனக்கு வழிகாட்டியவர். எனக்கிருந்த ஆங்கில அறிவு அதற்கு மிகவும் உதவியது.

**விஜயன்**

**கேள்வி:** வேறு யாரைக் குறிப்பிடுவீர்கள்?

**பதில்:** சுழிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் D+C என்ற சஞ்சிகை ஒன்றைத் தந்து "இது நல்ல சஞ்சிகை இதற்கு எழுதினால் இலவசமாக அனுப்பு வார்கள்" என்றார். அதுவும் எனக்கு கடந்த 40 வருடங்களாக தொடர்ந்தும் கிடைத்து வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு ஆங்கிலத்தில் வாசிக்கும் ஆர்வம் இருந்தமையே இவற்றைத் தூண்டிய காரணியாகும்.

இரண்டுஜேர்மனியும் இணைந்ததன் பின் டொச்லான்ட் என்ற சஞ்சிகையும் எனக்குத் தொடர்ந்தும் கிடைத்து வருகிறது.

**கேள்வி:** தமிழ் மொழிமூலப் பதிப்புக்கள் உள்ளனவா?

**பதில்:** தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் அதிகம் இருக்கின்ற போதிலும் தமிழ்மொழியில் படிப்பதற் கான ஆர்வம் குறைவாகவே உள்ளன. ஆனால் இந்த நூல் நிலையத்தில் தமிழ்மொழி மூல புத்தகங்கள் அதிகம் சேகரிக்கப்பட்டுள்ளது.

(அடுத்த இதழில் தொடரும்)

# கிழக்கு மாகாண முதலமைச்சர் VS கடற்படை அதிகாரி

இந்த விடயம் பரவலாக அலசப்பட்டு வருகிறது திருகோணமலையிலிருந்து சம்பூர் செல்வது தொடர்பில் உலங்கு வானூர்தி பயணத்தில் ஏற்பட்ட சர்ச்சையே இது. மற்றும் குறிப்பிட்ட விழாவிற்கு முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்தும் அவர் அதற்குள் புகுந்து பின்னர் கடற்படை அதிகாரி மற்றும் ஆளுநருடனும் பிரச்சினையை உருவாக்கியுள்ளார்.

இது முதலமைச்சரின் தனிப்பட்ட அணுகுமுறையில் ஏற்பட்ட குறைபாடாகும். அதற்கு **“சிறுபான்மை இனங்களை சிங்களத் தலைவர்கள் இவ்வாறுதான் நடத்துவார்கள்”** என்று கூறப்படுவது பிழையானது.

சிறுபான்மை இனம் என்றால் தமிழரும் அதில் அடங்குவர். அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு தனிப்பட்ட நபரின்



பிழையான அணுகுமுறையை ஓர் இனத்தின் பாதிப்பாக எடுத்துக்கொள்வது மக்கள் தலைவர்களுக்குரிய சிறப்பல்ல.

முஸ்லிம் அரசியல் தலைவர்களில் எம்.எச்.எம்.அஷ்ரப்பிற்கு அடுத்தபடியாக முதிர்ந்த தலைவராகக் காணப்படுகின்ற அமைச்சர் ரவூப் ஹக்கீம் “இது விடயத்தில் முதலமைச்சர் நசீர் அஹமட் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதுதான் சரியான அணுகுமுறை” என்கிறார்.

இந்த முரண்பாட்டை கிழக்கு மாகாண மக்களின் நலன்கருதி முதலமைச்சர் மேற்கொண்டதாக யாரும் கூறிவிட முடியாது. அதே வேளை, ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை பதவி விலக வேண்டும் எனவும் மகிந்த அரசும் மைத்திரி-ரணில்அரசும்சிறுபான்மைஇனங்களை புறக்கணிக்கிறது என்று கூறுவதில்நியாயமில்லை.

– நித்தி



# ஒரு முரட்டுக்கரம் முடங்கிப்போனது.

குத்துச்சண்டையின் பிதாமகன் முகமது அலி 04.06.2016 இல் காலமானார். 1942.01.17 இல் அமெரிக்காவில் பிறந்தவர். இவரது இயற்பெயர் கசியஸ் மாஷலஸ் கிளே (Cassius Marcellus Clay). இவர் தனது 12 ஆவது வயதில் குத்துச்சண்டையை ஆரம்பித்தவர். தனது விருப்பத்திற்குரிய சைக்கிளை யாரோ திருடிவிட்ட ஆத்திரத்தில் அவனுக்கு முகத்தில் குத்தவேண்டும் என்று நினைத்ததே இதன் அடிப்படை எனலாம்.

கறுப்பு இனத்தவரான இவர், அமெரிக்காவின் கறுப்பின மக்களுக்கு எதிரான வெள்ளையரின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்தவர்.

இவர் ஒரு குத்துச்சண்டை வீரர் என்பதற்கு அப்பால், மனிதாபிமானம் உள்ளவராக இருந்தார். அமெரிக்கா வியட்நாமுக்கு எதிரான போரில் முனைப்பாக ஈடுபட்டிருந்தபோது இவரையும் வியட்நாமுக்குச் சென்று போராடுமாறு பணித்தபோது “அந்த அப்பாவி வியட்நாம் மக்களை கொல்லநான் போகமாட்டேன்” என்று வாதாடியவர்.

1960 இல் ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்று தங்கத்தால் ஆன கையுறைகளைப் பெற்றவர். 03 தடவைகள் உலகின் அதிபார குத்துச்சண்டையில் சம்பியனானவர்.

பாகின்சன் என்ற நரம்பு நோயினால் பாதிக்கப்பட்ட இவர், 30 வருடங்களாக குத்துச்சண்டையில் ஈடுபடமுடியாத அளவிற்கு ஒதுங்கியிருந்தார்.

1964 இல் இஸ்லாத்திற்குத் தழுவிய இவர் தனது இயற்பெயரை முகமட் அலி என்று மாற்றிக்கொண்டார். சிறந்த பேச்சாளரான இவர், தான் பிறந்த ஊரான லூயிஸ்வில்லே இன் பெயரால் The Louisville Lib – லூயிஸ்வில்லேயின் உதடு என்று பெருமைப்படுத்தப்பட்டவர்.

நிறவெறிக்கு எதிரான முரண்பாட்டால் தனக்கு கிடைத்த ஒலிம்பிக் தங்கப்பதக்கம் ஒன்றை ஆற்றில் வீசியெறிந்தவர்.

Sonny Liston என்ற குத்துச்சண்டை வீரருடன் மோதி 06 ஆவது சுழற்சியில் அவரை வென்றவர். அப்போட்டியில் வென்றதும் “நானே முதன்மையானவன், நானே உலகின் மன்னன்” என்று கத்தியவர்.

61 குத்துச்சண்டை போட்டியில் கலந்து கொண்ட அலி 56 இல் வெற்றிபெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பலம், ஓர்மம், அர்ப்பணிப்பான கடமை, நேர்மை என்பன இவரது சொத்துக்களாகும்.

குத்துச்சண்டை உலகின் ஜாம்பவான் முகமட் அலி என்றால் அது அவருக்கு மட்டும் பொருத்தமானதே.

# சும்மா காசு வேண்டாம்



வேலையற்றிருப்போருக்கான சம்பளத் திட்டமொன்றை சுவிஸ் நாட்டு மக்கள் நிராகரித்துள்ளனர். அரசின் புதிய திட்டத்தின்கீழ் ஒருவர் வேலை செய்தால் என்ன? செய்யாவிட்டால் என்ன 1.7 இலட்சம் ரூபாவையும், பிள்ளைகளுக்கு 40000 ரூபாவையும் வழங்குவது என அரசு எடுத்த தீர்மானத்தை வேலையற்றிருக்கும் மக்கள் நிராகரித்துள்ளனர்.

**காரணம் :**

- அங்கு வேலையற்றிருப்போர் தொகை 3% ஆகும்.
- அவர்களுக்கு அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறது.
- புதிய திட்டம் அமுல்படுத்தப்பட்டால் அரசு நிதி நெருக்கடியைச் சமாளிக்க வரிகளை அதிகரிக்கவேண்டி ஏற்படும்.
- வேலை இல்லாத நிலை மாறி வேலைக்கு ஆள் இல்லாத சூழல் ஏற்பட்டுவிடும்.
- நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

என மக்கள் முடிவெடுத்துள்ளனர். எமது நாட்டில் இவ்வாறான ஒரு சூழல் ஏற்பட்டால்…



**மாணவன் :** சேர்! மரம் நாட்டு விழா ஒவ்வொரு வருடமும் ஒரே இடத்தில் நடைபெறுகிறதே அதற்கு என்ன காரணம்?

**ஆசிரியர் :** மரம் நாட்டுவிழா முடிந்ததும் மறுநாள் பத்திரிகையில் **“… இவர்களால் இந்த இடத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டது…”** என்றுதானே எழுதுகிறார்கள். இந்த விடயத்தில் மட்டும் பத்திரிகைகள் பொய்யாக எழுதுவதில்லை. நட்ட மரங்கள் பட்டுவிட்டால் திரும்பவும் அதேயிடத்தில் நடத்தானே வேண்டும்.

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

ஏனெனில் இது கலைத்தொழில்துறையாக மட்டுமல்லாது பண்பாட்டு மரபுரிமையாக வும் கொள்ளத்தக்கது என்பது ஆழ்ந்த கவனத்திற்குரியது. இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் கலை ஆர்வம், பகுதி வருமானம் என்பவற்றுக்கும் அப்பால் தம்பெற்றோர் செய்த கலைப்பணி அதனைக் கைவிடக் கூடாது, தங்களை நம்பியிருப்பவர்களைக் கைவிடக்கூடாது என்ற தன்னுணர்விலும் இயங்கி வருவதைத் தெளிவாகக் காணமுடிகின்றது.

# பூதச்சக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர் சரித்திரங்கள்




கலாநிதி
சி.ஜெயசங்கர்


அதிக வருவாய் அல்லது அதிக இலாபம் இல்லையேல் தொழிலை மூட்டை கட்டிவைக்கும் அல்லது முன்வராது போகும் நவீன வணிகப் பண்பாட்டுச் சூழல் கற்றுக்கொள்ள வேண்டிய மிகவும். முக்கியமான செய்தி அல்லது வணிகக் கல்வியாக இது காணப்படுகின்றது. கூத்தரங்கிற்கும் அப்பால் பல்வேறுபட்ட பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளதும் அழகியல் தோற்றப்பாடுகளை வலுப்படுத்துகின்ற, பாரம்பரிய மரபுரிமைகளைக் காவுகின்ற ஒரு கலை மரபு- அது தொழில் முறையாகவும் இயங்கிவரும் பின்புலம் அறிந்து வலுப்படுத்தப்படுவது காலத்தேவையாக இருக்கின்றது. கூத்தரங்கு மற்றும் பல்வேறுபட்ட பாரம்பரியக் கலை மரபுகளுக்கும் ஒப்பனைக் கலைஞர்களாக இயங்கும் இவர்கள் அவற்றுக்கும் அப்பால் நாடகங்களுக்கும் ஒப்பனைக் கலைஞர்களாக பணிபுரிபவர்களாகவும் இருக்கினறார்கள். குறிப்பாக வரலாற்று, இலக்கிய நாடகங்களுக்கு இவர்கள் இலகுவாகவே தம்மைத் தகவமைத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சமூக நாடகங்கள் மற்றும் நவீன நாடகங்கள் வரை ஊடுருவி வந்து சாதித்த, சாதிக்கின்ற கலைஞர்களும் இம்மரபில் காணப்படுகின்றார்கள். உள்ளூர்த் தெய்வக் கோயில் மரபுகள் எவ்வாறு ஆகமக்கோயில் மரபுகளாக மாற்றம் கொள்கின்றனவோ அவ்வாறே கூத்தரங்கின் ஒப்பனைக் கலை அதன் பொருளாதார பலவீனத்தாலும் தொடர்ச்சியான அழிவுகளுக்கு உள்ளாவதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் சினிமாவில் தொடங்கி சின்னத்திரையின் செல்வாக்குக் காரணமாக காண்பியக் கோளாறுகளுக்கு உள்ளாகி இருப்பது போருக்கும் இயற்கை அனர்தங்களுக்கும் மேலான அனர்த்தமாகி இருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் தான் கலைப் புலமையாளர், கலை விமரிசகர், கலை ஆய்வாளர்கள் என இயங்குபவர்கள் மேற்படி கலை மரபுகளின் பாரம்பரியங்கள் பற்றிய புரிதல்களுடனும் பாரம்பரிய அரங்கில் மேற்படி நிலைமை பற்றிய புரிதலுடனும் விழிப்புணர்வுடனும் இயங்கிவரும் கூத்தர் கள் கூத்து ஆர்வலர்களுடன் இணைந்து இயங்குவது அவசியமாகிறது. இச்சந்தர்ப்பத்தில் பண்பாட்டு அரசியல் பற்றிய உரையாடலின் அவசியம் உணரப்பட வேண்டியதாக இருக்கிறது.

இந்த இயக்கம் பண்பாட்டு மரபுரிமைகள், பண்பாட்டு அடையாளங்கள் என்பவற்றை சிதைக்கும் உலகமயமாக்க மென்வலுக்கரமான இலத்திரனியல் ஊடக மேலாண்மையை எதிர்கொள்ளும் நடவடிக்கை ஆகும். அதற்கும் அப்பால் உள்ளூர் அடையாளங்களுடன் கூடிய சமூகஞ்சார் கலை மரபுகளின் உருவாக்கம் என்பது நவகாலனியங்களுக்கு மாற்றான கட்டுப்பாடுகள் களைந்து சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் கொண்டாடுகின்ற சமூகப் பண்பாட்டு உருவாக்கத்திற்கான கலைச் செயற்பாட்டுக் களமாகின்றது. இதற்கான எண்ணக் கருவையும் முறையியலையும் ஈழச்சூழல் சார்ந்து கூத்து மீளுருவாக்கச் செயற்பாடு வளங்கி வருகின்றது. கூத்து மீளுருவாக்கம் பற்றிய வாசிப்புக்கள் இதனைத் தெளிவுபடுத்துவதாக இருக்கும். இந்நிலையில் கூத்துஒப்பனைக் கலை சார்ந்து தேடல்களும் தெரிவுகளும் வலுவாகவே நிகழ்ந்து வருவது காணப்படுகின்றது. ஆனால் இத் தேடல்களும் தெரிவுகளும் மிகப் பெரும்பாலும் தற்காலச் சின்னத் திரைத் தொடர்கள் பார்த்தும் புராண, இதிகாச நாடகத் தொடர்களின் பாதிப்புக்களாலும் தீர்மானிக்கப்படுபவையாகக் காணப்படுகின்றன. இது குறித்த சமூக விமர்சனங்களும் கூத்தரங்கில் வலுவாக இருந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

இந்த இடத்தில் மரபுத் தொடர்ச்சிக்கும் நவீன “கண்கவர்” காட்சித் தோற்றத்துக்கும் இடையிலான ஈடாட்டங்களுக்கும் இடை- யில் பங்கேற்பது சமூக அரசியல் முக்கியத்துவம் உடையது. பல்வகை அல்லது பன்மைப் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைத்து பண்பாட்டு ஓர்மைக்குள் கொண்டுவர முயலும் பிராந்திய மற்றும் உலக வணிக சக்திகளது காளவாயில்களில் இருந்து மீளும் பண்பாட்டுச் செயல்வாதங்களுடன் தொடர்புடையது இது. குறித்த பிரதேசங்களுக்கான ஆற்றுகை முறைமைகள், ஆற்றுகை மரபுகள், ஆற்றுகை மற்றும் எழுத்துப் பனுவல்கள் வித்தியாசங்கள் கொண்டவை. தனித்துவங்களை உடையவை. உதாரணமாக தமிழகக் கூத்தும் ஈழக்கூத்தும் ஆற்றுகை முறைகளிலும் காண்பியத் தோற்றப்பாடுகளிலும் வித்தியாசங்களைக் கொண்டவை. மேலும் உள்நாட்டிலும் பிரதேசங்களுக்கிடையில் நுண்ணியதான வித்தியாசங்களைக் கொண்டவையாகக் காணப்படுவது இக்கலை மரபுகளின் பண்புகளாகவும் காணப்படுகின்றது. எனவே, கூத்தரங்கின் ஒப்பனைக் கலை மரபுகள் பற்றி அறிதலும் புரிதலும் அதன்வழி இயங்குதலும் ஆழ்ந்தகன்ற பரிமாணங்களைக் கொண்டவை. இதற்கு மேற்படி கலை மரபில் தொடர்ச்சியாக இயங்கி வருபவர்கள் பொருளாதார ரீதியாக வும் கலைத்துவ ரீதியாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக கருத்தியல் ரீதியாகவும் வலுப்படுத்திக் கொள்வதற்கான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டி இருக்கிறது.

இன்றைய நிலையில் இத்துறைசார் கலைஞர்கள் மதிப்பிற்குரிய பாரம்பரியக் கலைஞர்களாக மாண்பு செய்யப்படுகிறார்கள். இதன் அடுத்த கட்டங்கள் பல. பண்பாட்டு மரபுரியையாகவும் உள்ளூர்க் கலைத் தொழிற்துறையாகவும் இக்கலை மரபின் சமூகப் பண்பாட்டு முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்படுவதுமேற்படிமுன்னெடுப்புக்கள் எல்லாவற்றிற்குமான அத்திவாரமாக அமையும். முதற்கட்டமாக இக்கலைத்துறையை உள்ளூர்க் கலைத் தொழிற்துறையாக அதிகார பூர்வமாகப் பதிவுசெய்து கொள்வது அரசின் நேரடி ஆதரவுகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளையும் அரச அங்கீகாரத்தையும் வழங்குவதாக இருக்கும். பாரம்பரியமாக இத் தொழிற்துறையில் ஈடுபட்டுவரும் கலைமரபினரை அடையாளம் காணுவது மிகவும் எளிதானது. எண்ணிக்கையிலும் இவர்கள் மிகவும் குறைவானவர்கள். **கூட்டுறவுமுறை மூலமாக மேற்படி கலைத்தொழிற்துறை வலுப்படுத்துவது பொருத்தமுடைய நடவடிக்கையாக இருக்கும். இவற்றை எல்லாம் நோக்கங்களாகக் கொண்டே கிழக்குப்பல் கலைக்கழக நுண்கலைத்துறையினராலும் உள்ளூர் அறிவு திறன் செயற்பாடுகளுக்கான மூன்றாவது கண் நண்பர்கள் குழுவினராலும் கடந்தஐந்துவருடங்களாகத்தொடர்ச்சியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒப்பனைக் கலைஞர்கள் மட்டுமல்லாது பாரம்பரியக் கலை வாத்தியங்களை உருவாக்கும் இணக்கும் கலை மரபினருடனும் இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

இந்த வகையில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் கடந்த ஐந்து வருடங்களாக நடத்திவரும் பாரம்பரிய அரங்கவிழா மிகப்பெரும்சந்திப்புக்களமாகஇயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் தாராளமய நுகர்வுப் பண்பாட்டுச் சூழிலிலும் போட்டியும் வெற்றியும் இலாபகரமாக மாற்றி அமைக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட்டு வரும் உலகமயப்பண்பாட்டுச் சூழலிலும் உள்ளூர் அறிவுத்திறன் பண்பாடுகளின் கூட்டுறவுப் பண்பாட்டின் வலுவாக்கம் என்பதும் பூதச் சக்திகளை எதிர்கொள்ளும் சாதாரணர்களது சரித்திரங்கள் ஆகும். **இந்த உலகின் மனிதகுல விடுதலை மட்டுமல்லாது எல்லா உயிர்களது இருப்பும் இந்தச் சமூகப் பண்பாட்டுச் செயல்வாதத்தின் வலுவான இருப்பிலும் இயக்கத்திலும் தங்கி இருக்கின்றது என்பது விளங்கிக்கொள்ளப்பட வேண்டியது.**





# பாசையூர் கிழக்குக் கிராம ஆய்வு

**சிவா**

பாசையூர் கிழக்கு கிரா ஆய்வினை ஆயுத மோதல், அதன் பின்னணியில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், யுத்தம் முடிவடைந்த பின் எவ்வாறு மீண்டும் வாழ்ந்து வருகின்றனர் என்ற பல்பக்க சமூக பொருளாதார நோக்கு நிலையில் 900 குடும்பங்களை மையமாக வைத்து **கொழும்பு பல்கலைக்கழக பொருளியற்துறையைச் சேர்ந்த கலாநிதி. கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் சர்வதேச இனத்துவக் கற்கை நெறிகளுக்கான நிலையத்தை** (ICES) **சேர்ந்த தனேஸ் ஜெயதிலக, சியானா குணசேகர, மற்றும் நடராஜா குருசாந்** ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

இவர்களது ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்தும் கருத்தரங்கொன்று 14.05.2016 அன்று யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் நடைபெற்றது.

இவ்வாய்விற்காக பாசையூர் கிழக்குக் கிராமம் தெரிவு செய்யப்பட்டு, 450 இடம்பெயர்ந்த குடும்பங்களிடமும், 450 இடம்பெயராது தொடர்ச்சியாக அங்கேயே வாழ்ந்த குடும்பங்களிடமும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. இக்கிராமமானது யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவிற்குள் அடங்கும் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மூன்றாகும்.

இந்த ஆய்வு குடியிருப்பாளர்களின் மீட்சிக்கான வாய்ப்பெல்லை, மீள்குடியேற்றச் செயற்பாட்டை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அவர்கள் பயன்படுத்திய உபாயங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கும் விளக்குவதற்கும் முயற்சிக்கின்றது.

மேலும், இந்த ஆராய்ச்சியானது இவ்விடயத்துடன் தொடர்புடைய பின்வரும் 6 அம்சங்களிலும் அதாவது.

1. பட்டினத்தின் ஒரு பகுதி
2. வாழ்வாதாரத்திற்கான ஓரிடம்
3. ஒரு சமூகக்குழு
4. ஒரு பொருளாதாரச் சமூகம்
5. ஒரு அரசியற்சமூகம்
6. தனிமனிதசுதந்திரம் ஆகியவற்றில் கவனம் செலுத்தியுள்ளது.

பாசையூரில் காணப்படுகின்ற பல்வேறு வகைப்பட்ட வளங்கள் மூலம் கிடைக்கின்ற பயன்களையும் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார்கள். ஆய்வு முடிவுகள் ஒரேவிதமானவையாக உள்ளனவா என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக, மிக முக்கியமாக, கலப்பு முறைக் களஆய்வு பயன்பட்டதுடன் இவ்வாய்வானது முதன்நிலை, இரண்டாம்நிலை, அளவுசார்ந்த மற்றும் பண்புசார்ந்த தரவுகளைத் துணையாதாரமாகக் கொண்டிருக்கிறது.

இவ்வாய்வுக்கு 03 வருடகாலம் செலவிடப்பட்டுள்ளது. இம்மக்களின் மீள் உருவாக்கத்திற்கு **வறுமை, வருமான சமத்துவமின்மை, வன்முறை** ஆகிய மூன்று பிரதான காரணிகள் தடையாக காணப்படுகிறது என்பதை இவ்வாய்வு மூலம் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

பாசையூர் கிழக்கு மக்கள் 8 வகையான உபபிரச்சினைகளுக்கு இன்னும் முகம் கொடுத்து வருகின்றனர் **நிலமின்மை, வேலையின்மை, வீடின்மை, எல்லைகள் வகுக்கப்படாமை, சுகாதாரப் பிரச்சினைகள், உணவுப்பிரச்சினை, பொதுச் சொத்துக்கள், சமூக இணைப்பு** போன்றவற்றைப் பிரதானமாக துருத்திக் காட்டுகின்றனர் ஆய்வாளர்கள்.

**இம்மக்கள் எதற்கெடுத்தாலும் தமது கடந்த காலத்துடன் ஒப்பீட்டே பேசுகிறார்கள். கடந்தகால துயரங்களும், இவர்களது நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்கும் பங்கம் விளைவிப்பதாக உள்ளன.**

இவ்வாய்வில் பாஷையூர் கிழக்குப் பற்றிய தகவல்கள் அதிகம் காணப்பட்டாலும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆய்வாளர்களால் முன்வைக்கப்படவில்லை. இனி வரும் நாட்களில் அவை சீர்செய்யப்பட வேண்டும்.

**மக்கள் உள்நாட்டு யுத்த காலத்தில் பல்வேறு வழிவகைகளைப் பயன்படுத்தி இக்கிராமத்தை வீட்டு வெளியேறினர். அதே வேளை வேலையின்மை, திருமணம், குடியிருப்பு நெரிசல் என்பன காரணமாக தற்போதும் சிலர் வெளியேறி வருகின்றனர். இவர்கள் வெளிநாடு நோக்கிய புலம்பெயர்வையே அதிகளவில் விரும்புகின்றனர்.**

அதேவேளை, இளம் வயதினர் திருமணம் முடித்தபின் ஊரை விட்டு வெளியேறுவதால் மூத்தவர்கள் ஏங்கிப்போன அல்லது கைவிடப்பட்ட வாழ்க்கையையே வாழ வேண்டியுள்ளது.

கிராமமொன்றில் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற குடும்பங்களுடன் ஒப்பிடுகையில், பாசையூரானது தனித்துவமான ஒரு சமூகமாக உள்ளது. மதகுருமாரும், ஒன்றிணைந்த சங்கங்களும் குடும்பங்களுக்கிடையேயும் குடும்பங்களுக்குள்ளும் ஒத்திசைவை மேம்படுத்துவதற்காக உயிர்த்துடிப்புடன் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இவ்வாய்வில் தனேஸ் ஜயதிலக, சியானா குணசேகர ஆகிய இரு சிங்கள இனத்தைச் சேர்ந்த இளம் ஆய்வாளர்கள் இணைந்து செயற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

பிரச்சினைகள் என்று முக்கியமான சில அடையாளம் காணப்பட்டுள்ளன. 60 இற்கும் மேற்பட்ட விதவைகள், 600 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் எந்தத் தொழிலும் இன்றி சுற்றித்திரிவது என்பன முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. அதேவேளை, மீன்பிடி ஒரு வருமானம் உள்ள தொழிலாக இல்லாமைக்கு இந்திய மீனவர்களின் வருகை பிரதானமாக குறிப்பிடப்படுகிறது.

மீன்பிடிமூலம் பெறுகின்ற வருமானம் போதாமை, இளைஞர்களின் வெளியேற்றம், மதுப்பாவனை, விரைவாக மாறிவரும் சமூக நடத்தைகள் என்பவற்றுடன் வருடா வருடம் குறைந்தது 25 பேராவது மீன்பிடித் தொழிலைக் கைவிட்டு வேறு வருமான வழியை நாடுகின்றனர்.

மேற்படி ஆய்வினை மேற்கொள்வதற்கு IDRC, CRDI, Canada, UKaid, சர்வதேச இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES) ஆகியன இணைந்து இவ்வாய்விற்கான நிதியினை வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வாய்விற்கென கிராம மக்களிடம் பெறப்பட்ட அடிப்படைத் தரவுகளில் அவர்கள் 100% உண்மைத் தரவுகளை வழங்கியுள்ளனரா? என்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும். இது போன்ற மேலும் பல ஆய்வுகள் வேறுபட்ட துறைகளில்

### பிழை திருத்தம்

எமது சித்திரை இதழில் வெளிவந்த 25 இல் 21 ஆவது இடம் யாழ்ப்பாணத்துக்கு என்ற கட்டுரையில்,

73 பாடசாலைகள் மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது தவறு. 61 பாடசாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதே சரி. அதில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி 23 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதே சரியானது. தவறுக்கு மன்னிக்கவும்.




# ரதம்

**எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ.)**

**இந்தப் பெயர் ஈழத்து இலக்கிய மரபில் தவிர்க்க ஒண்ணா ஒன்று. ஒரு கொள்கையுடன் எழுதியவர், வாழ்ந்தவர். ஈழத்து இலக்கியப் பரப்பில் பல்வேறுபட்ட பல போராட்ட இலக்கியங்களை கம்பீரமாக எழுதிய பலர் தமது பிள்ளைககளை போராட்டத்துக்கு அனுப்பவுமில்லை , அவ்வாறு யாராவது சென்றிருந்தால் சாக்குப்போக்குச் சொல்லி வெளியில் எடுத்ததுடன் "போராட்டம் கூடாது" என்று எழுத்தில் போடமுடியாது தவித்தவர்கள் ஏராளம்.**


**இவ்வாறான இலக்கியவாதிகள் தம்மைத்தாமே சீரழித்துக்கொண்ட படைப்பாளி களே. இவ்வாறான பலர் உயிருடன் இருந்தாலும் முகம் அழிந்தவர்களாகவே வாழ்கின்றனர். ஆனால், எஸ்.பொ எழுதினார், அதன்படி வாழ்ந்தார். தனது மகனான மித்தியை தமிழீழ மண்ணுக்காக அர்ப்பணித்ததன் மூலம் அவரது தரம் மற்றவர்களால் ஏணிவைத்தாலும் எட்டமுடியாத அளவிற்கு உயர்ந்து நிற்கிறது.**

**எஸ்.பொவின் "நனவிடை தோய்தல்" என்ற சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்ற ரதம் என்ற கதையின் ஒரு பகுதியை அப்போதைய யாழ்ப்பாணத்தை அறிவதற்காக பிரசுரிக்கிறோம்.**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

பேந்து அவள்ரெட்டைப் பனையடியிலை சவமாக் கிடந்தவளாம். துவாய்கட்டினாலும், அவங்களின்ரை கோஷான் கீழாலை தெரியும். அவங்களை சரிக்கட்டலாம் எண்டு இந்தப் பேய்ப்பொடிச்சி போயிருக்கிறாளே! யாழ்ப்பாணமே கலங்கிப் போச்சு! பேந்தென்ன? காப்பிலிகளுடைய தலையைக் கண்டால் ஒரு பொம்புளைக் காக்கை குருவி கூட றோட்டிலை நிக்காது.

எண்பது ஆண்டுகளுக்கு முன்பே ரயில் வந்து விட்டது. அப்பொழுது இராமநாதன் துரை தமிழரது ஏன் இலங்கையரது தனிப்பெருந் தலைவராக கொடிகட்டிப் பறந்த காலம். மருதனாமடம் அல்லது நாச்சிமார் கோயிலடியில் நின்று அவர் குடையைக்காட்டினால், ஓடும்இரயில் நின்று! அவரை ஏற்றிச்செல்லுமாம். இப்படி எத்தனையோ கதைகள். இதில் உய்த்துணரப்பட வேண்டியது இராமநாதன் துரையின் பெருமை மட்டுமல்ல, அந்தக்காலத்து ரயில்களின் வேகமுந்தான்! கொள்ளையாகப் புகை கக்கும் கரிக்கோச்சிகள், பளைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் இன்சினும் இருக்கைகளும் ஒரே பெட்டியில் அடங்கிய 'ரொலி"கள் ஓடின. அவை நெடுங்குளம், கச்கேரியடி, நாவாந்துறை (நாவலர் வீதி), நாச்சிமார் கோயிலடி போன்ற ரயில் கடவைகளையும் தரிப்பிடங்களாகக் கொண்டன. பெரும்பாலும் 'கேற்' போட்டுப் பாதுகாப்பு செய்யப்படவில்லை 'கோச்சி வரும் கவனம்' என்ற எச்சரிக்கைககள் மட்டுமே மாட்டப்பட்டிருந்தன. இதனால் 'கொப்பரும் வருவார் கவனம்' என்று எழுதியதாகக் கல்லடி வேலனின் சாமர்த்தியங்களுக்கு வால் வைக்கும் ஜிகினா வேலைகள் சுலபமாயின. எஸ்.எஸ்.ஸி. சோதினை எழுதியதற்குப் பரிசாக எனக்குக் கொழும்புப் பயணம் வாய்த்தது. புத்தகக்கடை பூபாலசிங்கம்தான் எனக்குப் பயணத்துணை. இரவெல்லாம், பதின்மூன்று மணிநேரம் யன்னலால் வந்த புகையிலே மண்டிய கரித்தூள்களிலே குளித்துக் கொழும்பை அடைந்தேன். பூபாலசிங்கம் நல்ல நாவலாசிரியாகத் திகழ்ந்திருக்க வேண்டியவர். பாவம், எழுத வாய்ப்புக் கிடைக்கவில்லை. ரயில் பாதையிலே திருத்த வேலைகள் நடைபெற்றால் குட்டிக் குட்டி வாகனங்கள் வந்து நிற்கும். சில சமயம் வெள்ளைத் தோல்காரரும் வருவார்கள்.



## எஸ்.பொ.

குட்டிவாகனங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது, யாழ்ப்பாணத்திற்குக் கார் வந்தபோது நடந்த கலாதிகள் பற்றி வெண்தாடிக் கிழவர் சின்னனுக்குச் சொன்ன கதைகள் நினைவுக்கு வருகின்றன. பணக்காரப் புள்ளி ஒருவர் கொழும்பிலிருந்து 'அவிழ்த்துக் கொண்டு' வந்த ரயில குட்டியைப் புதினம் பார்க்கச் சென்ற வர்த்தமானத்தை வர்ணித்தார். நாம்பன் குட்டியைப்போன்று உறுமிக் குதித்துக்கொண்டுதான் 'ஸ்ராட்' எடுக்குமாம். இரவில் காவோலைப் பந்தத்தைப் பிடித்துத்தான் ஓட்டினார்களாம். அடிக்கடி அதுக்குத் தண்ணி காட்ட வேண்டுமாம். அலவாங்கை வளைத்தது போன்ற பெரிய சாவியைப் போட்டு 'ஸ்ராட்' எடுப்பதற்கிடையில் சிலருக்கு மூலம் புறப்பட்டு விடுமாம். 'ஏபோட்டி' களும் 'மொறிஸ் மைனர்'களும் வந்த பின்னர் தான் காரின் பாவிப்பு யாழ். மண்ணில்வேரூன்றியது. மெயின் றோட்டுக்களைச் சறுக்கி உள்ளுக்குள் பல சங்கிலி 'வானா'க்களை இணைத்துச்செல்லும் யாழ்ப்பாணக்குச் சொழுங்கைகளுக்கு பெரிய கார்கள் சரிப்படாது. 'மரபு' ஆசிரியர் அரவிந்தன் அண்மையிலே தமது தந்தை பற்றிய ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார். புதிய வக்ஸோல் கார் ஒன்றை வாங்கி வந்த தந்தையார், ஒடுக்கமான ஒழுங்கையால்ஓட்ட முடியாது, அதனைப் பாதி வழியில் நிறுத்தி வைத்தாராம். அப்பொழுது ரயில' பெட்டி ஒன்று தனியே கழன்று நிற்கும் புதினத்தைப் பார்க்க ஊர் கூடிவிட்டதாம்! மட்டக்களப்பு வாசியாகி பிறகு யாழ்ப்பாணம் போனால் யாழ்ப்பாணம் தேவனின் 'பக்பியட்' ஓடித்திரிந்ததும் மறக்க ஒண்ணா அனுபவமே.

மட்டக்களப்புத் தமிழ் விழாவுக்கு பண்டிதர் தங்கம்மா அப்பாக் குட்டியை அழைப்பதற்கு மல் லாகத்து ஒழுங்கைகள் ஊடாகத்தேவன்தமது காரை ஓட்டியலாவகம்மெச்சத்தக்கது. பனையோலை வேலிகளைச் சிராய்ச்சுக் கொண்டு வேலிக்கும் நோகாமல், காருக்கும் சேதமில்லாமல் காரை ஓட்டியது ஒரு சாகஸமே.

கமலா சார்க்கஸ்காரன்கள் வந்து யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கியது. இன்றைய வழுக்கத் தலையர்களுக்கும் நரை தலையர்களுக்கும் நல்லா ஞாபகம் இருக்கலாம். சிங்கள இனவாதத்தின் கடுப்புக்கும் கொதிப்புக்கும் இலக்கான யாழ் நூல் நிலையம் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் பொட்டல் நிலம். யாழ்நகர் மாடுகளின் மேய்ச்சல்மைதானம், பொதுக்கூட்டங்களின் அரங்கு, அங்கு தான் கமலா சர்க்கஸ் 'டேரா' போட்டு யாழ்ப்பாணக் கசவாரங்களுடைய காசுகளைக்கூட வறுகி எடுத்தவனுகள், பாதாளக் கூண்டிலே நடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சாகஸத்தை உயிரைக் கையிலை பிடிச்சுக்கொண்டு பார்க்கவேணும்.

மெக்கானிக் அப்பாமணியை வெண்ட மோட்டார் சைக்கிள் ரேஸ் காரன் யாழ்ப்பாணத்தில் இல்லை. அவர் றோட்டிலை சர்க்கஸ் ரிக்ஸ் காட்டி, கனகாலம் ஆஸ்பத்திரியிலை கிடந்தவர், பேந்தும் ரேஸிலை அவரை அடிக்கேலாது. கொட்டடித் தெய்வேந்திரன் மோட்டார்ஸ் ரோர்ஸ் முத்தையா எல்லாம் எந்த மூலைக்கு? சிவன் கோயிலடிச் சீனனும் ரேஸிலை விண்ணன் என்று பெயர் எடுத்தவன்.

எனக்கென்னவோ அந்த கமலா சர்க்கஸ் சைக்கிள் சாகஸங்களை மறக்கொண்ணா. அந்தரத்திலே காட்டப்பட்ட கொடிக் கம்பியிலே, ஒற்றைச் சில்லுச் சைக்கிள்களில் குடைகள் பிடித்தும் பிடிக்காமலும் அவளுகள் செய்த திறிக்கீஸ்' கள் கொஞ்சமே? .... எப்படியும் சைக்கிள் ஓடவேணும் எண்ட வெறியை அவளுகளுடைய நூதனமான குண்டி நெளிப்புகளும் தூண்டியும் இருக்கலாம். இல்லாட்டிலும், யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு மசிதலும் தவிர்க்க இயலாத நியதி.

என்ன இருந்தாலும், அன்றும் இன்றும், ஏன் என்றுமே யாழ்ப்பாண மண் இயல்பாகத் தத்தெடுத்துக் கொண்ட வாகனம் சைக்கிள்தான். சைக்கிள் என்றால் றலி றலி என்றால் சைக்கிள், இந்த றலி சைக்கிளுடைய முழுத்துவ வடிவை, நல்லூர்க்கந்தனின் தேர் அசைந்து வரும் பவ்விய கோலத்தை - பிரான்பத்தை என்ற கிராமத்திலிருந்து 'கறியல்'களில் எண்ணெய் டின்களை வைத்து நல்லெண்ணெய் வியாபாரிகளாய் பவனி வந்தவர்களுடைய வாகனங்களைப் பார்த்தால் தான் தெரியும். முன் 'மட்காட்' டில் பூட்டப்பட்ட குதிரை என்ன? பல்வேறு ஓசைகள் எழுப்பும் மணிகள் என்ன? சீற்கவர் அலங்காரம் என்ன? பார் கவரின் வனப்பென்ன? ரிம் துடைக்கும் குஞ்சங்கள் என்ன? சும்மா சொல்லப்படாது,

(அடுத்த இதழில் தொடரும்..)

# கி.மு. 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த சிந்துவெளி மக்களுடன் எனக்கு உறவுண்டு – பாலா

**விஸ்வபிரம்மஸ்ரீ பாலகிருஸ்ணன் ஜெகதீஸ்வரன் (பாலா) வயது – 53, நல்லூரில் வசிக்கும் இவர் தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களின் எச்சங்களைச் சேகரித்து தமிழர் தம் உயர்ந்த வாழ்க்கை முறையை வெளி உலகிற்கு கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். இவரது தேடல் தொடர்பில் அவருடனான நேர்காணலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். – ஆசிரியர்**

**கேள்வி:** இந்த அரும்பொருட்களைச் சேகரிக்க வேண்டும் என்ற ஆர்வம் தங்களுக்கு ஏன் ஏற்பட்டது.

**பதில்:** நாங்கள்யார், எமதுபூர்வீகம்என்ன? போன்ற கேள்விகள் எனக்கு சிறு வயதிலேயே ஏற்பட்டது. எனது 16 வயதிலேயே ஏற்பட்டது. எனது 16 வயதிலிருந்து இவ்வரிய பொருட்களைச் சேகரித்து வருகிறேன். இந்த விடயத்தை எனது பரம்பரையில் நானே முதன் முதலில் ஆரம்பித்தேன்.

**கேள்வி:** எவ்வாறான பொருட்களைச் சேகரித்து வைத்துள்ளீர்கள்?

**பதில் :** எமது முன்னோரால் பாவிக்கப்பட்ட பல்வேறு விதமான பொருட்களைச் சேகரித்து வருகின்றேன். மிகப்பழைய வெண்கலப் பாத்திரங்கள், விக்கிர கங்கள், பாவனைப் பொருட்கள், ஓலைச்சுவடிகள், எழுத்தாணிகள், சங்குகள், மரத்தால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள், நாணயங்கள் என அவை விரிந்து செல்கிறன.

**கேள்வி:** உங்களது ஆசிரியர்கள் யாராவது இத்துறைக்கு ஆதரவாக இருந்தார்களா?

**பதில் :** ஆம். எனது தமிழ் ஆசிரியரான வள்ளுவர் என்பவர் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எனது ஆர்வத்தை அறிந்து "நீ தான் இந்த சேவைக்குப் பொருத்தமான ஆள்" என்று என்னை ஊக்கப்படுத்தினார். பொதுவாக எனது மக்கள் பழைய பொருட்களை ஏன் வீட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றை அகற்றி ஒரு மூலையில் எறிந்து விடுகின்றனர்.

**கேள்வி:** இந்தப் பழைய பொருட்களை வைத்திருப்பது தொடர்பில் உங்கள் உணர்வுகள் எப்படி?

**பதில் :** என்னைப் பெறுத்தவரை அது ஓர் உயிர். எங்கள் முன்னோர்கள் தொட்டுப்பாவித்த பொருட்கள் அல்லவா அவை. **கி.மு.2000 ஆண்டு காலத்தில் சிந்துவெளி நாகரிகத்தில் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற சில வெண்கலப் பாத்திரங்களை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்** என்பது எனக்குப் பெருமையாக இருக்கிறது. அவர்களின் உணர்வுகளுடன் நான் கலந்திருக்கிறேன்.



பழமைவாய்ந்த எழுத்தாணிகள்



**கேள்வி:** இந்தப் பொருட்களின் மூலம் எவ்வாறு எமது பண்பாட்டை வெளிக்கொணர முடியுமென நினைக்கிறீர்கள்?

**பதில்:** நான் எமது முன்னோர்களின் வரலாற்றைப் பேணும் கல்வெட்டுக்களையும், ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டவற்றையும் வாசித்து விட்டுஇதுதான்எமதுபண்பாடுஎன்று சொல்வதில் என்ன கெட்டித்தனம் இருக்கிறது. என்று உணர்கிறேன். எமது மூதாதையர் சாப்பிடுவதற்காக பயன்படுத்திய பாத்திரங்கள், குடிப்பதற்குப் பாவித்த மூக்குப்பேணி, செம்பு, குவளைகள் போன்றவற்றின் மூலம் எமது பண்பாடு என்பது " விருந்தோம்பல் பண்பாடு" என்பதை வெளிக்கொணரவுள்ளேன்.



**கேள்வி :** வேறு என்னென்னவற்றையெல்லாம் இப்பொருட்களின் மூலம் வெளிக்கொண்டு வரமுடியும்.

**பதில் :** பல்வேறுபட்ட உலோகங்களை தனியாகவும், பல உலோகங்களைக் கலந்தும் நேர்த்தியான பொருட்களை செய்யும் அளவிற்கு உலோகங்கள் பற்றிய விஞ்ஞான பூர்வமான அறிவும், கைவினைத் திறனும், மருத்துவத் தன்மையும் இன்னும் எம்மால் ஊகித்துவிட முடியாத பல மர்மங்களும் அதற்குள் அடங்கியிருக்கிறது என்று நம்புகிறேன். பல பண்டைய நாகரிகங்களுடன் இவற்றை ஒப்பு நோக்கி வருகிறேன். அப்போதுதான் புரிகி றது உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களில் தமிழர்கள் ஓர் உச்ச நாகரிகத்தை உடையவர்கள் என்று.

**கேள்வி :** உங்களுக்குக் கிடைத்த பொருட்கள் எல்லாம் என்ன தேவைக்காக மக்களால் பயன்படுத்தப்பட்டது என்பதை கண்டுபிடித்து விட்டீர்களா?

**பதில் :** .இல்லை, **சில பாவனைப்பொருட்கள் நாளாந்த தேவைக்குப் பயன்படுத்தியுள்ளனர். வணக்க முறைகளுக்காக பயன்படுத்தினார்களா? என்பதில்' எனக்குத் தெளிவில்லை. ஆனால் அப்பொருட்களை வைத்து தொடர்ந்தும் வாசித்தும், கலந்துரையாடியும் அவற்றின் பயன்பாடு பற்றித் தேடி வருகிறேன்.**

**கேள்வி:** கி.மு. காலத்திலிருந்து நவீனகாலம்வரை அரும்பொருட்களை சேகரித்துள்ளீர்கள். அந்நியர் ஆட்சிக்கால படைப்புக்கள் ஏதாவது கிடைத்திருக்கிறதா?

**பதில்:** இதுயாருமேஎன்னிடம்இதுவரைகேட்டிராத ஒரு கேள்வி. உண்மையில் கி.பி. 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்குள் வந்ததிலிருந்து பிரித்தானியர் இலங்கையை விட்டு 1948 இல் சென்றது வரையான **450 வருட காலப்பகுதியில் எமது சந்ததியினரின் படைப்புக்கள் இதுவரை கிடைக்கவில்லை. நான் நம்புகிறேன் அவர்களை படைக்க அந்நியர்கள் அனுமதிக்கவில்லை அல்லது அவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அழிக்கப்பட்டுவிட்டன.** அந்நியரின் நாணயங்கள் பல்வேறு குறிப்புக்கள் என கிடைக்கப்பெற்றுள்ளது.

**விஜயன்**

எமது பல பொருட்கள் அழிக்கப்பட்டதற்கான குறிப்புக்களும், எச்சங்களுமே எஞ்சியுள்ளன.

**கேள்வி:** 1948 இன்பின்னர்என்னநடந்திருக்கிறது?

**பதில் :** பல பாரம்பரிய தொழில்கள் அதன் எச்சங்கள் பெரிய அளவில் மீளத் தொடங்கப்பட்டது என்று கூறிவிட முடியாது. **மிகப்பழையபொருட்களைக்கூட சேகரித்து கைவிட்ட நிலையே எனக்கு ஏற்பட்டது. 1995 இல் குடாநாட்டிலிருந்து யுத்தம் காரணமாக திடீரென வன்னி பெருநிலப்பரப்பிற்கு இடம்பெயர்ந்த போது நான் சேகரித்து வைத்திருந்த பல அரிய பொருட்களை இழந்துவிட்டேன்.**

(அடுத்த இதழில் தொடரும்)

பகிரங்க மடல்

## விழித்திருக்கும் மக்களுக்கு....



**ச**ங்க காலம் என்பது கி.பி.1-3 வரையான 300 ஆண்டுகளை உள்ளடக்கியது. இக் காலப்பகுதியில் சமூகம் கட்டவிழ்த்து விடப்பட்டதாக இருந்ததால் எல்லாவகையான ஒழுக்கக்கேடுகளும் அச் சமூகத்தில் நிறைந்திருந்தன. அதிலிருந்து மீள வேண்டுமென மக்கள் தலைவர்கள் எடுத்த தீர்மானமே சங்கமருவிய காலமாகும். இது கி.பி.3-6 வரையான 300 ஆண்டுகளாகும்.

இக்காலப்பகுதியில் திருக்குறள், நாலடியார் போன்ற அற நூல்கள் எழுந்தன. அதேவேளை, சமண பௌத்த மதங்களின் செல்வாக்கும் தமிழ்நாட்டில் மேலோங்கி இருந்தது.

**இலங்கையில் யுத்தம் முடிவுற்ற 2009 வைகாசி தொடக்கம் இன்றுவரை ஒரு சங்ககால சூழலிலேயே தமிழ் மக்கள் வாழுகின்றனர்.** பாலியல் பிரச்சினைகள், மணமுறிவுகள், கொலைகள், கொள்ளைகள், மிதமிஞ்சிய மதுபாவனை, விபத்துக்களால் இறப்பு, ஊனமுற்றோர், லீசிங் கம்பனிகளின் பிரச்சினைகள், போதைவஸ்துப் பாவனை, நாணயமற்ற தன்மை, மற்றவர்களை மதிக்காத தன்மை, மற்றவர்களின் உழைப்பில் வாழுதல், சட்டத்தை மதிக்காமை, வீதி ஒழுங்கைப் பின்பற்றாத சாரத்தியம், அரசியல் ரீதியான முரண்பாடுகள், ஊழல்கள், தரக் குறைவான உட்கட்டுமான வேலைகள் என நீண்டு செல்கின்றன.

இவ்வாறான சமூகத்துக்கு ஒவ்வாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மொத்த மக்கள் தொகையில் 5 % கூட இல்லை. ஆனால், 95 %மான மக்கள் இவ் அடாவடித்தனங்களுக்கு பயந்து ஒதுங்காது செயலில் இறங்கவேண்டும்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளை நேரடியாக தனக்கு எழுதுங்கள் என்கிறார். இது விடயத்தில் பல மேடைகளில் பேசியும் வருகிறார்.

மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் போன்றோரால் கட்டுப்படுத்த முடியாதஅளவிற்கு கட்டுமீறிச்சென்று விட்டநிலையில் சமூகத்தில் காணப்படும் நாட்பட்ட புண்களுக்குக்கூட சட்டத்தில் மருந்துண்டு என்கிறார் நீதிபதி.

பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் தனக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதையும் பல பொதுக் கூட்டங்களில் விபரித்திருக்கிறார்.

பொதுவாக எமது சமூகத்தில் காணப்படும் குறைபாடு ஒரு விடயத்தை உரிய இடங்களுக்கு அறிவிக்கும்போது அதை ஒரு மொட்டைக்கடிதமாக (Petition) மட்டும் எழுதுவது. பலர் தமது பெயரைப்போட்டு அதை ஒரு முறைப்பாடாக (complain) அனுப்பி வைக்கத் துணிவதில்லை. இவ்வாறானவர்களும் சமூகவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களே.

உயர் அதிகாரிகள், சமூகத் தொண்டர்கள் என பலர் ஊழலில் ஈடுபடுவதை உரியவாறு தெரியப்படுத்துவதன் மூலம் ஒரு சிலர் தண்டிக்கப்படும்போது ஏனையவர்கள் தாமாகத் திருந்திவிட வாய்ப்புண்டு.

விடுதலைப் புலிகள் சமூகவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டோரை சுட்டுக்கொன்றார்கள். ஆனால், சிவில் நடைமுறையில் ஒரு குற்றத்திற்கு வழங்கக்கூடியஅதி உச்ச தண்டனையைநீதித்துறை மூலம் வழங்கமுடியும்.

என்று ஒரு தாய் அல்லது தந்தை தனது பிள்ளை குற்றச்செயலில் ஈடுபடுகின்றான்என்பதை அடையாளம் கண்டு அவனைக் கைது செய்யுங்கள் என்று முறைப்பாடு செய்கிறார்களோ அந்தக் கட்டத்தில் தான் தமிழ்ச் சமூகம் சங்கமருவியகாலத்து ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வாய்ப்பாக அமையும்.

சமூகத்தில் விழிப்புடன் இருப்பதாக கூறிக்கொள்வோர் வெறுமனே விழிப்புடன் இருந்தால் மட்டும் போதாது. அதற்கெதிரான சட்ட நடவடிக்கைக்கு உதவுபவர்களாகவும் இருந்தல் வேண்டும்.

அவ்வாறானதொரு சூழலில் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிடுவது போல "நள்ளிரவில் ஒரு பெண் தனித்துப் பயணிக்க முடியும்". அது நீதிபதியின் கையில் மட்டும் இல்லை. மக்கள் அவரது கைக்கு பந்தைச் சென்றடைய செய்யவேண்டும்.

**இப்போதைக்கு ஒரு சோடி செருப்பையும், ஒரு தலைக்கவசத்தையும் ஓரிடத்தில் நம்பி வைத்துவிட்டுப்போய் திரும்பவும் வந்து எடுக்கும் நிலை ஏற்பட்டாலே அது பெரிய காரியம்.**

# மே 18




**தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் அம்பாறையிலிருந்தும் காங்கேசந்துறையிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும், மன்னாரிலிருந்தும் தமிழ்க் கிராமங்கள் ஒவ்வொன்றாக இராணுவத்தின் பிடிக்குள் சென்று இறுதிக்கிராமமான முள்ளிவாய்க்கால் கிராமம் 2009 மே 18 இல் இராணுவத்தின் வசமானதுடன் 30 வருட ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.**

இவ்இறுதி நாட்களில் புலம்பெயர் தமிழர்கள் யுத்தத்தை நிறுத்து என்ற கோஷத்துடன் மனித சங்கிலிப் போராட்டங்களை நடத்தியிருந்தார்கள்.

கனடாவில் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் தனது அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டார். "மனித சங்கிலிப் போராட்டம் ஓரளவு உணர்வு பூர்வமாக இருந்தது. அங்கு பல்வேறு போராட்ட இயக்கப் பின்னணியைச் சேர்ந்தவர்களும் இந்த யுத்தத்திற்கும் மனித அவலத்திற்கும் தாமும் காரணம் என்ற குற்றஉணர்வுடன் கலந்து கொண்டனர் அல்லது தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். அப்போது விடுதலைப் புலிகள் இயக்கத்தை கனடா மட்டுமல்லாது ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் தடை செய்திருந்தார்கள். மூன்றாவதுநாள் கனடியப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து எமது பிரச்சினையைச் சொல்வது என ஏற்பாடாகி இருந்தது. அவர்களும் அவற்றைச் செவிமடுப்பதற்கு தயாராக இருந்தார்கள். இந்நிலையில் திடீரென புலிக்கொடியையும், பிரபாகரனின் படத்தையும் கொண்டு வந்து கூடியிருந்த மக்களிடம் யாரோ கொடுத்து விட **கனடியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகள் எமது நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்பு எனவே, கொடிகளையும், படத்தையும் கீழே போட்டுவிட்டு வாருங்கள்"** என்றனர்.

அதற்கு கொடியையும், படத்தையும் கொண்டு வந்தவர்கள் எறியச் சம்மதிக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த நாட்டுச் சட்டத்தை மதிப்பவர்கள். அதன்பின் அவர்கள்எங்களைக்ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை.

"யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களைக் காப்பாற்றுங்கள் என்பதனூடாக தமிழ் மக்களுக்குள் புலிகளும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள் என்பதை கொடியையும், படத்தையும் வழங்கியவர்கள் அப்போது உணர்ந்திருக்கவில்லை".

இவ்வாறானதொரு விடயம் முள்ளிவாய்க்காலில் நடக்காது என்பதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியபின் யுத்தத்தில் இறந்த பொதுமக்களுக்கு அவர்களது உறவுக்காரர் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவது ஒரு பிரச்சினையாக இருக்கப்போவதில்லை என்பதை உணர்ந்திருந்தனர். ஆனால் இதே போன்றதொரு நிலையை மாவீரர் தினத்தில் இலங்கை அரசு அனுமதிக்கப்பபோவதில்லை.

2009 மே 19 இல் இராணுவத்திடம் சென்ற ஒருவர் இவ்வாறு கூறினார். "யுத்தத்திற்கு முகம் கொடுத்தவர்கள் வீடுகளிலேயே இருக்கிறார்கள். அதனுடன் எந்த வகையிலும் சம்மந்தப்படாத அரசியல்வாதிகள் முண்டியடித்துக்கொண்டு விளக்கேற்றுகிறார்கள். அந்தத்துயரம் நடந்த வேளையில் இவர்கள் எங்கிருந்தார்கள் என்பதை ஒரு கணம் யோசித்திருக்கலாம். இது விடயத்தில் அப்போது ஓர் அறிக்கையாவது விட்டார்களா? வெறும் களியாட்ட விழாவிற்கு ஏன் நாங்கள் போகவேண்டும்" என்றார். விளக்கும் ஒரு வியாபாரமாகிவிட்டதோ?

# அண்ணாச்சி பதில்கள்

யசோதா- சாவகச்சேரி
**கேள்வி:** காவடி எப்போதிருந்து இந்துக்களால் ஆடப்படுகிறது?

**பதில்:** யசோதா, அது காவடி அல்ல. **காவு தடி.** நம் முன்னோர் போக்குவரத்து வசதி இல்லாத காலங்களில் ஒரு தடியின் இரு முனைகளிலும் பாரத்தைக் கட்டிக் காவிச் செல்வர். மட்பாண்டம், பழவகை, மரக்கறி, பால், தயிர் என எல்லாமே இவ்வாறு காவிச்செல்லப்படுவதுண்டு. தற்போதும் கட்டில், கதிரைகள் விற்போரும் காவிச் செல்வர். இதுவே காவடியாகி, பாற்செம்பு, குடங்கள் கட்டி காவுதடிக்கு மயில் இறகு குத்தி தற்போதுள்ள காவடி உருவானது.

சாண்டில்யன் - கனடா
**கேள்வி:** இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதற்கு எங்காவது இறுக்கமான சட்டம் போடப்பட்டுள்ளதா?
**பதில்:** ஆம், பூட்டான் நாட்டில் 60% மான பகுதியை காடாகவே வைத்திருக்க வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



வல்லிபுரம் - மன்னார்
**கேள்வி:** SMS என்பதன் முழு வடிவம் என்ன?
**பதில்:** Short Massage Service இதையே குறுந்தகவல் சேவை என்கின்றனர்.

வா.ஜெயரட்ணம் - ஆனைக்கோட்டை
**கேள்வி:** வயிற்றுப்போக்கு ஏற்படும்போது எதுவும் உண்ணக்கூடாது என்கிறார்களே அது ஏன்?
**பதில்:** நாம் உண்ணும் உணவில் பங்கஸ் தாக்கம் ஏற்படுவதால் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. இந்நிலையில் Hydro Chloric Acid (HCl) அதிகமாகச் சுரந்து ஏற்பட்ட தாக்கத்தை குறைத்துக்கொண்டிருக்கும்போது, நாம் மேலும் உணவை உண்டால் அக்கிருமிகளுக்கு மேலும் வாய்ப்பாகி தொடர்ந்தும் வயிற்றுப்போக்கு ஏற்பட வாய்ப்பளிக்கிறது.

சத்தியா- திருக்கோவில்
**கேள்வி:** "அத்தி பூத்தாற்போல" என்கிறார்களே! அத்தி எப்போதாவது பூக்கும் பூவா?
**பதில்:** அத்திமரம் எப்போதும் பூக்கும் மரம்தான். அப்பூ மிகவும் சிறியதாக இருப்பதால் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால்தான் அவ்வாறு கூறுவதுண்டு. நுணுக்கமாக அவதானித்தால் அத்திப்பூவை கண்டுபிடிக்கமுடியும்.



அழகன் - உரும்பிராய்
**கேள்வி:** வெய்யில் காலத்தில் மோர் குடிப்பது நல்லதா?
**பதில்:** மோர் என்பது என்ன? தயிரிலிருந்து வெண்ணெய்யைப் பிரித்தெடுத்தபின் வருவது. தயிரைத் தண்ணீரில் கரைப்பது மோரல்ல. வெண்ணெய் நீக்கிய மோரைக் குடிப்பதால் உடலிலிருந்து நீர் வெளியேறும் அளவு கட்டுப்படுத்தப்படும். அதனால் நீர் இழப்பு ஏற்படாது உடலைப் பாதுகாக்கிறது. அவ்வளவுதான்.

முகுந்தன் - திருநெல்வேலி
**கேள்வி:** கோயில் கோபுர கலசத்திற்குள் இருப்பது என்ன?
**பதில்:** இக்கலசங்களுக்குள் நவதானியங்கள் போட்டு வைக்கப்படுவதுண்டு. குறிப்பாக வரகு தானியம் போடப்பட்டிருக்கும். இதற்கு இரண்டு காரணங்கள் எம் முன்னோர்களால் கூறப்படுகிறது. ஒன்று: உயரமான கோபுரத்தில் மின்னல் தாக்கம் ஏற்படாதவாறு இவை பாதுகாக்கின்றன. மற்றையது ஒரு கிராமத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விதை தானியங்கள் முற்றாக அழிக்கப்படும் நிலை ஏற்பட்டால் கலசத்திற்குள் இருக்கும் விதையை அடுத்த போகத்திற்குப் பாவிக்க முடியும். இவ்விதைகள் 12 வருடங்கள் வரை பாதுகாப்பாக இருக்கக்கூடியவை. இதனால்தான் 12 வருடத்திற்கு ஒரு தடவை கும்பாபிஷேகம் செய்யப்பட்டு புதிய தானியங்கள் மாற்றப்படுகின்றன. அதேவேளை, கருவறையில் விக்கிரகத்தை பீடத்துடன் இணைக்கின்ற அஷ்டபந்தனம் என்ற மருந்துக்கலவையும் செயலிழந்து விடுவதால், அதுவும் புதிப்பிக்கப்படுகிறது.




றொபேட் - ஊர்காவற்துறை
**கேள்வி:** புதிய அரசியல் அமைப்பொன்று இலங்கைக்கு அவசியமா?
**பதில்:** தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு அதில் இடம்பெற வேண்டுமென்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால், அந்த விடயம் இணைக்கப்படாது கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் "புதிது, அல்லது "மாற்றம்" என்று கூற எதுவுமில்லை.

திருச்செல்வம் - தண்ணீரூற்று
**கேள்வி:** கிட்டங்கி என்று கூறுகிறார்களே அதன் அர்த்தம் என்ன?
**பதில்:** கிட்டங்கி என்பது தற்போதுள்ள Super Market இன் ஆரம்ப வடிவம் எனலாம். அதாவது ஒரு கூரையின் கீழ் தேவையான எல்லாப் பொருட்களையும் வாங்க முடியும். ஒரு கட்டடத்தின் பல கடைத்தொகுதிகள் இருக்கும் ஓர் அறையில் உணவுப்பொருட்கள், இன்னொன்றில் சட்டி, பானை, இன்னொன்றில் புடவைகள் என எல்லாவற்றையும் வாங்க முடியும். யாழ்ப்பாணத்தில் பல கிட்டங்கிகள் உடைக்கப்பட்டுவிட்டன. காலி நகரில் இன்றும் கூட கிட்டங்கி பேணப்பட்டு வருகிறது.

# சிங்களத்தில் ‘கூர் வாளின் நிழல்”

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினியால் தனது சிறு வயது வாழ்க்கை, பாடசாலைப் பருவம், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பணியாற்றிய காலம், இராணுவத்தில் சரணடைதல், புனர்வாழ்வு என தனது முழு அனுபவத்தையும் உள்ளடக்கிய நூலாக ஒரு “கூர்வாளின் நிழலில் இருந்த போதிலும் **விடுதலைப் புலிகள் அமைப்பில் அவர் இருந்த காலத்தில் நடைபெற்ற பல உள்விவகாரங்களை வெளியில் கொண்டு வந்த குறிப்புகளே இதில் முக்கியமாகின்றது.**

இந்நூல் அண்மையில் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு தொடர்பாக சிங்கள மக்கள் நினைத்திருந்தது சரிதான் என்பதை இப்புத்தகத்தில்உள்ளசிலகுறிப்புக்கள் வெளிக்கொணர்ந்துள்ளது.

சிங்களபுத்திஜீவிகளும்ஊடக வியலாளர்களும் சிங்கள மக்களுக்கு எதைக்கொடுக்கவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளதையே இந்நூல் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதிலிருந்து தெளிவாகிறது. குறிப்பாக தமிழினியால் வெளிக் கொணரப்பட்ட கீழ்வரும் விடயங்கள் விடுதலைப்புலிகள் தொடர்பில் சிங்கள மக்களுக்கு இருந்த மாஜையை நிச்சயம் உடைத்தெறியும் என்பதில் ஐயமில்லை.

“... ஏனைய இயக்கங்கள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட விடயம் தொடர்பில் புலிகள் இயக்கத்தின் போராளிகளுக்கு அவர்களது தலைமையால் எந்தக் காலத்திலும் சரியான விளக்கம் கொடுக்கப்பட்டதில்லை. மாறாக, மாற்று இயக்கங்களின் தவறான செயற்பாடுகள் காரணமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அவை தடை செய்யப்பட்டன என்ற கருத்துருவாக்கமே இயக்கத்திற்குள் வளர்க்கப்பட்டிருந்தது. புதிய போராளிகளைப் பதிவு செய்யும் படிவத்தில் சகோதரர்கள், உறவினர்கள் எவராவது வேறு இயக்கங்களில் இருந்திருக்கிறார்களா என்ற விபரம் கட்டாயமாகப் பெறப்படுவது வழக்கமாகும்...”


“...அரசியல்துறை மகளிர் பிரிவினுடைய பணிகளாக சமூகத்தில் பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், சமூகத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை இனங்கண்டு அவர்களுக்கான புனர்வாழ்வளிப்பதும், இன்னும் பரந்துபட்ட ரீதியில் சமூக மாற்றத்திற்காக உழைப்பதும், என்பனவாகவே இருந்தன. இதன் அடிப்படையில் தான், அரசியல் மகளிர் பிரிவின் வேலைத்திட்ட அலகுகளும் பிரிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் நடைமுறையில் சாத்தியமானது என்னவோ இயக்கத்திற்கு புதிய போராளிகளை இணைப்பதும், பெண்களுக்கெனக் குறிப்பிட்ட சில வேலைகளை மாத்திரம் செய்ய முடிந்ததுமேயாகும். ஏனெனில் இயக்கத்தின் முழுக் கவனமும், மொத்த வளங்களும் யுத்தத்தில் ஈட்டப்பட வேண்டிய வெற்றியை நோக்கியே திருப்பப்பட்டிருந்தன...”

‘... பெண் போராளிகளின் எந்த நிர்வாகப் பிரிவிலும், அளவுக்கதிகமான ஆண் பொறுப்பாளர்கள் மூக்கை நுழைப்பதைப் பெண் தளபதிகள் விரும்பவில்லை. ஆரம்பதிதிலிருந்தே பெண் போராளிகள் தொடர்பான விடயங்களைத் தலைவர் தானே நேரடியாக வழிநடத்தி வந்திருந்தார். பெண் போராளிகள் வீடுகளில் தமது தகப்பனிடம் காட்டும் அன்பையும், உணர்வு ரீதியான நெருக்கத்தையும் தலைவரிடமும் கொண்டிருந்தனர் என்பது மறுக்கமுடியாத உண்மை....”

“... இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளரான தமிழேந்தி யாழ்ப்பாணம் இழக்கப்பட்டதன் காரணமாக உணர்வு ரீதியாக மிகவும் பாதிப்படைந்திருந்தார். பேராளிகள் மற்றும் தளபதிகள் மத்தியில் நடந்த ஒரு ஒன்றுகூடலில் அவர் உரையாற்றியபோது, இயக்கத்தின் நிதித் தேவைகளும் நெருக்கடிகளும் பற்றி விளக்கமளித்தார். **போராளிகளுக்கான நாளாந்த உணவுத் தேவைகள், உடைகள், பாவனைப்பொருட்கள், மருத்துவச் செலவு என்பவற்றை நிறைவு செய்வதற்கு மாதாந்தம் சண்டையில் உயிரைக் குடுக்கிற போராளிகளுக்கு ஒழுங்கான சாப்பாடுகூட இயக்கத்தால கொடுக்க முடியுதில்லை....”**

“... வருடக்கணக்காக நடந்த யுத்தத்தில், அந்தக் காடுகளுக்குள்ளேயே வாழ்ந்து காட்டுமரங்களில் தமக்குப் பிடித்தமானவர்களின் பெயரெழுதிப் பார்த்து, கண்களுக்குள் கனிந்த அன்பை மௌனக் காதலாக தமது நெஞ்சுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு, வன்னிக்காட்டு மரங்களின் வேர்களுக்குள் வாழ்க்கை முடிந்து போன பல போராளிகளின் கதைகளும் அவர்தம் கனவுகளும் நினைவடுக்களில் ஆழப் புதையுண்டு போன துயரப் பாடல்களாக எனது ஆன்மாவுக்குள் நிதமும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன...”

“...மக்கள் அனைவரும் பயிற்சி மைதானத்திற்கு வந்தேயாக வேண்டும். வயது முதிர்ந்தவர்கள். இருதய நோயாளிகள், அங்கவீனமானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருடன் வேறு பாரதூரமான மருத்துவக் காரணங்கள் உள்ளோர் என குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே விலக்களிக்கப்பட்டிருந்தது. எனைய அனைவரும் பயிற்சி எடுக்க அதனை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த அட்டை இல்லாதவர்கள் கிராம அலுவலர்களிடம் கூட எவ்விதமான உதவிகளையும் பெற்றுக்கொள்வது தடுக்கப்பட்டிருந்தது. வேறுவழியின்றி மக்கள் அனைவரும் பயிற்சிகளில் பங்கெடுக்கத் தொடங்கினர். **எனது தாயாரும் ஒரு மண்வெட்டிப் பிடியை எடுத்துக்கொண்டு மாலை நேரங்களில் அருகிலிருந்த மைதானத்திற்கு பயிற்சிக்குசென்றுவந்தார். அவருக்கு இரண்டு முழங்கால்களிலும் வீக்கமும் நோவும் இருந்த காரணத்தால் மைதானத்தைச் சுற்றி நடக்கும்படி தனது பயிற்சியாசிரியர் கூறியதாகச் சொல்லிக்கொள்வார்..”**




“... இளவயதினர் வன்னியை விட்டு வெளியேறுவது முற்றிலும் தடுக்கப்பட்டிருந்தது. உயர் கல்வி கற்பதற்கான பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்கள், திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண்கள், திருமணக் காரங்களுக்காகவும் மற்றும் மேலதிக வர்த்தக மருத்துவ காரணங்களுக்காகவும் போதிய ஆதாரங்களைக்காட்டி, புலிகளின் புலனாய்வுத் துறையினரிடம் அனுமதி பெற்றதன் பின்னரே வெளியேறக் கூடியதாக இருந்தது. ஆனாலும் கூட பணவசதி படைத்தவர்கள் தமது வீடுகளையும் காணிகளையும் எனைய சொத்துக்களையும் இயக்கத்திடம் ஒப்படைத்து விட்டுக் குடும்பத்துடன் வெளியேறினார்கள். புலிகளின் பயண அனுமதி கொடுக்குமிடங்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் பற்றி மக்களிடம் ஏராளமான விமர்சனங்கள் இருந்தன. மக்கள் மத்தியில் பணிசெய்யும் போராளிகளாகிய நாம், பல சந்தர்ப்பங்களில் மக்கள் கோபத்துடன் எம்மிடம் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாட வேண்டிய நிலைக்கு உள்ளானோம்...”

“....வன்னிப் பெருநிலப்பரப்பில் தஞ்சமடைந்திருந்த, சாதாரண ஏழை மக்களே எல்லைப் படைகளாகவும், போராளிகளாகவும் களமுனைகளில் அதிகமாக உயிரிழந்து கொண்டிருந்தனர் ஆனாலும் மக்களை நேசிக்கும் தலைவர் பிரபாகரன் அந்த மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பார் என்ற எமது திடமான நம்பிக்கையிலிருந்து போராளிகளாகிய நாம் சிறிதும் விலகாதிருந்தோம்...”

“... திரு.அன்ரன் பாலசிங்கம் ஒரு கட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டார். - **படுகொலைகள் அவர்கள் மட்டும் தான் செய்திருக்கிறார்கள் என நினைக்க வேண்டாம். புலிகளும் ஒன்றும் சுத்தமான சூசைப்பிள்ளைகள் இல்லை. நாங்கள் ஒரு படுகொலைப் பட்டியலைக் கொடுத்தால் அவர்களும் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைப் பட்டியலுடன் வருவார்கள்...”**

“..ஒரு தடவை தலைவர் இவ்வாறு கூறினார் - மட்டக்களப்பு அம்பாறைப் போராளிகள் போராட்டத்தில் எவ்வளவோ கஷ்டங்களைப் பட்டிருக்கிறாங்கள் அவங்கட குடும்பங்களுக்கும் அந்த மக்களுக்கும் நிறைய வேலைகள் செய்யவேணும் நிதித் துறை மூலமாக ஓரளவு பண உதவியையும் செய்து கருணாவுக்கும் சொல்லியிருக்கிறன், அந்தச் சனத்திற்கு நிறைய வேலைத்திட்டங்கள் செய்யச்சொல்லி. அவன் செய்யிறான், இவங்கள் பொட்டு ஆக்கள் என்னட்ட வந்து அங்க அது பிழை இது பிழை எண்டு சொல்லிக்கொண்டு நிக்கிறாங்கள், தளபதி மாருக்குள்ள முதலில ஒற்றுமை இருக்கவேணும்..”

“... முப்பது வருட காலப் போராட்டத்தின் எச்சங்களாக, காயமடைந்த போராளிகளும் கடின பயிற்சிகளில் ஈடுபடமுடியாத வயதடைந்த பேராளிகளுமே எஞ்சியிருந்தனர்.

(தொடர்ச்சி 27 ஆம் பக்கம்)

# வடக்கின் உட்கட்டுமானம்

# தமிழரால் தமிழருக்கு...



பேராசிரியர்
அ.துரைராஜா

ஒப்பந்தகாரர்கள் நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கெடுப்பவர்கள். அவர்களின் மூலமாகத் தான் உலகம் முழுவதும் பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இவ்வாறான ஒப்பந்தகாரர்கள் வடமாகாணத்தில் மட்டும் ஏன் தமது பங்களிப்பை அதுவும் தமது சமூகத்திற்குச் செய்ய முடியவில்லை. சமூக அக்கறை இல்லாத இவர்கள் யார்?

05.05.2016 உதயன் பத்திரிகைச் செய்தியொன்றில் வட மாகாண பிரதம செயலர் திரு. பத்திநாதர் "நெல்சிப் திட்டத்தில் நடைபெற்ற ஊழல்கள் தொடர்பில் அடுத்த மாதம் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதில் சட்டநடவடிக்கை எத்தகைய விளைவுகளைக் கொண்டு வரும் என்றோ அவர்களைத் தூக்கில் போடுவது அல்லது மின்சாரக் கதிரையில் இருத்துவது அல்லது வீதியோர தூணில் கட்டிச் சுடுவதோ என எதுவுமே நடக்கப்போவதுமில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு அது பற்றிய அவமானமும் இல்லை.



நெல்சிப் திட்டத்தில் தற்போது கெட்ட உதாரணமாக வலி-தெற்கு பிரதேச சபையின் மேற்பார்வையில் நடைபெறுகின்ற சுன்னாகம் ஐயனார் வீதி வேலை 06 மாதங்களாகியும் இழுபடுவதும், பருத்தித்துறை பிரதேசசபையின் மேற்பார்வையில் நடைபெறும் குடத்தனை பொற்பதி வீதி 16.02.2016 இல் தொடங்கி 15.06.2016 இல் முடிக்கப்படல் வேண்டும். 1400 மீற்றர் நீளமான இவ்வீதிக்கு இன்னும் பொருட்கள் இறக்கப்பட்டு வருகிறது. வேலை தொடங்கவில்லை. (தினக்குரல் 03.06.2016 செய்தி).

ஒப்பந்தகாரர்களை இங்கு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



1. தமது ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் கெட்டுவிடாதபடி சிறந்தமுறையில் ஒரு வேலையை உரிய நேரத்தில் செய்து கொடுப்பது.
2. பெயர் கெட்டாலும் பரவாயில்லை உருவுவதை உருவிக் கொண்டு போவோம் என்று நினைப்பவர்கள்

முதல் ரகத்தில் உள்ள ஒரு சில ஒப்பந்தகாரரே தமிழர் மத்தியில் உள்ளனர். ஆனால், இரண்டாவது பிரிவினர் மிக அதிகமாக உள்ளனர்.

இவர்களது வேலை "சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்ததைப்போல" இரண்டு நாள் வேலை செய்வது. இரண்டு வாரம் எதுவும் நடக்காது. ஏற்கனவே செய்த வேலையை உடைத்து திரும்பவும் செய்வது என இழுபடும். இவ்வாறான ஒப்பந்தகாரரின் ICTAD பதிவை கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்க்கப்படுவது அவசியம்.

உயர் பதவிகளை வகிக்கின்ற பலர் தமது மனைவிமாரின் பெயரில் கூட ICTAD பதிவுகளை மேற்கொண்டு ஒப்பந்த நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். அவ்வாறான ஒப்பந்தகாரர்கள் ஒரு தள்ளுவண்டில் கூட (Wheel Boraw) வைத்திருப்பதில்லை. அவர்கள் தமது நிறுவனத்தைப் பயன்படுத்தி ஒப்பந்தங்களைப் பதிவு செய்து உபஒப்பந்தகாரர் மூலம் மீற்றர் வட்டிக்கு உழைப்பது போல பணம் சம்பாதிக்கின்றனர். இதற்கு பல உயர் அதிகாரிகளின் அனுசரணையும் உண்டு. இதனால் சிறந்த ஒப்பந்தகாரர்கள் பலர் ஓரங்கட்டப்படுகின்றனர்.

உப ஒப்பந்தகாரர் மூலம் வேலைகளை முடித்தபின் தமது ICTAD புத்தகத்தில் "மிகச் சிறந்த முறையில் மேற்படி வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன" என்று உரிய அதிகாரிகளிடம் (அதற்கும் கையூட்டுக் கொடுத்து) ஒப்பம் பெறுகின்றனர். ஆனால் சில அதிகாரிகள் உரிய முறையில் வேலைகளை முடிவுறுத்தாவிட்டால் இதையே ஒரு பொறியாக பயன்படுத்தி வேலைகளை முடிவுறுத்திய பின்னரே ஒப்பமிடுகின்றனர்.

இதில் துயரம் என்னவென்றால் ICTAD பதிவுள்ளவர் 5 சதம்கூட செலவில்லாமல் பல ஒப்பந்தங்களை எடுத்து உப ஒப்பந்தகாரருக்கு வழங்குவதால், உப ஒப்பந்தகாரர் செய்த வேலைகளுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு காசோலை ஒப்பந்தகாரரின் பெயருக்கே எழுதுப்படும். அதை வங்கியில் போடுகின்றபோது குறிப்பிட்ட ஒப்பந்தகாரருக்கு ஏற்கனவே இருக்கின்ற வங்கிப் பாக்கிகளை கழித்துவிட உபஒப்பந்தகாரர் செய்த வேலைகளுக்குக்கூட பணம் பெற முடியாத நிலைஏற்படுகின்றது. இதனால் பலர் தற்கொலை செய்துள்ளனர்.

பல உப ஒப்பந்தகாரர் தாம் சொந்தமாக ஒரு ICTAD பதிவினை மேற்கொள்ள முயலும்போது ஏற்கனவே உள்ள ஒப்பந்தகாரர் ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்கு இடையூறு செய்து அது நிறைவேறாது தடுத்துவிடுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை பதிவு செய்ய அரசஅதிபர் ஆவனசெய்யவேண்டும்.

**உப ஒப்பந்தகாரர் இந்த விடயத்தில் 100% பிரச்சினையை எதிர் கொள்கின்றனர். அவர்களுக்கு சட்டரீதியாக சண்டைபிடிக்க எந்தத் தளமும் இல்லை. ஒப்பந்த காரர் தருவார் என்ற வெறும் நம்பிக் கையிலேயே வேலை களைச் செய்கின்றனர். அதாவது ஓர் ஒப்பந்த காரர் ஒரு வேலையைப் பொறுப் பெடுத்து அதை உப ஒப்பந்தகாரர் ஒருவருக்கு கொடுத்துச் செய்வது சட்டரீதியாக அனுமதிக்கப்படாத ஒன்று.**

உப ஒப்பந்தகாரர் பண நெருக்கடியால் மேற்கொள்ளுகின்ற வேலையில் ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் அது பற்றி யாரும் உப ஒப்பந்தகாரரிடம் கேட்கப்போவதில்லை. அதற்கான அருகதையும் அவருக்கு இல்லை. இத்தகைய சூழலில் ஒப்பந்தத்தை எடுத்தவர் உப ஒப்பந்தகாரருடன் சண்டை பிடிக்கவும், வேலை செய்த பணத்தை தரமாட்டேன் என்று கூறிவிடவும் வாய்ப்புண்டு.

யாழ்ப்பாணத்தில் தற்போது பதிவில் உள்ள ICTAD ...

(தொடர்ச்சி 31 ஆம் பக்கம்)

நிறோய்

# புங்குடுதீவு மகள் வித்தியாவுக்கு




## பிடுங்கப்பட்ட ஒரு சூரியகாந்திக்கான கவிதை

"பிடுங்கப்பட்ட ஓர் இதயத்தின்
பிரிவாற்றாது புண்ணுண்ட
இந்தப் பூந்தண்டைப் பார்
பார்த்தாயா?
விழியிருந்தால் பார்
யார் பிடுங்கினார்கள்?
சூர்யமே இலக்காய் சூல்கொள்ளும்
ஓர் இதயகாந்தியை
பிடுங்கிப்போட
ஒரு பிசாசுக்கே கை நீளும்

பிய்த்தெறிந்த அல்லிகளாய்
சிதறுண்ட எனதகத்துள்
பிடுங்குண்ட அந்த
இதயத்தின் துடிப்பைப்பார்

பூத்திருப்பைப் பறிகொடுத்த
நினைவுகளின் காம்புகுக்கும்
நெகிழ்வுருகல்
நீயறிய மாட்டாய்!
சிதறுண்ட அகத்தைச் சேர்த்தெடுத்து
உறவின் கொடியோட்டம் பந்தலில்
படரவிடும் வரை – பார்
என் கையும் முள்கொள்ளும்

தள்ளி நில்
பிய்த்துப் பிடுங்குவதற்கு நகங்கொண்ட
பிசாசே உன் கையை எடு!
எம் உயிர்கொண்ட பிணைப்பின்
வலயத்துள் ஏன் நுழைந்தாய்?
உந்திக் கமலத்தின்
உடனிருப்பை ஏன் பறித்தாய்?

குறுநகை மலர்வுகளை
குழந்தைகளின் கழுத்தைத்
திருகியெறிந்ததெனக்
காலடிக்கீழ் போட்டாயே பாவி?
பால் குடியின் மென் கதறல்
கேளாச் செவி படைத்தாய்

காலையெனக் கமழும்
கிராமத்தின் இதயத்தை
பெயர்த்துப் பிடுங்குகிற
கோரக் கொடுங்கையே
தூரப் போ!

எமது உயிர்ப்பு வலயத்தின்
எல்லைக்கு அப்பாற்போ!

பிசாசுகளுக்கல்ல
எங்கள் பூந்தோப்பு
பெயர்த்து எறிவதற்கல்ல
உயிர் மலர்வு

அதனை அதனதன் கண் மலர விடு!
எல்லையின்மை ஏந்த
இதழ்விரி தேன்கரபிகளின்
இனிதிருப்பைப் பிடுங்காதே

விலங்குகள் பிசாசுகளே
வேர்கொண்ட வாழ்தோப்பில்
விருட்சங்கள் பூந்திருக்க

"காலத்துயர்" என்ற புங்குடுதீவைச் சேர்ந்த சு.வில்வரத்தினம் என்பவரால் 1995 இல் வெளியிடப்பட்டது.

15.02.1992 இல் யாழ்ப்பாணத்துத் தீவுகள் இலங்கை இராணுவத்தால் சிறைப்பிடிப்பதற்கு முதல் நாள் யாழ்ப்பாணம் வந்து மீண்டும் அங்கு செல்ல முடியாது தனது மனைவி மேகலை, மகள் ரட்சகி, மகன் சசிபவன் ஆகியோரையும் ஊரவர்களையும் பிரிந்து ஏங்கிக்கிடந்த காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.


தனது ஊரின் சூரியகாந்திகள் கொடியவர்களால் பிடுங்கப்பட்டு விடுமோ என ஏங்கி எழுதிய கவிதை இது. அவர் வாழ்ந்த வல்லன் கிராமத்து மகளான வித்தியா என்ற சூரிய காந்திப்பூ அதே ஊரவர்களால், உறவுக் காரரால் பிடுங்கி எறியப்படுவாள் என சூ.வி. நினைத்திருக்கவில்லை. வேறு யாரோ அந்நியர்களால் அவ்வாறான அனர்த்தங்கள் நிகழக்கூடும் என்றே நினைத்திருந்தார்.

## பொருத்துவீடுகள் நல்லது

6500 பொருத்து வீடுகள் விடயத்தில் இதுவரை இருந்து வந்த இழுபறி நிலை பேராதனைப் பல்கலைக்கழகக் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையுடன் பொருத்தலாம் என்கின்றனர். தற்போதுள்ள மாதிரி வீட்டில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென இக்குழு பரிந்துரை செய்துள்ளது.



## ஞாபகத்தில் வைத்திருப்போம்...



பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசனின் 12 ஆவது சிராத்த தினம் மே 31 இல் அனுஷ்டிக்கப்பட்டது.

2004.மே 31 ஆம் நாள் மட்டக்களப்பில் வைத்து திரு.நடேசன் சுட்டுக்கொல்லபபட்டார். நடுநிலையானபத்திரிகையாளரான இவர் நீண்டகாலம் அவரது பணியை தமிழ் மக்களுக்கு ஆற்றியிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கலைஞருக்கு வயது 93



கலைஞர் கருணாநிதி பெரியாரின் விழிப்புணர்வு சித்தாந்தத்திற்கு உட்பட்டவர். இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து வருபவர். தமிழ், தமிழ்க் கலாசாரம், தமிழ் இலக்கியம் என்ற வகையில் உலகளவில் பேசப்படுபவர். பல திரைப்பட வசனங்களில் அவற்றை வலியுறுத்தியும் வந்தவர்.

ஆனால் 03.06.206 இல் அவரது 93 ஆவது பிறந்தநாள் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. தமிழ் கலாசாரத்தில் அல்லது பாரம்பரியத்தில் எப்போது வந்தது இந்தக் கேக். அந்நியர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டதே இது. அவ்வாறென்றால் கேக் அறிமுகமாவதற்கு முன் எம் முன்னோர் பிறந்தநாளைக் கொண்டாடவில்லை என்று அர்த்தம் கொள்ளலாமா? கலைஞர் கருணாநிதியே இப்படியென்றால் ஏனைய தமிழ் மக்கள்..?

# வைகாசி மாநாடுகள் – 2016

**செல்வராசா**

இந்த மாதம் இலங்கையில் பல்வேறு விடயங்கள் நடந்தேறின.

1. முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவுநாள்.
2. கானி கங்கையிலும், கேகாலையிலும் அரநாயக்க பகுதியிலும் வெள்ள அனர்த்தம்
3. ரெலோ தலைவர் சிறிசபாரட்ணத்தின் 30 ஆவது சிரார்த்தினம்
4. ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தேசிய மாநாடு
5. ஈ.பி.டி.பி யின் மாநாடு
6. புளொட் அமைப்பின் மாநாடு

என்பன இதில் முக்கியமாக குறிப்பிடக்கூடியவை. 1986 இல் புலிகளால் அழித்தொழிக்கப்பட்ட ஆயுதம் தாங்கிய இயக்கங்களிலிருந்து தப்பிப்பிழைத்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள், மற்றும் உள்நாட்டில் வாழ்பவர்கள் 30வருடங்களின்பின்மீளவும் தம்மைப்பலப்படுத்தி வருகின்றனர்.




2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் மகிந்த அரசு கருணா, பிள்ளையான், டக்ளஸ் தேவானந்தா போன்றோருக்கு முதன்மை கொடுத்திருந்ததால், இவர்கள் இலங்கையை நோக்கி வரத் துணியவில்லை.




ஆனால், மைத்திரி - ரணில் ஆட்சி அமைக்கப்பட்டவுடன் ஏற்கனவே இருந்த அச்சுறுத்தல்கள் குறைந்துள்ள நிலையில்

1. வெளிநாட்டில் உள்ள தமிழருக்கு **'இரட்டைக் குடியுரிமை"** வழங்குவதென புதிய அரசாங்கம் எடுத்த தீர்மானம்.
2. வெளிநாட்டில் வாழ்வோரைக்கொண்டு முதலீடுகளை அதிகரிப்பது. ஆகிய இரு விடயங்கள் புதிய அரசால் ஊக்குவிக்கப்பட்டன. இந்தச் சூழலின் மாற்றம் இதற்கு வழிவகுத்தது. இதனால் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் இயக்கங்களை தாயகம் நோக்கி ஈர்த்துள்ளது. இவர்கள் தொடர்பில் இலங்கையின் புலனாய்வுத்துறைக்கும் பிரச்சினை இருக்கப்போவதில்லை. ஏனெனில்இவர்களின்செயற்பாட்டில்"தமிழீழம்" தவிர்க்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சூழலில் இவ்வாறானதொரு மாநாட்டை புலிகள் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. இதன் மூலம் புலிகளின் மீள் உருவாக்கம் என்ற விடயம் பற்றி அரசாங்கம் கவலைப் படவே தேவையில்லை. இதில் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட ஈரோஸ் அமைப்பும் அடையாளம் இல்லாது போய்விட்டது.

நடந்துமுடிந்த இம்மாநாடுகள் பற்றி செய்திகளை வெளியிடக்கூட குடாநாட்டுப் பத்திரிகைகள் முன்வரவில்லை. இவற்றை இருட்டடிப்புச் செய்ய வேண்டிய தேவை இப்பத்திரிகைகளுக்கு உண்டு. ஏனெனில் அவர்களின் எதிர்காலம் பற்றிய பிரச்சினை அதில் தங்கியுள்ளது.

தற்போது தாயகத்தை நோக்கி வருபவர்கள் ஏறத்தாழ 30 ஆண்டுகளின் பின்பு வருகின்றனர். இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய இறுதிக் கணங்களில் புலிகளால் தமக்கு தரப்பட்ட அச்சுறுத்தல்கள் இடம்பெற்ற இடங்களை முதலில் பார்வையிடுகின்றனர். தமது அமைப்புக்களில் இருந்தவர்கள் புலிகளால் கொல்லப்பட்ட சக போராளிகளின் குடும்பங்களைச் சந்திக்கின்றனர். அவர்களுக்கு உதவ வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

சாதாரணமாகப் பார்த்தால் 1990 இல் இந்திய இராணுவம் வெளியேறியபின் புலம்பெயர்ந்த தமிழர்களின் உழைப்பில் பெரும்பகுதி பணத்தை போராட்டம் என்ற பெயரில் விடுதலைப் புலிகள் மட்டுமே பெற்றுக் கொண்டார்கள். 2009 இல் அது நிறுத்தப்பட்டாலும் ஏற்கனவே இருந்த புலிகளின் சொத்துக்களுக்கு என்ன நடந்தது என்ற விடயங்களில் முரண்பாடுகள் பல மட்டங்களிலும் வலுத்து வருகிறது. புலம்பெயர் தமிழரில் பெரும்பகுதியினர் தாயகத்துக்கு வருவதையும் அதைப்பற்றிச் சிந்திப்பதையும் இலங்கை அரசு வரவேற்கவே செய்யும். ஏனெனில் அரசு தற்போது முகம்கொடுத்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு குறைந்தபட்ச தீர்வாக இவர்களது முதலீடுகள் இருக்க வாய்ப்புண்டு.





**1983 இன் பின்னரான காலத்தில் போராட்டத்தில் இறங்கியவர்கள் தமிழ் மக்கள் விடுதலை பெறவேண்டும் என்று மட்டுமே நினைத்தார்கள். அவ்வாறானவர்கள் பெடியளோடு பெடியளாக வந்த வாகனத்தில் ஏறிச் சென்றார்களே தவிர அது என்ன இயக்கம், அதன் தலைவர் யார் என்றெல்லாம் தெரிந்து செல்லவில்லை.**


அவர்களில் பலர் 1986 உடன் நாட்டை விட்டு வெளியேறினர் அவர்கள் வெளிநாடுகளில் 30 வருடங்களாக தம்மை பொருளாதார, கல்வி ரீதிலும் வளர்த்துள்ளார்கள்.


வெளி நாடுகளிலிருந்து புலிகள் "மாற்று இயக்கத்தினர்" என்று அடையாளப்படுத்தப் பட்டவர்கள் அதிகம் பேர் மிகச் சாதாரமாக வருவதும் அரசியல் ரீதியான அவர்களது மீள்உருவாக்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலை கேள்விக்குறியாக்கியுள்ளது. இது சற்றும் எதிர்பாராத ஒரு திடீர் மாற்றமாகும்.

(தொடர்ச்சி 27 ஆம் பக்கம் பார்க்க)


உமா – புளொட்


சிறி– ரெலோ


நாபா– ஈ.பி.ஆர்.எல்.எப்.


பாலா– ஈரோஸ்



சந்திரகாசன்

## வைகாசி மாநாடு.....

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2010 தொடக்கம் இன்றுவரை தங்களைப் புலிகளாகவும், புலிகள் அல்லாமலும் ஓர் ஈரூடகப் பாணியில் அரசியல் நடாத்தியதுடன் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியை ஒரு

தாய்க்கட்சியாக உருவகித்து ஏனைய ஆயுதக்குழுக்களை இணைத்து சட்டரீதியாகப் பதிவு செய்வதில் பிரச்சினைகள் இருந்தன.

2015 பொதுத் தேர்தலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஊடகவியலாளர் திரு.வித்தியாதரன் தலைமையில் தேர்தலில் இறங்கியபோது "உண்மையான புலிகள்" முள்ளிவாய்க்காலில் சயனைட் அடித்து செத்துவிட்டார்கள்" என்று கூறியதும் பலருக்கு ஞாபகம் இருக்கலாம்.

தற்போது எழுந்துள்ள இச்சூழல் ரெ-லோ தனியாகவும், ஈ.பி.ஆர்.எல்.எப் தனியாகவும், புளொட் தனியாகவும் இயங்கும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது. அதிகூடிய மக்கள் கட்டுமானத்தைக் கொண்டிருந்த அமைப்புக்களாக புளொட்டும், ஈ.பிஆர்.எல்.எப் புமே இருந்தன.

**இனி அரசியலுக்குத் தேவையான ஆட்பலமும், பணப்பலமும் தமிழரசுக் கட்சியினருக்கு இருக்கப்போவதில்லை. வெளிநாட்டு நிதி விடயத்திலும் புலி ஆதரவுக்குழுக்கள் தமிழரசுக் கட்சிக்கு வழங்கத் தயாராக இருக்கப்போவதுமில்லை. அதேவேளை, தற்போது கூட்டமைப்பில் உள்ள பலர் தமது தாய்க்கட்சிகளை நோக்கி நகர்ந்துவிடவும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.**

இப்புதிய அரசியற் களத்திற்கு நல் லாட்சி அரசும், இந்தியாவும் பச்சைக்கொடி காட்ட வேண்டிய தேவையுள்ளது. இலங்கை அரசைப் பொறுத்தவரை வெளிநாடுகளில் புலிகளுக்கு உள்ள ஆதரவுத்தளத்தை செயலிழக்கச் செய்வதே பிரதான நோக்கமாகும்.

1987 காலப்பகுதியில் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றபோது ஜே.ஆருடன் முரண்பட்ட இந்திய இராஜதந்திரி ஜி பார்த்தசாரதி அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தமையும், யாழ். படைத்தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க அவர்களைச் சந்தித்திருந்ததையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை - சீன உறவுக்கு எதிராக ஓர் அணைகட்டும் அரசியலை இப்புதிய அணுகுமுறைக்கூடாக நகர்த்திச் செல்வது அவசியமாகிறது. ஏற்கனவே களத்தில் நின்ற தமிழரசுக்கட்சி மற்றும் ஈ.பி.டி.பி இற்கு இப்புதிய மாற்றம் பின்னடைவையே கொடுக்கும்.

வ்டமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் புதிய கட்சி ஒன்று உருவாக்கப்பட இருப்பது பற்றியும் தந்தை செல்வாவின் புதல்வாரன திரு.சந்திரகாசன் அரசியலில் இறங்க இருப்பது பற்றியும் பேச்சுக்கள் அடிபடுகின்றன. இவை ஏற்கனவே இருந்து வந்த தமிழர் அரசியல் சூழலை ஏதோ ஒரு வகையில் மாற்றப்போகிறது என்பது மட்டும் உண்மையே.



## சவர்வாளின் நிழல்....

(23 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் தமது இள்மையையும், உடல் வலிமையையும் நாட்டு விடுதலைக்காக உழைத்துத் தொலைத்திருந்தார்கள். பல பாரிய காயங்களை அடைந்துசெயற்படமுடியாதநிலையிலிருந்தஆண், பெண் போராளிகள் பலர் "யார் தான் எங்களை கைவிட்டாலும் அண்ணை கைவிடமாட்டார்" என்ற ஒரே பற்றுதலிலும், நம்பிக்கையிலும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார்கள.."

"... தலைவர் எடுத்த முடிவுகள் பல சந்தர்ப்பங்களில் விமர்சனத்திற்குள்ளாகும் போதும், அவர் மக்களின் நலனுக்காகவும், நாட்டின் விடுதலைக்காகவும் தான் இப்படியான முடிவுகளை எடுத்திருக்கிறார் எனவும் தலைவர் ஒரு முடிவு எடுத்தால் அதில் நிச்சயமாக ஒரு நியாயம் இருக்கும் எனவும் ஒவ்வொரு போராளிளும் எவ்வித ஐயப்பாடுமின்றி நம்பினோம். தலைவர் எடுக்கும் முடிவுகளை · விமர்சிப்பதோ, கேள்வி கேட்பதோ தெய்வக்குற்றம். இழைப்பதற்குச் சமமானதாக இயக்கத்தினுள்ளே கருதப்பட்டது..,"

"...2005 ஆகஸ்ட் 12 அன்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளின் சினைப்பர் தாக்குதலில் உயிரிழந்தார். அதற்கு மறுநாள் பொறுப்பாளர்களுக்கான ஒரு கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர் பிரபாகரன், எப்பிடி, சொறிஞ்சு சொறிஞ்சு கொண்டிருந்தாங்கள் சொத்தையில குடுத்திருக்கிறம் எனக் குறிப்பிட்டார்..."

".. சாள்ஸ் அன்ரனி எடுக்கும் அதிரடியான முடிவு-களால் அவரைக் குழந்தைப் பருவத்திலிருந்து தூக்கி வளர்த்த இயக்கத்தின் மூத்த தள-பதிகள் கூட மனக் கசப்படைந்த சம்பவங்களை அறியக்கூடியதாக இருந்தது. தாக்குதல் தளபதிகளுக்கான கூட்டங்களில் அனுபவம் மிக்க தளபதிகளின் முன்பாக தம்பி சார்ள்ஸ், அவர்களை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை முன்வைப்பதாகவும் அதை பார்த்துக்கொண்டிருக்கவே சங்கடமாக இருப்பதாகவும் தளபதி விதுஷா பல தடவைகள் என்னிடம் கூறியிருக்கிறார்..."

**"...ஒரு தடவை கேணல் விதுசா – இந்தச் சண்டையில நாங்கள் வெல்லுவம் எண்டு நீ நினைக்கிறியா?" எனக் கேட்டார். நான் சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். எங்களுக்கு மட்டும் ஏனடியப்பா இப்பிடி ஒரு வாழ்க்கை? உலகம் எங்கேயோ போயிட்டுது, நாங்கள் மட்டும் காட்டுக்குள்ளேயும், சேத்துக்குள்ளேயும் செத்துக்கொண்டிருக்கிறம்..."**

"…. ஐம்பது வயதை நெருங்கிக் கொண்டிருந்த பல மூத்த ஆண் தளபதிகளும் மனச் சலிப்படைந்த நிலைமைகளுக்கே சென்றிருந்தனர். போர்க்களங்களில் ஏற்படும் அதி-கமான மன அழுத்தங்களும், அவர்களுடைய சீரற்ற உணவுப் பழக்கங்களும், தொடர்ச்சியான அலைச்சல்களும் காரணமாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, முள்ளந்தண்டு பாதிப்பு என்பன போன்ற பல நிரந்தர நோய்களுக்கு உள்ளாகியிருந்தார்கள். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பல வெற்றிகரமான தாக்குதல்களை வழிநடத்தியிருந்த முன்னணித் தளபதி பிரிகேடியர் பால்ராஜ் நீரிழிவு நோயால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில், வேறு பல உடல் உபாதைகளும் சேர்ந்து 2008ல் எதிர்பாராத வகையில் மரணத்தைத் தழுவியிருந்தார்..." **"...எல்லாரும் என்னுடைய கையிலதான் எல்லாம் இருக்குது எண்டு நினைச்சுக் கொண்டிருக்கினம். என்னட்ட ஒண்டுமில்லை என்ர கை வெறுங்கை என்று தலைவர் தனது கையை விரித்துக் காட்டியதாக ஈழப்பிரியன் தனது கைகளை விரித்துக் காட்டினார். அண்ணையே இப்பிடிச் சொன்னால் நாங்கள் என்ன செய்ய முடியும்? என மனவருத்தத்துடன் கூறிவிட்டுச்சென்ற அடுத்தசில நாட்களில், ஈழப்பிரியன் என்ற இளம் தளபதி மகாபாரதத்தில் வரும் அபிமன்யூவின் தீரத்துடன் கிளிநொச்சியில் தன்னைச் சுற்றிவளைத்த இராணுவத்துடன் மோதி வீர மரணத்தைத் தழுவினான்..."**

# மொழிகளின் மூலம் தமிழ்மொழியே 4



Sangakala Sirpachittan Mamuni
"MAYAN"

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

இலக்கணத்தைக் கொண்டே இலக்கியம் இயற்றுதல் வேண்டுமென்பதே மயனின் கொள்கையும் நடைமுறையுமாகும். இவ்விலக்கணப்படி அமைந்த உருவங்கள் மூலத்தின் படிமங்கள் ஆகுமன்றோ? அவ்விலக்கணமே தமிழ் மொழியிலக்கணமும் ஆகுமானால் தமிழ் மொழி - இறைமொழி ஆகுமல்லவா? எனவே தான் இறைவனான சிவபெருமான் தமிழ்ச் சங்கத்தில் புலவரோடு வாதிட்டு இன்புற்றானோ? சிற்பக்கலையைப் பொறுத்தமட்டில் மயன் இயற்றி அன்று தந்த இலக்கணங்களை அன்று போல் இன்றளவும் இக்காலச் சிற்பிகளாகிய நாங்கள் உயிர்போல காத்து வருகின்றோம் என்பதைச் சொல்லி மகிழ்கின்றேன். இலக்கண மரபு வழுவாமல் வெளிப்படவே சிற்பியர் படைப்புக்கள்ள வழிபடு படிவங்களாக தமிழ் மக்கள் மதித்துப் போற்றி வந்த மரபுதான் எத்துணை பெரிது? என்று டாக்டர் வை.கணபதிஸ்தபதி அறிமுகவுரை செய்கிறார்.

அப்போதைய தமிழகக் கல்வி அமைச்சர் கலாநிதி செ.அரங்கநாயகம் தமது அணிந்துரையில் உளத்தில் தோன்றிய உணர்வானது விண்ணாகி, ஒளியாகி வெளிப்பட்டு வளியினால் அசையாகி, ஓசையாகி, ஒலியாகி, மொழியாகிற படிமுறையொன்று பேசப்படுகிறது. மொழி இலக்கண நூல் ஒன்று இங்ஙனம் பேசுவது வியப்பினும் வியப்பல்லவா? இந்த நூலில் மிகச்சிறப்பாக காணப்படுவன காலம் மற்றும் இடம் ஆகிய இருபெரும் அறிவியல் விளக்கப்படுவதே ஆகும். உள்ளமே இடம், அதன் துடிப்பே காலம், இடம் வடிவங்களைத் தோற்றுவிக்கின்றது. காலமே மொழியைப் படைக்கின்றது. இடமும் காலமும் பொருளையே தோற்றுவிக்கின்றன. கண்ணால் பார்க்கப்படுவது இடம் தோன்றிய ஒளிப்பொருள், ஒலிப்பொருளில் பொருள் மறைந்து நிற்கும் அதாவது உணர்வாகும். ஒளிப்பொருள் பருப்பொருளாக நிற்கும். ஒலிப்பொருள், சொற்பொருள் என்ற பிண்டத்தில் நிகழ்வதே அண்டத்தில் நிகழ்கின்றது. இவை எல்லாம் இந்நூலின்று வெளிப்படும் புதுவிளக்கங்கள். இக் கருத்துகளை ஆய்வாளர்களின் ஆர்வத்தை தூண்டுவதற்காகவே குறிப்பிடுகின்றேன் என்று குறிப்பிட்டார் அமைச்சர்.

## ஐந்துமொழி இலக்கணங்களுக்கு தாய் இலக்கணம் ஐந்திறம்

இப்பொழுது அவருக்கு ஏற்பட்ட அளவிலா மகிழ்விற்கு காரணம் உங்களுக்கு புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். அதுவே தொல்காப்பியம் குறிப்பிடும் தொன்நூலும் என்பதால் தமிழின் தொன்மையும் துலங்குமன்றோ? தொல்காப்பியக் காலம் கி.மு.7000 என இந்திய வானி யல் அறிஞர் சீனிவாசகராகவன் அறுதியிட்டு உரைக்கிறார். இது இடைத்தமிழ்க் கழக காலநூல். முதன்நூல் ஐந்திறம் கடற்கோளுக்கு முன் முதற்தமிழ்க் கழக கால இறுதியில் தென்மதுரையில் அரங்கேறியது. இவ் ஐந்திறம் பற்றி கி.பி.1875 இலேயே ஏதோ விதமாக இத்தொன்நூலைப் பெற்றுக்கொண்ட பிரான்சிய மொழியியலாளர் டாக்டர் A.C.புருணல் 'On the Aindra school of Sanskrit Grammarians" என்ற ஆய்வுநூலை எழுதியுள்ளார். அதில் அவர் இவ் ஐந்திறத்தை முதன் நூலாகக் கொண்டு தமிழும் சமஸ்கிருதமும் தமது இலக்கண நூல்களான தொல்காப்பியத்தையும் பாணனியின் அஸ்டாத்தியாய வித்தியாவையும் ஆக்கிக்கொண்டன. இவற்றுக்கு மட்டுமல்ல பல உலகமொழி இலக்கணங்களுக்கு இது மூலவிலக்கணம் என்றும் கூறியுள்ளார்.

சாசனவியல் மற்றும் எழுத்தியல் அறிஞரான பேராசிரியர் இரா. மதிவாணர் 'தமிழின் தொல்காப்பியம், பிராகிருதத்தின் காதந்திரம், பாளியின் கச்சாயனம், சமஸ்கிருதத்தின் அஷ்டாத்தியா வித்தியா, திபெத்திய மொழியின் சன் - சு - பா ஆகிய ஐந்து மொழிகளின் இலக்கணங்களுக்கும் மூலவிலக்கணம் இந்திரனார் எழுதிய ஐந்தி(ற)ரமே என்றார். மேலும் இவ்விந்திரனாரே பிராமி (தமிழி) எழுத்து வடிவையும் வடிவமைத்தவர் என்றும் கூறியுள்ளார். (கலைக் கேசரி 2013 மார்கழி இதழில் "சிந்துவெளித் தமிழ்" - பேராசிரியர் இரா.மதிவாணர்) ஐந்திறவிலக்கணத்தை இயற்றியதால் மயனின் காரணப்பெயராக ஐந்திறன் - ஐந்திரன் - இந்திரன் எனத் திரிபடைந்து ஒரே வடிவில் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் ஒலிக்கிறது. அச்சுப்பதித்தோர் வடமொழியைப் பின்பற்றி "ஐந்திரம்" என ஐந்திறத்தைப் பதிப்பித்தார்கள் என ஆரம்பத்திலேயே பார்த்தோம். பிராமி எழுத்து வடிவையும் ஐந்திறம் தெளிவாக வர்ணிக்கிறது. (ஐந்திறம் 864)

ஆனால், இவ் அருந்தமிழ் இலக்கணம் ஐந்திறம்" அறிமுகமாகிய காலத்தில் தொல்காப்பிய எழுத்ததிகாரவுரையைப் பதிப்பித்த தமிழகப் பேரா சிரியரும் உபவேந்தருமான ஒருவர் "ஐந்திறம் புதிய நூல் என்றும், தொல்காப்பியம் குறிப்பிட்டது, "றகர" வொலியில்லா "ரகர" ஒலியுள்ள ஐந்திரத்தையே அது கூட நூலைக் "குறிப்பிடவில்லை. ஐந்திலக்கணத்தையே (எழுத்து, சொல், பொருள்,யாப்பு, அணி) குறித்தது என அந்நூலில் தன் விளக்கத்தில் கூறுகிறார். நன்று இவர்கள் தமிழ் வளர்க்கும் திறம்? எட்டாத பழம் புளிக்கும் ஐயா.

எனினும் ஐந்திற வியாகரணத்தை அதன் ஆழத்தை புரிந்துகொள்ள தமிழ், சமஸ்கிருதப் புலமை மட்டுமன்று, அதற்கு அப்பால் இவ்விரண்டுக்கும் அடிப்படையாக இருக்கும் ஒலி, ஒளி, காலம், சீலம், இடம் - மூலம், கோலம், ஞாலம் ஆகிய விஞ்ஞானச் செய்திகளைக் கொண்டு அச்சொற்களுக்குரிய விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் (Technical knowledge) தெரிந்திருக்க வேண்டும். (வைசம்பாயனம் பக்27) அவை பலவிடங்களில் இன்றைய விஞ்ஞானம் எடுகோளாக, ஆய்வாக கொண்டிருக்கின்ற பலவற்றை முடிந்த முடிவுகளாக வெளியிடுவதால் அவற்றை விளக்கிச்சொல்ல நவீன விஞ்ஞானமும் தெரிந்திருக்க வேண்டும். வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள் இதிகாசங்கள் ஆகியவற்றில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில அறிவியல்நுட்பங்கள்பேசப்படுகின்றனவேஒழியஅனைத்தையும் ஐந்திறம் போல எந்த நூலும் பேசிடவில்லை. ஐந்திறம்

**"மையறு புலமை செவ்விதிற் பெறினும்**
**ஐயமும் திரிபும் அமைவதும் இயல்பே**

(ஐந் -125)

என்றது. குற்றமற்ற புலமை வாய்க்கப் பெறினும் ஐயம் தோன்றுதல் இயல்புதான். ஆய்ந்து ஆய்ந்து அறிந்து கொண்ட பின்னர் சான்றுகளுடன் மெய்ப்பொருள் உரைப்போரே உண்மையான அறிஞர்கள் ஆவார். திரிபு செய்பவர்களைத் தொண்டு செய்பவர்களாக உலகு ஏத்தாது. உண்மையான அறிவை

**"ஐயமும் திரிபும் நீங்கிய உளத்தால்**
**மெய்ப்பொருள் உரைத்தலும் ஆய்தலும்**
**நெறியே**

(ஐந் -101)

என்றது காண்க. இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை உணர்த்த உங்களை முதற் கழக காலத்திற்கு அழைத்துச் செல்கிறேன். தமிழ்ச்சங்கத்தில் மனு என்ற பாண்டியன் நெடியோன் (வெண்தேர்ச் செழியன்) தலைவராக வீற்றிருக்கிறார். முதன் முதலாக அதில் அதிசிறந்த செயல் நூலான (Technical Thamizh) "சிற்பமாச் செந்நூலை" அரங்கேற்ற பாலகன் மயன் வந்திருக்கிறான். முதிர்ந்த புலவர்கள் உள்ளத்தே செற்றங்கொண்டு பல்வாறு உரைக்கின்றனர். இதனை இதே மயனே உரைக்கிறார்.

(அடுத்த இதழில் தொடரும்)



விஸ்வப்பிரம்மஸ்ரீ இரத்தினம்
அச்சுதபாகன் ஆச்சாரியார் B.A
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# சுவர்ணா மல்லவராட்சி
## சிங்களத் திரையின் தங்க மகள்



**சு**வர்ணா என்பது சிங்கள மொழியில் தங்கம் என்றும் அர்த்தப்படும். அவ்வாறான பெயரைக் கொண்ட சுவர்ணா மல்லவராட்சி சிங்களத் திரைப்படத் துறையில் முதன்மை பெற்ற பெண். நடிகையாக, தயாரிப்பாளராக, பெண் விடுதலைக்காய் குரல் கொடுப்பவளாகத் திகழ்பவர் அவர். அண்மையில் தெரண தொலைக்காட்சி நிறுவனம் நடாத்திய 2016 திரைப்பட விருது விழாவில் சுவர்ணா மல்லவராட்சியின் திரைப்படப் பங்களிப்பிற்கு அதிஉயர் மதிப்பளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1966 இல் இவர் தனது முதல் சிங்கள படத்தில் நடித்திருந்தார். சத்சமுத்திர ( ஏழு மகாசமுத்திரம்), அதனைத் தொடர்ந்து கந்தானே கத்தாவ (கந்தானையின் கதை - 1967), மல்தெனிய சிமியோன், அஞ்சனா, சிங்கபாகு, ஹன்சவிலக் ( பிரித்து அறியும் அன்னப்பட்சி), ரிதி நிம்நய (வெள்ளிக் கரை), யாளுஜெகல் ( ஜெகஅலின் நண்பன்) , பித்திஹத்தர (நான்கு சுவர்கள் - 1982), தடயம் ( வேட்டை -1984), மாயா, சுத்தியாகே கத்தாவ (சுத்தியின் கதை - 1985), கடபத்தக சாயா ( கண்ணாடியில் தெறிக்கும் விம்பம்), சாகர ஜலய (சமுத்திர நீர் -1988), அயோமா, மடாறா பறசத்து, மீஹரக்கா (எருமை மாடு), பவதுக்க (பாவதுக்கம் - 1997) பவகறும (பாவகர்மம் - 1988), சன்னகின்னரி (கடற்கன்னி), அனந்த ராத்திரிய (முடிவற்ற இரவு)

சுவர்ணா மல்லவராட்சி 26 தடவைகள் சிறந்த நடிகைக்கான விருதினைப் பெற்றவர். 2004 இல் இலங்கைக்கான ஐ.நா. மனித உரிமைகள் அமையத்தில் (UN-HCR) பெண் உரிமைக்கான தூதுவராக நியமிக்கப்பட்டவர்.

தெரண திரைப்பட விருது வழங்கும் விழாவில் **"வாழ்நாள் நடிப்புச் சாதனையாளர் விருது" வழங்கப்பட்டபோது, என்றும் இல்லாதவாறு பார்வையாளர்களாக வந்திருந்த தயாரிப்பாளர்கள், நடிகர்கள் மற்றும் திரைப்பட துறை சார்ந்த அனைவரும் எழுந்து நின்று கௌரவித்தமை மிகச் சிறந்த கௌரவம் என்பதற்கு அத்தாட்சியாக இருந்தது. இது ஏனைய சிங்கள திரைப்பட நடிகைகளுக்கு இதுவரை கிடைத்திராத அதி உயர் மதிப்பாகும்.**




இப்பரிசிலை திரைப்படத் தயாரிப்பாளர் வசந்த ஒபேசேகர அவர்களால் வழங்கிக் கௌரவித்ததும் இங்கு சிறப்பாக குறிப்பிடமுடியும்.

# எக்குங்கோ.... எக்குங்கோ...

ஒரு நிகழ்வில் படம் எடுப்பவர் உருவத்தில் பெரிய ஆண்கள் சிலரை நிறுத்திவைத்து படம் எடுக்கத் தயாராகும்போது வளமையாகக் கூறுகின்ற "ரெடி" என்ற சொல்லைப் பயன்படுத்தாது கமராவைத் தயார்ப்படுத்திவிட்டு எக்குங்கோ... எக்குங்கோ என்றாராம். அதன் பின்புதான் தெரியும் நின்றவர்கள் தமது வயிறுகளை ஒரு கணம் எக்கும்போது தோற்றம் வித்தியாசமாக இருக்குமென படம் எடுத்தவர் நினைத்திருக்கிறார்.

# இப்படியும் நம்புவதா?

ஒருவன் தனது உடலை ஒரு சிறிய சோடாப்போத்தலினுள் நுழைத்துக் காட்டுகிறேன் என்று பல்வேறு பட்ட விளம்பரங்களைக் கொடுத்து குறிப்பிட்ட மைதானம் ஒன்றிற்கு மக்களை ஒன்றுசேர வைத்தான். குறிப்பிட்ட தினத்தன்று மக்கள் முண்டியடித்து அவ்விடத்திற்குச் சென்றபோது ஒரு பிரத்தியேக மேடையில் மேசைமீது ஒரு சிறிய சோடாப்போத்தல் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் குறிப்பிட்ட நபர் அங்கு வந்து சோடாப்போத்தலை கையில் எடுத்தபோது அனைவரும் கைதட்டி ஆரவாரித்தார்கள்.

போத்தலை எடுத்த அவன் மக்களைப் பார்த்து "மூட மக்களே இப்படி ஒரு சிறிய போத்தலுக்குள் எனது உடலை நுழைக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டபோதுதான் மக்கள் தமது நிலையை உணர்ந்தார்கள். இவ்வாறு போத்தலினுள் நுழையும் கதையைத்தான் தேர்தல் காலங்களில் பல தமிழ்த் தலைவர்கள் மக்களுக்குக் கூறினார்கள்.

# இறுதி யுத்தத்தின்.....

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய சூழலில் பிரிவினை என்ற பதம் செயலிழந்து விட்டதால் சமஷ்டியாக மாற்றியுள்ளோம்.

**இலங்கைக்குள் மட்டும் யுத்தம் தீர்மானிக்கப்பட்டிருந்தால் நிச்சயம் தமிழீழத்தை அமைத்திருப்போம். 2009 இல் புலிகள் வண்ணாத்திப்பூச்சு பாலத்தினூடாக குடாநாட்டைக் கைப்பற்ற முயன்றபோது இந்தியா தலையிட்டது.**

புலிகளின் போராட்ட வல்லமையை உலகம் விரும்பவில்லை. புவிசார் அரசியலுக்குள் அகப்பட்டு நசுக்கப்பட்டோம். புலிகளை **"உலகப் பயங்கரவாதிகள் தரத்திற்கு கொண்டு வந்தார்கள். தமிழீழக் கோரிக்கையை நாங்கள் இன்னும் நிராகரித்து விட்டோம் என்றில்லை.**

சுனாமி ஏற்பட்டதன் பின் (26.12.2004) சிறான் என்ற அமைப்பினூடாக இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்ற விடுதலைப் புலிகள் தயாராக இருந்தார்கள்.

சமாதான முயற்சியில் புலிகள் இறங்கியிருந்த வேளையில்தான் ஐரோப்பிய நாடுகள் புலிகளைத் தடைசெய்தார்கள். பேச்சுவார்த்தைக் காலத்திலேயே விடுதலைப் புலிகள் அமைப்பினை அழிப்பதற்கான முழு முயற்சிகளையும் **எரிக்சொல் ஹெய்ம்** போன்றவர்கள் செய்தார்கள். சமாதான விரும்பிகளாக ஐரோப்பிய நாடுகளோ, எரிக்சொல் ஹெய்ம் போன்றவர்களோ செயற்படவில்லை.

இது புலிகளை அழித்துவிட வேண்டும் என்ற முடிவை உலகம் முதலில் எடுத்துவிட்டது என்பதற்கு அடையாளமாகும். தமிழ் மக்களின் அழிவில் உலகத்திற்குப் பங்குண்டு. அவர்கள் தற்போது அதனை மறுக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் மனித உரிமைகளை மதித்து நடந்தவர்கள். புலிகளை எதிர்மனப்பாங்கோடு பார்ப்பவர்கள் அவர்களை மனித உரிமைகளை மீறியவர்களாக பார்க்கின்றனர். ஓர் ஆயுதம் தாங்கிய இயக்கம் சில தவறுகளை விடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ரஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொல்லவில்லை. அக்கொலை அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. கிழக்கில் முஸ்லிம்களின் படுகொலையை விடுதலைப் புலிகள் செய்யவில்லை. அப்போதைய கிழக்குத்தளபதியாகஇருந்தகருணாதான்செய்தார். அவருக்குப்புனர்வாழ்வு வழங்கப்படவில்லை.


இறுதி யுத்தத்தின்போது மக்களோடு இருந்தவன் நான். அரசாங்கம் பாதுகாப்பான இடம் என அறிவித்த பகுதிகளுக்கு மக்கள் சென்றபோது விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் அங்கு நடத்தப்பட்டன.

இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் மக்களைக் கொல்லவில்லை. நான் அறிந்த வரையில் அவ்வாறான சம்பவங்கள் எவையும் நடக்கவில்லை. அவ்வாறு அவர்கள் செய்திருந்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கூறவேண்டும். ஆனால் அரசாங்கமே அவ்வாறு கூறுகிறது.

மக்கள் விடுதலைப் புலிகளை நம்பி உணர்வு பூர்வமாக அவர்களுடன் இறுதிவரை சென்றார்கள். அந்த நிலையில் விடுதலைப் புலிகள் தவறு செய்திருந்தால் அது தண்டனைக்குரியது.

இணைந்த வடகிழக்கில் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழவேண்டும். பெருந்தலைவர் அஷ்ரபினால் முன்வைக்கப்பட்ட 'தனி அலகு" என்ற விடயம் பரிசீலிக்கப்படல் வேண்டும்.

# ஒலிபெருக்கியை



# மக்கள் வெறுக்கத்தொடங்கிவிட்டார்கள்... - விமல்

**கடந்த 40 வருட காலமாக மின்னொளி மற்றும் ஒலிபெருக்கி சேவைகளை வழங்கிவரும் மல்லாகம் பாலசுந்தரம் விமலகாந்தன் (விமல்) அவர்களை பேட்டி கண்டோம். "விமல் சவுண் சேவிஸ்" முன்பு கிராமங்களில் இவர்களின் செல்வாக்கு எப்படி இருந்தது? தற்போது எப்படி உள்ளது? எதிர்காலம் எப்படியோ?**

**கேள்வி :** இந்தத் தொழிலை எவ்வாறு தெரிவு செய்தீர்கள்?

**பதில் :** உண்மையில் இந்தத் தொழிலை ஆரம்பித்தவர் எங்கள் அப்பா. அவர் 1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில "ஞானம்ஸ் லைட்" என்ற பெயரில் இயங்கியவர்கள் தான் பிரபல்யமாக இருந்ததாகவும், அப்பா அவர்களுடன் வேலை செய்து அந்தத் தொழிலைப் படித்த பின்பு சிறிய அளவில் ஆரம்பித்ததாக அறிந்தேன்.

1950 காலப்பகுதியில் மின்சாரம் இருக்கவில்லை. அதனால் இந்தத் தொழிலுக்கு விசேட தேவை இருந்தது.

**கேள்வி :** ஆரம்பத்தில் எத்தகைய ஒலிபெருக்கிகளை வைத்திருந்தார்?

**பதில்:** இரண்டு ஒலிபெருக்கியுடன் ஆரம்பித்திருக்கிறார். அந்தக் காலத்தில் இரண்டு ஒலிபெருக்கியுடன் ஒரு திருவிழா நடத்த முடியுமாம். வேறு சத்தங்கள் இருப்பதில்லை. ஊர்கள் மிக அமைதியாக இருந்த காலமது.

**கேள்வி :** இந்தச் சேவையை எங்கெல்லாம் நடத்தினார்கள்?

**பதில் :** யாழ்ப்பாணம், அனுராதபுரம், வவுனியா எல்லாம் கொண்டுபோய் சேவை வழங்கினார்கள். குறிப்பாக அந்தக் காலத்திலே தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் லைற், ஒலிபெருக்கி என்பன அதிகம் பயன்படுத்தப்பட்டது.

**கேள்வி:** வேறு எங்கு பாவித்தார்கள்?

**பதில் :** 1971 இல் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளின் போது சிங்கள ஊர்களில் எல்லாம் மின்சாரம் இல்லை. அந்த நாட்களில் பல மாதங்கள் சிங்கள ஊர்களில் ஓடியதாக அப்பா கூறுவார். அந்த ஊர்களின் பெயர்கள் எனக்குத் தெரியாது?



**கேள்வி:** அப்பா மட்டும் இத்தொழிலைச் செய்தாரா?

**பதில் :** இல்லை. அப்பாவுடன் எங்கள் சித்தப்பா பரமானந்தம், கந்தசாமி என்று இன்னொருவர் என இணைந்து வேலை செய்தவர்கள். நான் சிறியவனாக இருந்தபோது பல நாட்கள் வெளியில் நின்று வேலை செய்துவிட்டு, வீட்டுக்கு வந்து உடனேயே வேறு ஓட்டங்களுக்கு போவதை நான் கண்டிருக்கிறேன். அவ்வளவுக்கு அதன் கிராக்கி இருந்தது.

**கேள்வி :** பெரிய எஞ்சின் எப்போது வாங்கினார்?

**பதில் :** 1970 இற்குப் பின்பு வாங்கினார். அது வாங்கியபின் 500 ரியூப் லைற்கள் ஒரே நேரத்தில் ஒளிரக்கூடிய வசதி இருந்தது. இரண்டு சிகரங்களுக்கு பூட்டக்கூடிய லைற் வசதி அதன் மூலம் கிடைத்தது.

**கேள்வி :** அப்போது இத்துறையில போட்டியாக வேறு லைற் எஞ்சின்கள் இருக்கவில்லையா?

**பதில் :** இருந்தார்கள். ஒரு கோயில் திருவிழா என்றால ஒரு எஞ்சினுக்கு 50 லைற் பூட்டுகின்ற ஏற்பாடு இருக்கும். ஒருவா கோயிலைச் சுற்றிப் பூட்டுவது. மற்றவர்கள் ஒவ்வொரு சிகரம் என ஒதுக்கித் தருவார்கள். அவற்றை திருவிழா அன்றே பகலில் பூட்டி விடலாம். தற்போது ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு ரியூப் லைற்கள் போடவேண்டியிருப்பதால் ஒரேநாளில் அவற்றைப்பொருத்துவது சிரமம்.

**கேள்வி:** தாங்கள் எப்போதிருந்து இந்த வேலையைச் செய்து வருகின்றீர்கள்.

**பதில் :** 2000 ஆம் ஆண்டிலிருந்து நான் செய்து வருகிறேன். வற்றாப்பளை, புளியம் பொக்கணை, புதூர் நாகதம்பிரான் கோயில் திருவிழாக்களின்போது அங்கு சேவையில் ஈடுபடுவோம்.

**கேள்வி :** ஒரு இயந்திரத்தை வைத்தே எல்லாச் சேவைகளையும் செய்யமுடியுமா?

**பதில்:** இல்லை. அங்கு எந்தளவு மின்சாரம் தேவையிருக்கிறதோ அதற்கேற்ற மின்பிறப்பாக்கிகளை கொண்டு செல்வோம். என்னிடம் 100 Kw – 1, 10 KW -1,25 Kw -1, 12 KW -1,3 KW -2 என வைத்திருக்கிறேன்.

**கேள்வி :** கோயில் திருவிழாக்களை விட வேறு எந்த வகையில் ஓட்டம் கிடைக்கும்?

பதில் : எனது அப்பா, சித்தப்பா காலத்தில் "வடக்கும் தெற்கும்", "வெளிக்கிடடி விஸ்வமடுவுக்கு" ."காத்தவராயன்" போன்ற நாடகங்களுக்கு ஒலி, ஒளி அமைப்புச் செய்தார்கள். எமக்கு அந்தச் சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. திருமண வைபவங்கள், பிறந்தநாள் என செல்வதுண்டு.

**கேள்வி :** பெரிய திருவிழாக்களின் போது எத்தனை பேர் வேலை செய்வீர்கள்?

**பதில் :** குறைந்தது 05 பேராவது தேவை. வற்றாப்பளைக் கோயிலுக்கு 650 ரியூப் லைற்கள் பூட்டவேண்டியிருக்கும். 05 நாட்கள் அதற்காக செலவிட வேண்டியிருக்கும்.

**கேள்வி :** பொதுவாக கோயில்களில் மின்சாரம் இருக்கும்போது ஏன் தங்களது சேவை அவர்களுக்குத் தேவைப்படுகிறது?

**பதில் :** கோயிலில் மின்சார வசதி இருந்தாலும் அதிக மின்குமிழைப் பொருத்தினால் ரான்ஸ்போமர் தாங்காது அதனால்தான் பிரத்தியேகமாக பூட்டவேண்டியிருக்கிறது. எமக்குக்கூட அந்தப் பிரச்சினை ஏற்படுவதுண்டு. லோட் கூடும்போது பியூஸ் போகும் அல்லது பிறேக்கர் அடிக்கும்.

**கேள்வி :** வருடம் முழுவதும் உங்களுக்கு உழைப்பு இருக்குமா?

**பதில்:** வருடத்தில் தை - ஐப்பசி வரை தொடர்ச்சியாக தொழில் இருக்கும். இரண்டு மாதங்கள் தான் வேலை இருக்காது. பந்தல், மேளம், சிகரம் என எல்லோருக்கும் இதே நிலை இருக்கும்.

**கேள்வி :** தொடர்ச்சியாக உங்களைப் பிடிப்பவர்கள் உள்ளார்களா?

**பதில்:** ஆம். ஜனவரி 1 ஆம் திகதி சுன்னாகம் பெரிய தேவாலயத்தில் நள்ளிரவு ஆராதனைக்குச் செல்வோம். அந்தப் பாதிரியார் தான் வருடம் பிறந்தவுடன் கைவிசேடம் தருவார். அங்கு எல்லாமே நேரத்துக்கு நடைபெற்று முடியும்.

**கேள்வி :** இரவு நேரம் திடீரென லைற் இல்லாது போனால் என்ன செய்வீர்கள்?

**பதில்:** சிறிய பிழை என்றால் உடனே செய்து விடுவோம். டைனமோவில் ஏதாவது பிழை என்றால் உடனடியாக எதுவும் செய்ய முடியாது.

**கேள்வி :** திருவிழா, வேறு விழாக்களில் சண்டைபோட்டு லைற்களை உடைக்கமாட்டார்களா?

**பதில்:** முன்பு திருவிழாக்காரர் சொன்னால் எல்லோரும் கேட்பார்கள். இப்போது அந்த நிலை இல்லை. ஆனாலும் சுட்டிபுரம் திருவிழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்வார்கள். ஆனால் அங்கு பிரச்சினை ஒருபோதும் வருவதில்லை.

**கேள்வி:** கோயில்களைத் தவிர வேறு தேவைகளுக்கு ஒலிபெருக்கி, மின்னொளி பொருத்துவதுண்டா?

**பதில் :** 1974 ஆம் ஆண்டு தமிழராய்ச்சி மாநாடு, தந்தை செல்வாவின் கூட்டங்கள், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்ட இரவுப்போட்டிகள் என பலவற்றுக்கு மின்னொளி பொருத்தியுள்ளோம்.

**கேள்வி:** எதிர்காலத்தில் ஒலிபெருக்கியின் பாவனை எப்படியிருக்கும்?

**பதில் :** ஒலிபெருக்கியை பொதுவாக மக்கள் வெறுக்கிறார்கள். ஒரு சிலர் கட்டச்சொல்வதற்காக கட்டுகிறோம். அதில் எமக்கு வருமானம் உண்டு. முன்பு இரண்டு ஒலிபெருக்கி பொருத்தும் போது இருந்த இனிமையும், தெளிவும் இப்போது இருப்பதில்லை.

**பாமு**

தொடர்ச்சி 31 ஆம் பக்கம்)

## வடக்கின் உட்கட்டு...

(24 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவுகளை நேரடியாகப் பரிசீலித்து இவ்வாறான போலி ஒப்பந்தகாரர்களை இல்லாது செய்வது மட்டுமல்லாது, இதுவரை மேற்கொள்ளப்பட்ட சட்டபூர்வமற்ற செயற்பாடுகளுக்கு சட்டரீதியான தண்டனை வழங்கப்படல் வேண்டும். அதேவேளை உப ஒப்பந்தகாரர்களுக்கு அவர்களால் வழங்கவேண்டியுள்ள மிகுதிப் பணத்தையும் பெற்றுக்கொடுப்பது அவசியம். ஒரு முதற்தர ஒப்பந்தகாரரிடம்

1. போதியளவு திரவப்பணம் கையில் இருக்கும்.
2. ஊழியர்களுக்கான சம்பளம், ஊழியர் சேம லாபநிதி, பங்குஇலாபம் (Bonus) போன்ற ஒழுங்குகள் பேணப்படும்.
3. கனரக வாகனங்கள், அவற்றைத் திருத்துவதற்கான குழுவினர், நடமாடும் சேவை என்பன இருக்கும்.
4. காப்புறுதி செய்யப்பட்டிருக்ககும்
5. தரமான பொறியியலாளர்கள், தொழில்நுட்பப் பிரிவினரை வைத்திருப்பர்.
6. குளம், வீதி, பாலங்கள், பாரிய கட்டடத் தொகுதி போன்றவற்றுக்குத் தேவையான கனரக வாகனங்கள், ரெடி மிக்சர், அதற்கான வேலைத் தளங்கள் அனைத்தும் இருக்கும்.
7. வினைத்திறன் மிக்க (Skilled workers) வேலையாட்களை மட்டுமே வேலைக்கு வைத்திருப்பர்.
8. தாம் ஒப்பந்தத்தில் பொறுப்பெடுத்த வேலையை மட்டும் செய்வார்கள். மேலதிகமாக மதிப்பீட்டைச் செய்தவர்களது பிழைகளுக்கு வேலை செய்யமாட்டார்கள்.
9. வேலைத்தளத்தைப் பார்த்து அதிலுள்ள பிரச்சினையை விளங்கிக்கொண்ட பின்னரே ஒப்பந்தம் செய்ய ஒத்துக்கொள்வார்.
10. வேலைகளை தமது கம்பனியின் பெயர்கெடக்கூடாது என்ற வகையில் சிறப்பாகச் செய்வார்.

இவ்வளவும் சரியாகப் பேணப்படுவதால் யாருக்கும் கையூட்டுக்கொடுத்து தமது வேலைகளை சிபார்சு செய்யும் நிலை அவர்களுக்கு இல்லை. இவ்வாறான ரகத்தில் உள்ள ஒப்பந்தகாரர்களில் சிங்களவர்களே அதிகம் உள்ளனர். பல பரம்பரையாக இவ்வேலைகளை மேற்கொள்பவர்களும் உள்ளனர்.

இவ்வாறான உள்ளடக் கங்கள் வட பகுதி ஒப்பந்தகாரரிடம் இல்லாது இருப்பதால்தான் குறைந்த தொகைக்கு ஒப்பந்தத்தைப் பொறுப்பெடுத்து வேலையும் தரமற்றதாக்கி தாமும் மீள முடியாத நட்டத்திற்கு ஆளாகின்றனர்.

குறைந்த Bidding இல் வேலைகள் எடுத்து அதில் குறிப்பிட்ட வீதத்தை (5% மேல்) வாங்கியபின் உப ஒப்பந்தகாரரும் தனது இலாபத்தை எடுத்து கையூட்டுக்களுக்கும், காசு செலவளிக்கும்போது மொத்த ஒதுக்கீட்டில் 40 % வரை குறிப்பிட்ட வேலைக்குப் பயன்படுத்தப்படுவதில்லை இதனால் அவ்வேலையின் தரம் மிக மோசமாக இருக்கும். இவ்வேலைக்கான தர நிர்ணயத்தை யாரும் கொடுப்பதில்லை.

உலகவங்கி, ஆசியஅபிவிருத்தி வங்கி போன்றன பாதிக்கப்பட்ட மக்களுக்கான உட்கட்டுமான வேலைகளை மீள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முனைந்தபோதிலும், அதில் 50 % க்கூட அடைய முடியாத நிலையே காணப்படுகிறது.

பல முதல்தர ஒப்பந்தகாரர் தமது வேலைகளைச் சரிவரச் செய்து முடிப்பதுடன், நின்றுவிடாது தமது இலாபத்தின் ஒருபகுதியை அப்பகுதிப் பாடசாலை, வீதி, கோவில் என ஊருக்குத் தேவையான சில விடயங்களை அன்பளிப்பாகவும் செய்து கொடுக்கின்றனர்.

ஆனால், உபலப்பந்தகாரர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேலைகளில் பல மாற்றங்கள் (Variation) அடிக்கடி செய்யப்பட்டு தமது நட்டத்தை ஈடுசெய்ய பார்க்கின்றனர். இது குறிப்பிட்ட வேலையின் தரத்தில்தான் பிரச்சினையைக் கொண்டு வருகிறது.

பொதுவாக உபலப்பந்தகாரர்கள் தாம் அதிலிருந்து தப்புவதற்காக பல மட்டங்களில் கையூட்டுக் கொடுக்கவேண்டி இருக்கின்றது. இக்கையூட்டு விடயத்தில் உண்மையான ஒப்பந்தகாரர் நட்டப்படப்போவதுமில்லை உபலப்பந்தகாரர் நட்டப்படப் போவதுமில்லை. நேரடியாக மக்களே பாதிக்கப்படுகின்றனர்.

உதாரணமாக ஒரு பாலம் கட்டுவதற்கு 100 பைக்கற் சீமெந்து தேவையெனில் அந்தப் பாலத்தை உருவாக்க அல்லது மண்ணுடன் கலக்க 85 பைக்கற்றுக்கள் கட்டாயம் பாவிக்கவேண்டியிருக்கும். மிகுதி 15 பைக்கற்றுக்களில் தான் அப்பாலத்தின் தரம் (Quality), நீடித்த பாவனை (sustainablity) ஆகியன தங்கியிருக்கும் எனவே, இவ்வேலைகளில் கைநனைப்பவர்கள் அவ்வேலையின் தரத்தில் கை நனைக்கிறார்கள் என்பதே உண்மை.

எனவே, இப்பிரதேசங்கள் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு, அபிவிருத்தியில் கைவிடப்பட்டு இருந்த நிலை மாறிவரும்போது தமிழ் அலுவர்கள், தமிழ்தொழில்நுட்பவியலாளர்கள், தமிழ் ஒப்பந்த காரர் என்போர் தவறிழைத்துவிட்டு சிங்கள அரசை நோவதில் ஏது பயன்.

இத்தமிழ் அதிகாரிகளுக்கு மட்டும் ஏன் தமது நாட்டில் பற்றில்லாது போயிற்று.

**தமிழ் பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் ஒருகணம் உணரவேண்டும் பொறியியல் துறையில் உலகிற்கே ஒரு கோட்பாட்டை உருவாக்கிக்கொடுத்த (Thurai Theory) பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாணத்து தமிழர் என்று கூறுவது தற்போதுள்ளவர்கள் வெட்கப்படவேண்டும். அவர் ஒரு தமிழராக இருந்தபோதிலும் அவர் ஒரு விதிவிலக்கானவர் என்பதை தற்போது நடைபெறும் கட்டுமானப் பணிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.**

இவ்வாறான சூழலில் வடமாகாண பிரதம செயலாளர், மற்றும் யாழ் அரசஅதிபர் போன்றவர்கள் இம்முறைகேடுகள் தொடர்பில் ஆராய்ந்து வருவது நல்ல பலனையே கொண்டுவரும். இதன் மூலம் பிழையானவர்கள் ஒதுக்கப்பட வாய்ப்பு ஏற்படும்.

ஏற்கனவே நெல்சிப் திட்டத்தில் பாரியளவு ஊழல்கள் நடந்துள்ளன என்று கூறியபோதிலும் நல்லாட்சி அரசாங்கத்திலும் அதே நிலை தொடர்வது வருந்தத்தக்கது. ஒன்றுமட்டும் உண்மை அதிகாரிகளுக்கு மக்கள் மீது இருக்கும் விசுவாசத்தை விட ஒப்பந்தகாரர்மீது இருக்கும் விசுவாசம் அதிகமாகவே உள்ளது.

# சிங்களவரின் சாதி அமைப்பு முறை

1. **கொய்கம** – விவசாயம்செய்வோர், நிலச்சொந்தக்காரர் (வேளாளர் போல)
2. **வகும்புறா அல்லது தேவா** – இவர்கள் கித்துள்கள் மற்றும் கித்துள் பாணி தயாரிப்போர் அதே வேளை, விவசாய நடவக்கைகளிலும் ஈடுபடுவர்.
3. **பட்டு** – இவர்கள் விவசாயக் கூலிகள்
4. **நவந்தன (அக்காரி)** – இவர்கள் கலைஞர்கள்
5. **றடா** – சலவைத்தொழில் செய்வோர்
6. **பெரவா** - மேளம் அடிப்பவர்கள், பாரம்பரிய பறை போன்றவற்றை அடிப்பவர்கள், விவசாயக் கூலிகள்
7. **கின்னற** – சமூகத்தில் புறம்பாக வைக்கப் பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட மக்கள் இவர்கள் துப்புரவு செய்யும்தொழிலாளர்களாகக் காணப்படுகின்றனர்.
8. **கண்டி அரசின் இராஜகாரிய முறையில் உருவான சாதி** – இவர்கள் மன்னனுடைய அரண்மனையில் பல்வேறு வேலைகளைச் செய்பவர்கள். இது ஒரு புதிய சாதிப் பிரிவு போல உருவாக்கப்பட்டது.

( அரச உத்தியோகத்தர்கள் போல)

சிங்கள மக்கள் உடரட்ட (மலைநாடு) பாதரட்ட (தாழ்நிலம்) என நில அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தாலும் மேற்கூறப்பட்ட சாதி அமைப்பும் தொழில் புரிவோரும் பொதுவாகக் காணப்படுகின்றனர். தென் கரையோரப் பகுதியில் மூன்று வேறுபட்ட சாதிகளை அடையாளம் காண முடியும்.

**1. சலங்கம, 2. துரவா, 3. கரவா** இப்பிரிவில் பெரும்பாலானவர்கள் விவசாயம் செய்வோர்களாகவும் வேளாளர் குடும்பத்தை ஒத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் இவ்வாறான உயர் குழாத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயிகள். கரவா என்கின்ற சாதியினர் மீன்பிடித் தொழில் புரிபவர்கள். இங்கு காணப்பட்ட சில சாதிப்பிரிவினர் தென்னிந்தியப் பகுதியிலிருந்து வந்து தொழில் ரீதியாகக் குடியேறிச் சிங்களப்பெண்களைதிருமணம்செய்து உருவான இனமாகக் கொள்ளப்படுகிறது. திலக் ஜெயரட்ண என்பவரால் எழுதப்பட்ட கடுல்ல (கடவை) என்ற தொலைக்காட்சி நாடகம் இவ்விடயத்தை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## ஒலிபெருக்கியை..

(30ம் பக்கத் தொடர்ச்சி...)

காலகதியில் ஒலிபெருக்கி கைவிடப்படும்.

**கேள்வி:** லைற் எஞ்சின் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

**பதில் :** மின்சாரம் திடீரென இல்லாது போவது மிகச் சாதாரண விடயம். அப்போதெல்லாம் மின்பிறப்பாக்கிகள் தான் கைகொடுக்கும்.

**கேள்வி** உங்களிடம் உள்ள மின்பிறப்பாக்கிகள் எந்த வகையானவை?

**பதில் :** இங்கிலாந்து மெசின்கள் தான் அதிகம் உண்டு. பெற்றர், கிளிலோசர், லிஸ்ரர், பேகுசன், யப்பான் மின்பிறப்பாக்கிகள் என்பன உள்ளன. இதில் யப்பான் மின்பிறப்பாக்கிகள் உருவத்தில் மிகவும் சிறியவை. கடுமையான பயன்பாட்டிற்கு அவற்றை நீண்டகாலம் பாவிக்க முடியாது.


பெரிய இயந்திரம் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் புதிய படங்கள் திரையிடப்படும்போது ஏ.சி போடுவதற்காக எடுப்பார்கள். அவர்கள் அத்திரையரங்கிற்கு நிரந்தரமாக ஏ.சி போடுவதற்கு ரான்ஸ்போமர்கள் பொருத்த 75 லட்சத்திற்கு மேல் தேவைப்படும். அதைத் தவிர்த்து அவசிய தேவைகளின்போது எமது பெரிய இயந்திரத்தை ஏசி போடுவதற்காக பயன்படுத்துகின்றனர்.

# போருக்குப் பின்பான தமிழ்ச் சமூகம்

பரபரப்பும் போட்டியும் நிறைந்துள்ள நவீன உலகில் தகவற் தொழினுட்ப விஞ்ஞானத்தின் அபரிமித வளர்ச்சி ஒருபுறம் மக்களது நாளாந்த வாழ்வியல் நகர்வை இலகுவானதாக்கினாலும் மறுபுறம் மனவியல் சார்ந்த பிரச்சினைகளும் முனைப்புப்பெற்று சமூகத்தை பீடை போல் கருவறுத்து வருவதனைக்காணக்கூடியதாக உள்ளது. தற்காலத்தில் வாழ்வியற் சக்கரத்தின் வேகமான சுழற்சிக்கமைவாக நமது வாழ்வில் கடந்து போகின்ற ஒவ்வொரு மணித்துளியையும் பயனுடையதாகவும் பெறுமதியானதாகவும் மாற்றுவதில் காலம் கழிகின்றது. இந்நிலையில் மனம் சார் மகிழ்ச்சியை தரவல்ல உறவுச் சங்கிலிப் பிணைப்பானது மெல்ல மெல்ல விடுபட்டு இப்பிணைப்புக்கு வலுச்சேர்க்கும் அன்பு, பாசம், கருணை, பக்தி, ஜீவ காருண்யம், மானிடநேயம், சகோதரத்துவம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று முதலிய இத்தியாதி பண்புக் கூறுகளின் நிலைத் திருப்பினை கானல் நீராக்கி விட்டன. கடந்த 30 வருடங்களாக முடிவுற்றுத் தொடர்ந்த யுத்தம், முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் முற்றுப்பெற்று பல வருடங்கள் கடந்தோடி விட்ட நிலையில் தமிழ் மக்கள் சமூகத்தில் ஏற்பட்டுள்ள உடல், உள ரீதியிலான ரணங்கள் ஆற்றொணா வலிசுமந்தவையாக அமைகின்றன. உடலியல் சார் பிரச்சினைகள் வெளிப்படைத்தன்மை பொருந்திய வகையினால் அவற்றை இனங்கண்டு ஆற்ற முடியும். ஆனால் உளம் சார்ந்த பிரச்சினைகளும் சமூகத்தினுள் ஆழ வேரோடியிருக்கின்றன. இப்பாதிப்புக்களை இலகுவில் இனங்காண்பதோ குணமாக்குவதோ கடினமாகும்.

**இவற்றினை நிவர்த்திக்கக் கூடியளவுக்கு மக்களிடத்தில் சாதகமான பிரதிபலிப்புகள் காணப்படுவதில்லை. காரணம் உளப் பாதிப்படைந்த ஒருவர் மருத்துவரிடம் சிகிச்சை பெறும் போது சமூகத்தின் மத்தியில் அவருக்குள்ள அந்தஸ்து தவறான கற்பிதத்தினால் அதி தாழ்ந்து போகக்கூடியநிலைகாணப்படுவதால் இலகுவில் இனங்காட்ட முன்வரமாட்டார். குடத்துள் விளக்குப் போல் மனதிலே அடர்ந்து அமிழ்ந்திருக்கும் வடுக்கள் கொந்தளித்து இறுதியில் மனித ஆளுமைகளில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் அபாயங்களை தவிர்க்க முடியாது போகிறது.**

போரின்போது ஏற்பட்ட உளப்பேரதிர்வின் காரணமாக பிற்காலத்தில்பாரியளவுஎதிர்மறையானவிளைவுகளை - சமூகப் பிறழ்ச்சிகளை எதிர்கொள்ள நேரிடும். சாதாரணமாக உள சமூக பிரச்சினைகளாக உருவெடுக்கும் போர் வடுக்கள் பின்னர் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் நாறடித்துவிடும். இன்று வேகமாக ஊடுருவிக் கொண்டிருக்கும்



கொலை கொள்ளை பாலியல் வன்கொடுமைகள் குறிப்பாக சிறுமிகள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்படும் பாலியல் வன்முறைகள் இளையோரிடத்தில் தலையெடுத்துள்ள மது போதைவஸ்து மற்றும் புகைத்தல் பாவனைகள் அதன் வழியான இன்னபிற சமூக விரோத செயற்பாடுகள் அனைத்துமே உள சமூக பாதிப்புகளின் நீட்சியாகவே பார்க்க வேண்டும்.

உள, சமூக பிரச்சினைகள் எனும் போது மனிதன் நெருக்கடியான - அசாதாரணமான சூழலுக்குள் பிரவேசிக்கும் போது மனரீதியாக ஏற்படும் எதிர்வினைகள் அவனது அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்போது, அதனை உள, சமூக பிரச்சினைகளாக கொள்ளப்படும். இப்பிரச்சினைகள் மிதமான உளக் கோளாறுகள் என்ற வகுதிக்குள்ளும் அடக்கம் பெறும். அதாவது பரீட்சை, வேலையில் ஏற்படும் நெருக்கீடுகள், அன்புக்குரியர்களது - உறவுகளின் இறப்புகள், குடும்ப வன்முறைகள், வறுமை மற்றும் யுத்தகால நெருக்கடிகள் குறிப்பாகச் சடுதியான இறப்புக்கள்,சொத்தழிப்புக்கள், சித்திரவதை, கைது -காணாமல்போதல், பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படல் போன்ற பல்வேறு நிலைமைகளால் உளரீதியாக ஏற்படும்கோளாறுகள் மன வடுவை ஏற்படுத்தும். இதன் விளைவாக ஏற்படும் சிக்கல் நிலைகள் மிதமான உளநோய்கள் ஏற்படுவதற்கு ஊக்கிகளாக அமைகின்றன.

மன நெருக்கீடு (Stress), பதகளிப்பு (Anxiety), எதிர்வினை மனச்சோர்வு (Reactive Depression) மெய்ப்பாடு - உளம் சார் உடல் நோய்கள் (Psycho Somatic Disorders) பாலியல் ரீதியான கோளாறுகள் (Sexual Disorders) நெருக்கீட்டிற்கு பின்னரான மனவடு (PTSD), ஆளுமைக் கோளாறுகள் (Personality Disorders) உளமாய நோய்(Psychosis) மற்றும் மது, புகைத்தல், போதைவஸ்துக்கு அடிமையாதல்(Substance Abuse) போன்றவற்றை உள- சமூக பிரச்சினைகளாக மிதமான உளநோய்களாக கொள்ளப்படுகின்றன. இத்தகைய பாதிப்புகளால் சமூக, பொருளாதார, பண்பாடு ஆகிய தளங்களில் ஏற்படும் பாதகமான விடயங்கள் பற்றி நோக்கினால் தனி நபர் என்ற ரீதியில் ஒருவருக்கு உளரீதியான பாதிப்புகள் நீண்ட காலத்திற்கு தொடரும்போது குணப்படுத்தவே கடினமான பாரிய எதிர் உளத்தாக்கத்திற்குட்பட்டு எதிர்காலமே சூனியமாக மாறக்கூடிய அபாயமுண்டு. அத்துடன் உடல்சார் நோய்களின் தாக்கமும் அதிகரித்து ஆயுளும் சுருங்கக்கூடிய ஏதுநிலைகளும் காணப்படுகின்றன. ஒருவரது உடல், உள ரீதியாக ஒன்றாக ஏற்படும் பாதிப்பானது தற்கொலை வரை இட்டுச்செல்லக்கூடிய நிலையுமுண்டு.

யுத்த சூழல் இளைய தலைமுறையினரையே அதிகம் பாதித்திருக்கிறது. அதாவது தொழில் அடிப்படையில் (நாட்டின் அபிவிருத்திக்கு) அதிகம் பங்களிப்பு செய்துவருகின்ற இளைஞர் யுவதிகளே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் சமூக வடுவை (Social Stigma) சுமக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படுகின்றனர். உதாரணமாக யுத்தகாலத்தில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுவோர் (முன்னாள் போராளிகள்) நமது சமூகத்தில் அவர்களுக்கோ அல்லது அவர்களது குடும்பத்திற்கோ எவ்வித மதிப்பையோ, கௌரவத்தையோ, அந்தஸ்தையோ பெறவில்லை மாறாக தீண்டத்தகாதவர்களாகவே பார்க்கப்படுகின்றனர் என்பது கண்கூடு. இதன் காரணமாக அவர்களும் அவர்கள் சார்ந்த குடும்பங்களும் சொல்லொணாத் துயரங்களை யுத்தத்திற்கு பின்பும் அனுபவிக்கின்றனர். உளரீதியாக இன்றைய தமிழ்ச்சமூகம் தொடுத்து வரும்நிழல்யுத்தத்தினால்பாதிப்படைவது நமது சந்ததியே என்கின்ற யதார்த்த நிலையை ஏனோ புரிய மறுக்கின்றனர். பொருளாதார ரீதியாகப் பார்த்தால் உள நிலை சார்ந்த ஊனமானது இளையோரிடையே அதிகரிப்பதனால் நாட்டின் நிலைபேறான அபிவிருத்திக்கு தடையாக அமைகின்றது. அத்துடன் பண்பாட்டு நிலையிலும் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக சமய கலாசார விழாக்கள் சடங்குகளில் பாதிப்புற்றோர்களது பங்களிப்பென்பது குறைவாகவே காணப்படும். ஒரு நாட்டின் வளர்ச்சி அபிவிருத்திக்கு

ஸ்ரீ. நதிபரன்.

இளையோரின் பங்களிப்பு முதன்மையானது. ஆனால் யுத்த நிலைமை இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை வெகுவாக பாதித்திருக்கிறது எனவே தனி நபரில் ஏற்படும் பாதிப்பானது அவரது எல்லையைக் கடந்து அவர் சார்ந்த குடும்பம், சமூகம், நாடு என்ற ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனலாம்.

இறுதிப்போர் தந்துவிட்டுச்சென்ற வலிசுமந்த ரணங்கள் அதனால் ஏற்படும் உளக் குமுறல்கள் மக்கள் மனங்களில் ஓயாது ஒ(வ)லித்துக் கொண்டிருக்கையில் அவர்களது மன வலிகளை உளப்பேரதிர்வால் உண்டான மனவடுவை ஆற்றுவதற்கான வழிவகைகள் பற்றி சிந்திக்க வேண்டிய தருணமிது. இல்லையேல் எதிர்காலத்தில் ஆக்க சக்தி குறைந்த ஆரோக்கியமற்ற சமூகத்தின் தோற்றத்தையும் ஆளுமை முதிர்ச்சியற்ற உளக்குறைபாடுள்ள குழந்தைகளது ஜனனத்தையும் தடுக்க முடியாது போய்விடும் என்பதை எல்லோரும் உணரல் வேண்டும். எனவே இவர்களது ஆக்க சக்திகளை நிர்மூலமாக்காது சுயேச்சையான உண்மையான உணர்வுகளை உணரத்தலைப்படுவதுடன் புறவயமாகவும் சுதந்திரமாகவும் சிந்திப்பதற்கான வெளியை தோற்றுவிக்க வேண்டும். இதன்போது தான் தமிழ்ச் சமூகம் எதிர்காலத்தில் புத்துயிர்ப்பு பெறும்.

### புதிய முகவரிக்கு எழுதுங்கள் ....

ஏனைய தொடர்புசாதனங்கள் பொது மக்களின் பிரச்சினைகள் பலவற்றை வெளிக்கொணரத் தயங்குகின்றனர். அல்லது திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்கின்றனர். அவ்வாறான விபரங்களை ஆதாரத்துடன் எமக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்.
புதிய முகவரி.
CAPS. இல 52.
பலாலி வீதி.
திருநெல்வேலி.



Rube
Jewellery
இங்கு 916 தங்க நகைகள் ready - made ஆக வாங்கவோ அல்லது oder கொடுத்து செய்து கொள்ளவோ முடியும். தங்கத்தை தரம் பார்க்கும் நவீன இயந்திரம் நம்மிடம் உண்டு.
227,229 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
021 221 6919, 0777 344 074
www.rubejewellery.com


HIGH QUALITY PRINTING
Light board
Normal Board
Banner Printing
Sticker Printing
Sticker Cutting
Vehicle Branding
Book Making
Posters
Brochures
Letterhead
Visiting Cards
Wedding Cards
Invitation Cards
Bill Book
Binding
Jeyasri PRINTERS
34, BROWN ROAD, JAFFNA. 021 221 9129


லது டிஜிற்றல்
வீடியோ அன் போட்டோ
அனைத்து வகையான வைபவங்களும் தத்துரூபமாக...
K.K.S Road, Innuvil. Tel: 021 224 1510 | 077 711 1009


வானவில்
டியிற்றல் வீடியோ
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்து தரப்படும்
உரிமையாளர்
த.யுகராஜ்
077 1077 091
வசந்தகிரி
கோணியடி வீதி,
கொக்குவில் மேற்கு
Face Book: vanavil digital video
Email: vanavildigitalvideo.blogspot.com


கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
Lowest Price
Best Quality
Fast Delivery
100% Satisfaction
Harikanan
PRINTERS OF THE NORTH
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T +94 21 222 2717|8
W www.harikanan.com
E print@harikanan.com
F harikananprinters


முற்போக்கான – சமூகம் சார்ந்த – பகுத்தறிவுள்ள
நூல்களை வாங்கவும் – இரவல் எடுத்துப் படிக்கவும்
ஒரு நூலகம்
படிப்பகம் புத்தகக் கடை
தொலைபேசி எண்: 021 221 7926
411, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
facebook: padippakam book
www.padippakam.com

UNIVERSITY OF CAMBRIDGE

**AMI** ASSOCIATION MONATESSORI INTERNATIONALE



No.360, K.K.S Road, Maruthanarmadam, Jaffna.
021 224 2910, 021 221 2911

# BIS | BOND International School

நாட்டின் பல பாகங்களிலும் தமது கிளைகளை கொண்டு இயங்கி வருகின்றது.
எமது மாணவச் செல்வங்களின் கல்வியை மேலும் மேம்படுத்துவதற்காக
யாழ்ப்பாணத்திலும் கால் பதித்துள்ளது.

- Preschool (Nursery, LKG, UKG, Pre Grade)
- Primary, Secondary & Advanced School
- ESOL English (University of Cambridge)
- ICT Starters (University of Cambridge)
- Spoken English (All Levels)
- National School English Syllabus From Grade 1 - 13
- National & International Examinations
- மாலை நேர பிரத்தியேக ஆங்கில, கணித விஞ்ஞான வகுப்புக்கள்.

# Selva Electrical



**No.21, Palaly Road, Thirunelvely**
**Tel: 021 321 8617, Fax: 021 459 0524**
**Email: selvahel@gmail.com**

# KIDS

## Computer Programs

15.07.2016
புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்



**CAPS**
52, Palaly Road, Thirunelveli. Tel: 077 386 7458